
# இலங்கையில் யாழ் மறைமாவட்டத்தில்
# நற்செய்திப் பணியாற்றிய
# ஐரோப்பிய திருக்குடும்ப அருட்சகோதரிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் யாழ் மறைமாவட்டத்தில்
# நற்செய்திப் பணியாற்றிய
# ஐரோப்பிய திருக்குடும்ப அருட்சகோதரிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title - Life of Our Missionary Sisters

Source - 'ARCHIVES' from Generalate ROME

Language - French

Translator - Sr.Bridget Mallika

Compiler - Sr.Justina

Edition - First Edition

Number of copies - 1000

Printer - JS Graphics, Jaffna.

Publisher - Holy Family Sisters of Jaffna Province, in grateful remembrance of the 150th death anniversary of Good Father.

Dedication - To Mother Xavier Marchand



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடல் கடந்து செல்வீர்" என்று
இறைவாக்குரைத்த நிறுவனர்



பீற்றர் பியன்வெனு நோஆய்
அவர்களின் விண்ணகப் பிறப்பின்
150ம் வருட நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



இலங்கையில் திருக்குடும்பச் சபையை
ஆரம்பித்த
வண. சேவியர் மாஷாங் தாயார்
அவர்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊற்றுக்களிலிருந்து நீர்த்துளிகள்



இலங்கை மண்ணில் திருக்குடும்ப சகோதரிகள் காலடி பதித்து 150வது ஆண்டினை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இந்நூல் வெளிவருவது சாலவும் பொருத்தமானதே. திருக்குடும்ப சபையின் ஆரம்ப நாட்களில் ஐரோப்பிய நாடுகளில் இருந்து வந்து பணியாற்றிய சகோதரிகளின் வாழ்வு, அவர்களது ஆன்மீக வாஞ்சை, பணித்தளங்களில் அவர்கள் சந்தித்த சவால்கள், வேதனைகள், சோத னைகள், சாதித்த சாதனைகள் போன்ற வற்றை முத்தான சொத்து என்னும் அரும் பொக்கிஷத்தில் கண்டோம்.

இந்நூலில் இங்கு பணியாற்றிய 29 ஐரோப்பிய துறவிகளின் வாழ்வியல் கதைகளை பார்க்கின்றோம். சுவையான விறுவிறுப்பான அனுபவங்கள் நிறைந்த இவர்களின் கதைகளை வாசிக்க ஆர்வம் கொண்டவர்களுக்கு இது உயிரூட்டும் ஊற்றுக்களிலிருந்து தெறிக் கும் நன்னீர் முத்துக்களாகும்.

இறைவன் மாத்திரமே என்னும் தாரக மந்திரத்தை தமதாக்கி இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் பாதம் பதித்து பாரிய விருட்சமாக எமது சபை இம்மண்ணில் வேரூன்றிக் கிளைபரப்ப காரணமான இந்த இலட்சியப் பெண்மணிகள் என்றுமே எம் நினை விலிருந்து நீங்கமாட்டார்கள்.

ஆழமான செபவாழ்வு, அர்ப்பணிப்போடு கூடிய பணிவாழ்வு, வேகரமான ஆன்ம வாஞ்சை, வீரத்துவமான பற்றறுத்தல், ஆழ்ந்த சபைப்பற்று, அசையாத உறுதிப்பாடு ஆகியவற்றோடு கூடிய அர்த் தம் நிறைந்த துறவு வாழ்வினால் அனைவராலும் கவரப்பட்ட இந்த வீர மங்கையரின் வாழ்க்கை வரலாறு, எம்வாழ்வுக்குச் சொல்லித் தருகின்ற பாடங்கள் பல. அவை எம்மை சபையின் ஊற்றுக்கு அழைத்துச் சென்று உந்துசக்தியளிக்கின்ற, முன்னேறிச்செல்ல ஊக்குவிக்கின்ற உன்னத அனுபவங்களாகும்.

எனவே இந்த ஊற்றுக்களிலிருந்து பருகி உயிரூட்டம் பெறு வோம். ஏனையோரையும் இந்த ஊற்றுக்கு அழைத்து வருவோம். வற்றாத ஊற்றாக இந்நீரூற்று என்றும் வழிந்தோட வழிசமைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் வாழ்வை நூல்வடிவமைத்து பாரம்பரிய சொத்துக் களை பக்குவமாக காத்து சபையின் நிகழ்கால வருங்கால தலை முறையினருக்கு விட்டுச்செல்லவும், அதன்மூலம் எம் வாழ்வை வளமாக்கும் கனவை நனவாக்க முனைப்போடு முயற்சிக்கின்ற எம் அன்புக்கும் பெரு மதிப்புக்குமுரிய அருட்சகோதரி யுஸ்ரீனா கணபதிப்பிள்ளை அவர்களின் கடின உழைப்பையும், சபைப் பற்றையும், தேடல்களின் ஆர்வத்தையும் பாராட்டி, நன்றி கூறி, அவரின் எழுத்துப்பணி மேலும் தொடர வாழ்த்தி நிற்கின்றேன்.

அருட்சகோதரி யோலன்ட் மத்தியாஸ்
யாழ் மாகாணத்தலைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



முத்தான சொத்து என்ற நூலில் எமது ஆதித்தாய்மார் எவ்வாறு எமது தாயக மண்ணின் மக்களுக்கும், திருச்சபைக்கும், நமது திருக்குடும்பச் சபைக்கும் நற்செய்தித் தூதுவர்களாக வாழ்ந்து பணியாற்றினார்க ளென்பதைப் படித்து அறிந்திருக்கின்றோம். ஆனால் அவர்களதும், அவர்களைப் பின் தொடர்ந்து வருகை தந்த அருட்சகோதரி களினதும் (sacred story) புனிதமான வாழ்க்கை வரலாறு பற்றி பெரும்பாலும் நாம் அறிந்திருக்கவில்லை.

நூற்றுக்கும் மேற்பட்ட ஐரோப்பிய அருட்சகோதரிகள் பிரான்ஸ், ஸ்பெயின், அயர்லாந்து, இங்கிலாந்து, ஒல்லாந்து, பெல்ஜியம், போலாந்து, ஜேர்மனி என்னும் நாடுகளில் இருந்து கிறீஸ்துவைத் தூதுரைக்கும் பணியாளர்களாக நமது ஈழத் திருநாட்டுக்கு வருகை தந்துள்ளனர். யாழ்-மண்ணில் தடம் பதித்து, யாழ், திருமலை, அநுரதபுரி, மன்னார் மறைமாவட்டங்களிலும் விரிந்து செறிந்து, குருநாகல், சிலாபம், கொழும்பு, கண்டி என்னும் மறைமாவட்டங் களையும் சென்றடைந்தனர். பலவர்ண மலர்களைப் போன்று, பற்பல நற்செய்திப் பணிகளால் இலங்கைத் திருச்சபைக்கும், சமுதாயத் திற்கும் நறுமணம் வீசி வாழ்ந்தனர். வாய்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்ட மரங்கள் இலை உதிர்க்காது, தக்க பருவத்தில் கனி கொடுப்பதுபோன்று வாழ்ந்து முடிவில்லா வாழ்வுக்குள் மூவொரு கடவுளோடு இணைந்து விட்டார்கள்.

1862ம் ஆண்டு தொடக்கம் 1985ம் ஆண்டு வரையும் இலங்கையில் - சிறப்பாக யாழ்-வடமாநிலத்தில் வாழ்ந்து பணியாற்றிய 29 அருட்சகோதரிகளின் சுருக்கமான வாழ்க்கைக் குறிப்புகளை உரோமாபுரியின் தலைமை இல்லத்தின் (ARCHIVES) ஆவணக் காப்பறையில் இருந்து பெற்றுக் கொண்டேன். இவையாவும் பிரான்சிய மொழியிலிருந்து தமிழில் மொழி ஆக்கம் செய்யப்பட்டு தொகுத்து எழுதப்பட்டது. இவர்களுள் 18 அருட்சகோதரிகளின் பிரதிமைப்படமும் இச்சிறிய நூலில் இணைக்கப்பட்டுள்ளது. இவர்களில் சிலரோடு உங்களில் சிலர் குழுக்களில் வாழ்ந்திருப்பீர்கள். அவர்களோடு ஒன்றாகப் பணி செய்திருப்பீர்கள். அவர்களைப் பற்றி அறிந்திருப்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம் கல்விகற்று உயர்ந்த நிலைக்கு உருவாக்கப்பட்டிருப் பீர்கள். இன்னும் சிலரின் தேவஅழைத்தலுக்கு இவர்களின் வாழ்வின் மாதிரிகையும், ஊக்குவித்தலும் அருளின் வாய்க்காலாக அமைந் திருக்கும்.

இவர்களின் தலைமைத்துவ ஆளுகை, ஆரம்ப நவசந்நியாச உருவாக்கம், வழிகாட்டல், நெறிப்படுத்தல் என்பவற்றால் இன்றும் திருக்குடும்பச் சபையில் பிரமாணிக்கமுள்ள சகோதரிகளாக நாம் வாழ்கின்றோம். இறையரசின் மேற்கொண்ட தாகத்தினால் சிலர் பிற மறைகளிலிருந்து உண்மையான இறைவனைத் தேடி திருச்சபை திருக்குடும்பச் சபையில் இணைந்து கொண்டு நற்செய்தி தூதுவர் களாக வாழ்ந்தார்கள். யாழ் மாகாணத்திலும் இலங்கையில் ஏனைய மறை மாவட்டங்களிலும் இன்னும் கடல்கடந்து சில நாடுகளிலும் தனித்துவத்துடனும், பொறுப்புடனும், அர்ப்பணிப்புடனும் மறைத் தூதுவர்களாகப் பணிபுரிய உருவாக்கினார்கள்.

இச்சகோதரிகள் அனைவரும் புனிதர்களின் உறவில் எம்மோடு ஒன்றித்திருக்கிறார்கள். இறைவனிடம் பரிந்து பேசி எங்களுக்காக வேண்டிக்கொள்கிறார்கள். இவ்வுலக வாழ்வில் காலம் கடந்தாலும், முடிவில்லா வாழ்வின் விண்ணுலக இன்பந்துய்க்கும் மாட்சிமையில் எமக்கு இன்று வாழும் புனிதர்களாக இறைவனைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே இவ்வுலகில் இவர்கள் விட்டுச்சென்ற இறை அரசின் மதிப்பீடுகள், சபையின் ஆன்மீக அருங்கொடைகள் என்னும் ஆணி வேரில் நாமும் அடித்தளம் இட்டு ஊற்றின் சாற்றில் உவந்து பருகி புத்துயிர்பெற்று வாழ்வோமாக!

முப்பொன் விழாவை (150) அண்மித்துப் பயணம் செய்யும் நாம் ஓட்டத்தை தடை செய்யாது விரைந்து செல்வோம்.

திருக்குடும்ப அன்னையின் அன்புப் புதல்வி
அருட்சகோதரி யுஸ்ரினா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MISSIONARY SISTERS 1862 - 1985

1. MOTHER XAVIER MARCHAND
2. SR. M. EMILY JEANSON
3. SR. M. JOSEPHINE BATTIDE
4. SR. ST. PRAXED BOUR
5. SR. ST. CLEMENT COUVERAUX
6. SR. ST. THEOPHILE HAVARD
7. SR. M. VICTORINE DUBOURG
8. SR. M. THEOPHANE HUCTIN
9. SR. M. SEBASTIAN O'BRIEN
10. SR. M. LOYALA O'DONOGHUE
11. SR. M. ANNUNCIATION HANNON
12. SR. M. ALOYSIA MAYER
13. SR. M. RAYMOND WRAFTER
14. SR. M. CONCEPTION ORIERRE
15. SR. M. CLARE Mc. CORMICK
16. SR. M. BAPTIST MAGNER
17. SR. M. SALOME REYNAERT
18. SR. M. COLUMBANUS KIRWAN
19. SR. M. THERESE MORGAN
20. SR. JEANE MARIE HAMPONERA
21. SR. M. PAULA DUFFY
22. SR. M. EVANGELIST Mc. EVOY
23. SR. M. FRANCIS XAVIER NIESYTO
24. SR. M. DE LA VISITATION WHELAN
25. SR. M. EUSTELLE HANKENNE
26. SR. ANTHONY JOSEPH MULVIHILL
27. SR. M. JOSEPHINE TYNEN
28. SR. MARY OF JESUS DICKINSON
29. SR. M. ALOYSIUS CONNOLLY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிடை மலர்ந்த மென்மலர்

## (இலங்கையில் திருக்குடும்ப சபை ஸ்தாபகி சங் மதர் சேவியர்)

## Mother Xavier Marchand - Zelie

சேலி மார்ஷாங் பளிங்குள்ளம் படைத்த ஒரு கிராமப்புறப் பெண். தன் இனிய சுபாவத்தாலும், இன்சொல்லாலும் தன் காலத்து இளம் பெண்களைத் கவர்ந்தவள். இளம் கிறீஸ்தவ பெண்கள் ஒன்றியத்தின் மூலம் நீதி, சமாதானத்திற்காக நீண்ட காலம் உழைத்தவள். இவள் பிரான்சின் தென் கோடியிலுள்ள போர்டோ என்னும் நகரில் 1822ம் வருடம் மார்கழி 6ம் நாள் திரு. திருமதி மார்ஷாங் தம்பதிகளின் இரண்டாவது குழந்தையாகப் பிறந்தாள். இளமையிலேயே வயதிற்கு மிஞ்சிய அறிவு, மனோபலம், கடவுள் பக்தியிற் சிறந்து விளங்கினாள்.

### குடும்பம் என்னும் பள்ளியில்

மார்ஷாங் தம்பதிகள் போதும் என்ற மனத்துடன் இல்லறம் நடத்திய இறை பக்தர்கள். உழைப்பால் உயர்ந்தவர்கள். விடாமுயற்சியும் காலத்தை கண்ணென மதித்துக் கருமமாற்றும் இயல்புடையவர்கள். இரு பெண் குழந்தைகளும் தங்களைப் போன்று சொந்த உழைப் பைக் கொண்டு நல்லறம் நடத்த வேண்டுமென விரும்பினர். குழந்தை களின் சிறப்பாற்றல், விருப்பத் தேர்வுக்கேற்ற தொழிற்பயிற்சியும் அளித்தனர். சேலி தையல் கலையில் தேர்ச்சி பெற்றாள். போர்டோ வின் செல்வச் சீமாட்டிகள் தமது ஆடை அலங்காரத்திற்கும், நவநா கரிக உடைக்கும் சேலியையே நாடினர். ஓய்வு நேரங்களில் ஏழைகள், நோயாளிகளை வீடுகளில் தரிசித்துக் குடும்ப முதுசமாக கிடைத்த இறை விசுவாசம், அன்பு நிறைந்த ஆறுதலை அவர்களுக்கு அளிப்பாள்.

### மனம் கவர்ந்த மணாளன்

சேலியின் திருமணம் என்னும் திருநாளைக் காணப் பெற்றோர் விரும் பினர். அதற்காக பலர் போட்டியிட்டனர். என் இளமையுடன் கன்னிமை யையும் என்றோ கடவுளுக்குக் காணிக்கையாக்கி விட்டேன் என்ற மகளின் பதில் பெற்றவர்களைப் பேதலிக்கச் செய்தது. உணவோடு ஒழுக்கத்தையும், அறிவோடு இறையன்பையும் ஊட்டி வளர்த்தவர்கள் அவர்களே. வேதனை உலையில் வெந்து கொண்டிருந்த நிலையி லும் பலிக்கென வளர்த்த ஆட்டைப் பலி செய்வதே முறையென உணர்ந்து கொண்டனர். ஆண்டவன் திட்டத்திற்கு அடிபணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளுக்கு அமைதியும் ஆசீரும் வழங்கினர். 1844ம் வருடம் தை மாதம் 18ம் நாள் திருக்குடும்ப சபையின் கல்விப் பணிபுரியும் கிளையாகிய அமலோற்பவ மரியின் நவசந்நியாச இல்லத்தில் சேலி ஓர் விண்ணப்பதாரியாகப் பிரவேசித்தாள்.

## வாழுமுன் வரலாறு

சபைத் தலைவிக்கோ, சகோதரிகளுக்கோ சேலி புதியவளல்லள். கிறிஸ்தவ இளம் பெண்கள் இயக்கப் பொறுப்பு திருக்குடும்பக் கன்னியர் வசம் ஒப்படைக்கப்பட்டதிலிருந்து, சேலியின் நேரிய சுபாவம், ஆழ்ந்த இறை விசுவாசம், உறுதியான தீர்வு, தியாக வாழ்வு அனைத்தும் அவர்கள் அனுபவித்தறிந்தவையே. எனவே ஆறுமாத காலக் கிட்டிய ஆயத்தத்தின் பின்பு 1844 ஆனித் திங்கள் 4ம் நாள் சபை நிறுவுனர் அருள்திரு பீற்றர் பியன்வெனு அடிகளிடமிருந்து திருவுடைச் சடங்கின்போது, ஏனைய சகோதரிகள் ஐவரும் தாம் விரும்பிய பெயரைத் தெரிந்து கொண்டனர். சேலியும் தேவ அன்னை யின் பெயரைத் தெரிந்து கொண்டு, நிறுவுனரை அண்மித்த போது மகளே நான் உம்மை பிரான்சிஸ் சேவியர் என்று அழைக்க விரும்பு கின்றேன். ஏனெனில் உமது பாதுகாவலர் போன்று நீரும் நற்செய்திப் பணிக்காகக் கடல் கடந்து செல்வீர் என்றார். சேலி அன்போடு அப் பெயரை ஏற்றுக் கொண்டாள். பதினைந்து வருடங்களுக்குப் பின் நிறைவேறவிருந்த இந்த இறைவாக்கு அன்று சேலிக்கு அவ்வளவு காத்திரமானதாய் தென்படவில்லை.

## வசந்தமும் வரட்சியும்

எயாவோல்ட் என்னும் சிறு நகரில் பணிபுரியும்படி திருக்குடும்ப கன்னியரை அந்நகர மக்கள் அழைத்தனர். சிறப்பாக அங்கு ஏழைச் சிறுவரின் கல்வி, மறைவாழ்வு இவற்றைக் கவனித்து வந்த செல்வி றோய் என்பவர் அப்பணியை கன்னியரே பொறுப்பேற்க வேண்டுமென வருந்தி அழைத்தாள். அழைப்பை ஏற்றுக் கொண்ட நிறுவுனர் 1844ம் ஆண்டு இப்புதிய பணிக்காக வீரத்துவமான அப்போஸ்தல வாஞ்சையுள்ள கன்னியர் நால்வரை தேர்ந்தெடுத்தார். அவர்களுள் நவசந்நியாசியான (சேலி) சிஸ். சேவியரும் ஒருவர், புதிய பங்கில் சிஸ். சேவியர் இறைவனுக்காகச் செபத்திலும், சேவையிலும் தம்மை முற்றும் கையளித்தார். "இறைவன் மாத்திரமே" வேறொன்றும் வேண் டியதில்லை என்ற தூய கொடையன்போடும், அப்போஸ்தல ஆர்வத் தோடும் ஓர் இறை தூதுவராகவே பணியாற்றினார். மக்களின் வேத னையிலும் கைகொடுத்துதவினார். ஒருவருட இறுதியில் தனது முதல் வாக்குத்தத்தம் செய்வதற்காக சிஸ். சேவியர் தாய் மடம் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எயாவோல்ட் மக்களோ சிஸ். சேவியரை மீண்டும் தம்மிடை அனுப் புமாறு தொடர்பாக விண்ணப்பித்தனர். மறு வருடம் சிஸ். சேவியர் மடத்துத் தலைவி என்ற பொறுப்போடு அங்கு அனுப்பப்பட்டார். பொறுப்பை ஒப்படைத்தவர்கள் வெகு தூரத்தில் இருந்தார்கள். எவரும் எதிர்பாராத பிரச்சினைகள் அவளை எதிர்நோக்கின. வாழ்வு முள்ளும் முரடும் நிறைந்திருந்தது. வேதனையும் வரட்சியும் சூழ்ந்த நிலையிலும் இவரது இதயம் "தேவன் மாத்திரமே" என்ற வசந்தத்தில் இளைப் பாறிக் கொண்டிருந்தது.

## சூழ்ந்து வந்த சூறாவளி

திருக்குடும்ப கன்னியரை எயாவோட்டுக்கு வரவழைத்த பேருபகாரி நோய்வாய்ப்பட்டாள். அதனால் தனது வீடு தளபாடம் வருவாய் அத்தனையையும் கன்னியருக்கே மரண சாதனமாக்கி விட்டாள். செல்வி றொயின் மரண செய்தி எட்டியதும் அவளின் ஆதனங் களையும் பொருள்பண்டங்களையும் தமதாக்கும் பொருட்டு உறவினர் திரண்டு வந்தனர். ஏமாற்றமுற்ற இவர்கள் தம் ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் சிஸ். சேவியரிலேயே கொட்டினர். சொல்லால் இம்சித்து அவமானப்படுத்தினர். கள்ள வழக்குத் தொடுத்து பொய்க் குற்றம் சுமத்தினர். தனியொருத்தியாய் உலை நடுவே புடமிடப்படும் பொன் போல் அத்தனையையும் ஏற்றுக் கொண்டாள். இத்தனை சோதனை நடுவேயும் இறையருள் என்னைக் கலங்கவிடவில்லை. என் மனச் சான்றும் அமைதியாய் இருக்கின்றது என்று கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இறுதி வரை நீதி கோரி போராடினார். போராட்டம் மாதக் கணக்காக நீடித்தது. எவ்வகை மனித ஆறுதலும் கிடைக் கவில்லை. கல்வாரித் தியாகத்தின் உச்சிவரை தைரியமாய் முன் செல்வேன் என்று சூழ்ந்து வந்த சூறாவளி மத்தியிலும் சுடர் வீசும் ஒளியாக இறுதிவரை விளங்கினார்.

## இறைவனின் சொந்த குமாரத்தி. எப்பணிக்கும் எப்பொழுதும் தயார்.

எதார்த்த வாதிகளை இந்த ஏமாற்று உலகம் சும்மா விட்டு வைப்ப தில்லை. இதற்கு சிஸ். சேவியர் விதிவிலக்கு அல்லர். எத்துன்பம் நேரிடினும் அனற்காற்றிடை வீசும் இளந்தென்றலாக விளங்கினார். இவரது விசுவாசமும் நேர்மையும் துன்ப உலையில் நன்கு புடமிடப் பட்டதன் விளைவாக 1849 ஐப்பசி 15ம் நாள் கிறிஸ்துவின் மீட்புப் பணியைத் தொடர்ந்தாற்ற திருக்குடும்ப சபையில் நித்தியமாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். தியாக வாழ்வில் கிறிஸ்துவைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வாரி வரை பின்பற்ற வேண்டும் என்பது இவரது பேரவா. இதனை முன் வைத்து எக்காலத்துக்கும், எவ்விடத்திற்கும், எப்பணிக்கும், எப்பொழுதும் தயார் என்னும் இறைவனின் சொந்த குமாரத்திக்குரிய மேலதிக வாக்குறுதியை 1852 ஆவணி 8ம் நாள் நிறைவேற்றினார். இவரது புனித வாழ்வின் ஓட்டத்தை கண்டு அகமகிழ்ந்த நிறுவுனர் இவரை நவகன்னியர் தலைவியாக நியமனம் செய்தார். ஆறு வருடங்கள் முழுமையான கையளித்தலுடனும், தெய்வபயத்துடனும் ஒப்படைக்கப்பட்ட பணியை இனிதே நிறைவேற்றினார். அத்தனை இளம் துறவிகளும் தம் தலைவியைப் பின்பற்றி "இறைவன் மாத்திரம்" என்ற உயர்ந்த அழைப்புக்குத் தயாராக்கிக் கொண்டார்கள்.

## கடல் கடந்த அழைப்பு

பெண் துறவிகள் இன்னும் சென்றடையாத இலங்கை தீவிலிருந்து அதிலும் யாழ் நகரிலிருந்து 1856ம் ஆண்டு முதல் தீருக்குடும்ப சபைக்கு அழைப்பு வந்து கொண்டே இருந்தது. அழைப்பு விடுத்த அமல மரித் தியாகிகளுக்கு இல்லை என்று கூற மனமில்லாவிடினும் தனது சபை ஓர் இளம் தளிர், உறுதி பெறட்டும் 'என்று காலம் தாழ்த்தினார் சபை நிறுவுனர். 1861ம் ஆண்டின் ஆரம்ப கட்டத்தில் அவர் மனம் தயாராயிற்று ஆனால் வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்தது போல் காலம் நிறைவுற்ற போது நிறுவுனர் காலமாகி விட்டார். இலங்கைக்கு அறுவர் குழுவுக்கு தலைமை தாங்கும் பொறுப்பு மதர் சேவியர் மேற் சுமத்தப்பட்டது. முதலாவது சபை முதல்வியின் இத் தெரிவையும், விருப்பத்தையும் தெய்வ திருவுளம் என மதர் சேவியர் ஏற்றுக் கொண்டார். வாழும் வயதில் நோயினாற் பலி கொள்ளப்பட்ட தமது மூத்த மகளின் இழப்பை ஒருவாறு தாங்கி நொந்து கொண்டிருக்கும் தனது வயோதிபப் பெற்றோரிடம் இதனை எவ்வாறு தெரிவிப்பது தள்ளாப் பராயத்தின் ஒரே ஒரு நம்பிக்கை (மதர் சேவியர்) இவர் மட்டும் தான். ஒரு கண்ணை இழந்தவர்களிடம் மறு கண்ணையும் கேட்டால் மதர் சேவியரின் மனம் வேதனையால் வெந்தது. பிரியாவிடை சொல்லும் காலம் நெருங்கியது. உங்களிடமும், என்னிடமும் கடவுள் ஒரு பெரிய தியாகத்தை கேட்கிறார். பிரான்ஸ் நகருக்கு வெளியே எனக்கு அழைப்பு வந்துள்ளது என்று மகள் கூறியபோது கண்களில் நீர் மல்கி பெற்ற மனமும் பிள்ளை மனமும் ஒன்றாக வெந்தன. அன்று விடை கூறியவர்கள் இனி என்றுமே காண மாட்டார்கள் என்பது மறை பொருளாயிருந்தது. காலவோட்டத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட இவ்வாறாப் புண்ணை இலங்கையிலிருந்து எழுதிய பாசக் கடிதங்களால் ஒருவாறு ஆற்ற முயன்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலை அடித்து மலை சாயுமா

இலங்கை புறப்பட வேண்டிய நாளும் நேரமும் அண்மித்துக் கொண்டிருந்தது. அன்பில் கட்டுண்டிருந்த உள்ளங்களை பிரிவுத்துயர் வாட்ட ஆரம்பித்தது. பெற்றவரை, பிறந்த மண்ணை ஒரே இலட்சியத்துக்காகத் தம்மை அர்ச்சனையாக்கிக் கொண்ட உடன்பிறவாப் பிறவிகளை, தலைவிகளைப் பிரிவது என்றால் அது பெரும் வேதனையும் சோதனையுமாகவே இருந்தது. மீட்புப் பணிக்காக எதையும் செய்யத் தயாராயிருந்த மதர் சேவியருக்கு பிரயாணம் என்றால் பொருந்துவதில்லை. அது ஓர் ஒவ்வாமை நோய் ஆக ஒட்டிப் பிறந்து உபாதித்து வந்தது. தரைப் பிரயாணமே தலையிடி தருகையில் இந்த நீண்ட கடற் பயணத்தை எப்படி எதிர் நோக்குவது. இதிவ்வாறிருக்க இலங்கையிலிருந்து கத்தோலிக்க பெண் துறவிகளுக்கெதிராக ஓர் கிறிஸ்தவ பிரமுகர் வெளியிட்ட பத்திரிகை பிரச்சாரமும் இவர்களை யடைந்திருந்தது. இதனால் முன் பின் அறியாத கடல் கடந்த பூமியில் தம் மக்களுக்கு என்ன நேருமோ என சபைத்தலைவி மதர் மேரி ஒவ் த குறோஸ் சிந்திக்கலானார். எது எப்படி நடப்பினும் அழைத்தவர் எம்மை வழிநடத்துவார் என்ற அசையாத மனவுறுதியை வெளிப்படுத்தினார் மதர் சேவியர். சுகமோ, சுவாத்தியமோ, பிரயாணமோ, பிரச்சாரமோ எதுவாயினும் தேவன் மாத்திரம் என்ற மனப்போக்கில் ஏற்பது என முடிவு செய்தார்கள். மதர் சேவியர் தலைமையில் சகோதரிகள் மேரி ஸ்ரனிஸ்லோஸ், மேரி லிகோறி, மாறி தெரேஸ், யோசவ், மேரி ஹெலன் ஆகிய ஐவரும் ஆயத்தமானார்கள். இறுதி மூன்று நாளையும் சபை நிறுவுனரின் கல்லறையண்டை தியான ஒடுக்கத்திற் செலவிட்டனர்.

## உயிர்ப் போராட்டம்

1862 புரட்டாசி 8ம் நாள் யாழ் ஆயர் வந். சமேரியா அ.ம.தி. அவர்களின் தலைமையில் சகோதரிகள் அறுவரும் வேறு நான்கு குரு சகோதரருடன் மார்செய்ஸ் துறை முகத்தை நோக்கி புறப்பட்டனர். அங்கு சில நாள் தங்கி கனடா என்ற கப்பலில் அலெக்சாந்திரியாவுக்குப் பயணமாயினர். கடல் ஒவ்வாமை நோய் மதர் சேவியரைச் சித்திரவதை செய்ததால் துறைமுகத்தை அடையும் போது நிற்கவோ, நடக்கவோ முடியாத நிலையில் வேதனையுற்றார். எனினும் மனவுறுதி தளரவில்லை. அப்போது சுவெஸ் கால்வாய் வெட்டப்பட்டிருக்கவில்லை. எனவே அலெக்சாந்திரியாவிலிருந்து கைறோ ஊடாக சுவெஸை அடைய 252 மைல்கள் தாண்ட வேண்டும். உடல்நிலை வழமைக்குத் திரும்பாத நிலையிலேயே பிரயாணத்தை தொடர்ந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48 மைல்களைச் சிறிய வள்ளத்திலும், 120 மைல்களை நீராவிக் கப்பலிலுமாகக் கடந்து கொண்டிருந்தனர். நைல்நதி நடுவே மதர் சேவியர் பயங்கரமான ஓர் அனுபவத்தைப் பெற்றார்.

கன்னியர்கள் நைல் நதியைக் கடந்து கைறோவிலுள்ள நல்லாயன் மடத்தை அடைந்து அங்கு சில நாள்கள் தங்கினர். சபை முதல்வி யின் வேண்டுகோள்படி பிரான்சிய கடற்படைக் கப்பல்களில் ஒன்றான "எக்கோ" இவர்களை இலங்கைக்கு கொண்டு செல்வதற்காக சுவெஸில் காத்து நிற்பதாகச் செய்தி கிடைத்தது. எனவே எஞ்சிய (84 மைல்) பாலைவனப் பயணத்தையும் ஆரம்பித்தனர். அக்காலத்தில் குறிப்பிட்ட பாலைவனப் பயங்கர வெயிலும் அனற்காற்றும் பயணி களின் உயிருக்கே உலை வைத்து விடுவது வழக்கம். திருக்குடும்ப எகிப்திய யாத்திரையை முன் வைத்தவர்களாய்ப் பொதிகளை ஓட்டகங்களில் ஏற்றி விட்டுத் தாம் கழுதைகளிற் பயணமாயினர். ஏழு இடங்களில் தரித்து இறைவன் இஸ்ராயேல் மக்களை வழிநடத் தியது போல் தம்மையும் வழிநடத்தி சென்றார் என்பதை அனுபவித்து உணர்ந்தார்கள். தாம் துன்புற்ற போதும் அதை வெளிக்காட்டாது சகோதரிகளை உற்சாகப்படுத்துவதில் மதர் சேவியர் கரிசனையாயி ருந்தார். வனாந்தரம் தான் இறையுறவுக்கும் உடன் படிக்கை வாழ்வுக் கும் உன்னத இடமென தென்பூட்டினர். உயிர் ஆபத்தின்றி அனை வரும் சுவெஸை அடைந்து ஐப்பசி 1ம் திகதி காத்திருந்த கப்பலில் ஏறிக் கொண்டார்கள்.

## செங்கடலைக் கடத்தல்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இக்கடலில் தாம் பிரயாணம் செய்யக் கிடைத்தமை இறைவனின் கொடை என்றே கருதினார்கள். சீனாய் மலை அதிசய மன்னா ஆபிரிக்கா அனல் கக்கும் வெயிலுக் கும் காற்றுக்கும் தப்பிவரும் காடைகள் இப்படி பல காட்சிகள் விசுவாசத்தை உறுதிப்படுத்தின. செங்கடல் சுவாத்தியத்தில் அனலி டைப் புழுப்போலத் துடித்தவாறு ஏடன் துறைமுகத்தை அடைந்தனர்.

## வாக்குத்தத்தப் பூமியை அடைதல்

ஏடன் துறைமுகத்தில் ஓரிரு நாட்கள் ஆறிக் கொண்டு பிரயாணத்தின் இறுதிக் கட்டத்தைத் தொடங்கினர். ஏடனிலிருந்து காலி துறை முகத்தை அடைய ஒன்பது நாட்கள் சென்றன. ஐப்பசி 19ம் நாள் எக்கோ காலி துறைமுகத்தை அடைந்தது. அன்று ஒரு ஞாயிற்றுக் கிழமை. மாலுமி உட்பட அனைவரும் நன்றிப் பெருக்கோடு இறை வனுக்குத் திருப்பலி செலுத்தினர். இவர்களின் வருகைக்காக காலித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமுகத்தில் காத்திருந்த மக்கள் அன்போடு வரவேற்றனர். கன்னியர் வருகை காட்டுத் தீ போல் தீவெங்கும் பரவியது. யாழ் ஆயரின் வேண்டுகோள்படி மேன்மை தங்கிய கவர்னர் மக்காத்தி அவர்கள் ஆங்கில அரசுக்கு சொந்தமான தமது "பேள்" என்னும் கப்பலில் அவர்களை 22ம் திகதி கொழும்புக்கு அனுப்பி வைத்தார்கள். கொழும்பில் கோலாகாலமாக வரவேற்கப்பட்டு சில நாள்கள் ஓர் ஆங்கிலேய கத்தோலிக்க பெண்மணியின் வீட்டில் தங்கினர். 31ம் திகதி அதே கப்பலில் யாழ் நகர் நோக்கி பயணமாயினர். 1862ம் ஆண்டு கார்த்திகை 2ம் நாள் யாழ் நகரை அடைந்தனர்.

## கரும்பு மனம் - இரும்புப் பிடி

1862ல் சங். மதர் சேவியர் தலைமையில் இலங்கை வந்திறங்கிய திருக்குடும்பக் கன்னியர் யாழ் 3ம் குறுக்கு தெருவிலுள்ள வாடகை வீடொன்றில் குடியமர்ந்தனர். வேறுபட்ட சூழல், சுவாத்தியத்தோடு அவர்கள் எதிர் நோக்க வேண்டிய வசதியீனங்களோ அனந்தம். சிறு மந்தைக்கு வழிகாட்டியாக எவ்வித வசதியீனங்களையும் மகிழ்வோடு வரவேற்பதில் மதர் சேவியர் முன்னணியில் நின்றார். "தேவன் மாத்திரமே" என்ற சபையின் அழைப்புக்கு உண்மையுள்ளவர்களாய் வாழும் வண்ணம் விசுவாசத்திலும் தியாக அன்பிலும் தமது குழுவை உருவாக்குவது தமது முதற் கடமை என அவர் உணர்ந்தார். நோயாளரும், பலவீனரும் இவரின் விசேட கரிசனையைப் பெற்ற போதிலும் எல்லோருக்கும் நம்பிக்கைக்குரிய ஒரு தாயாகத் தன்னை அமைத்துக் கொண்டார். இயல்பாகவே இரக்கம், அன்பு கொடைத்தன்மை வாய்ந்த ஒரு கரும்பு மனம் படைத்தவர். ஆனால் ஒழுங்கு கிரமம், சுய கட்டுப்பாடு, மனச்சான்றின் குரல் ஆகியவற்றில் நுகைந்து கொடுக்க முடியாத ஒரு வித விறைப்புத் தன்மையையும் கொண்டிருந்தார். தம்மைப் போல் எல்லோரும் வாழ வேண்டும் என்று ஆசித்ததால் பல தடவைகளிற் பிறரின் பெலவீனங்களையும் தவறுகளையும் கண்டு மனம் வருந்துவார். புண்ணிய வாழ்வில் இவர் எதிர்பார்த்த நிறைவும் பிரமாணிக்கமும் சிலருக்கு சுமையாகவும் அமைந்தன. அவ் வேளைகளில் 'தந்தையின் இல்லத்தில் எனக்கிருக்கும் பற்றுறுதி என்னைப் பட்சிகரித்து விட்டது' என்று கூறிச் சகோதரிகளிடம் மன்னிப்புக் கேட்பார்.

## ஒளி மயமான எதிர்காலம்

ஆன்மீக வாழ்வில் மதர் சேவியர் கடைப்பிடித்த வழிமுறைகளை ஆயர் சமேரியாவும், பிற்காலத்தில் ஆயர் பொஞ்ஜீனும் பாராட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் தமது நேரடி கண்காணிப்பாலும் ஆலோசனைகளினாலும் சபை அங்கத்தவர் விசுவாசத்தில் வீரியமாய் முன்னேற உதவி புரிந்தனர். முதல் மடம் என்பதாலும் தலைவியர் கடல் கடந்து வாழ்ந்ததாலும் மதர் சேவியர் தனிமரமாய் நின்று முடிவுகள் எடுக்க வேண்டிய கட்டங்களும் இருந்தன. அவ்வேளைகளில் சபையின் நோக்கு தனித்துவத்தைப் பேணி ஆயர்கள் பக்க பலமாய் நின்று ஆலோசனை வழங்கினர். கண்ணீரோடு விதை விதைப்பவர்கள் மகிழ்வோடு அறு வடை செய்கின்றார்கள் என்பதற் கொப்ப, மதர் சேவியரின் இடையறா முயற்சியின் நிறைவாக சபை அங்கத்தவர்களில் விசுவாசம், தியாகம், பரஸ்பர அன்பு, நம்பிக்கை ஆகியன நன்கு சுடர்விட்டொளிரத் தொடங்கின. இவ்வொளி காலப்போக்கில் இவர்களது அப்போஸ்தல பணி வாழ்வையும் பற்றிப் பிடித்தது.

## அப்போஸ்தலிக்க நோக்கில்

திருக்குடும்ப சபையினர் இலங்கைக்கு வந்தபோது யாழ் நகரில் 20 குருக்கள் பணியாற்றினர். விசுவாசிகள் தொகை 54,323 குழந்தை களில் 1222 பேர் மட்டும் ஏதோ ஒரு பாடசாலைக்கு அனுப்பப் பட்டனர். இந்நிலையில் மதர் சேவியரின் முதற் கவனம் தேடுவாரற்ற அநாதைக் குழந்தைகள்பால் சென்றது. அடிப்படை தேவைகளே யின்றித் தவித்த இக்குழந்தைகளுக்கென ஒரு வீட்டை வாடகைக்க மர்த்திக் கொண்டார். ஆரம்பத்திலே 40 குழந்தைகள் சேர்க்கப் பட்டனர். திருப்பாலத்துவ சபையின் உதவியுடனும் பிரான்சிய நல்லுப காரிகளின் நன் கொடையுடனும் அநாதை இல்லம் நன்கு வளர்ச் சியடைந்தது. பன்னிரு ஆண்டுகளாக திருமதி எவ். விளனகன், செல்வி கத்தறின் ஆகியோரால் நடத்தப்பட்ட ஆங்கில பாடசாலை 1863 தை மாதம் திருக்குடும்ப கன்னியர் வசம் ஒப்படைக்கப்பட்டது. மக்களுக்கும் சகோதரிகளுக்குமிடையே ஏற்பட்ட நல்லெண்ணமும், நல்லுறவும் காரணமாக ஏராளமான சிறுவர் பாடசாலைக்கு விண்ணப் பித்தனர். இதன் காரணமாக சுதேச - ஐரோப்பிய குழந்தைகளுக்கென ஒரு விடுதிச் சாலையை ஆரம்பித்தார். இங்கு வயதுக்கேற்ற ஒழுக்க நெறிகளும் உளவியல் அறிவும் அளிக்கப்பட்டு தூயவாழ்வுக்குப் பயிற்றப்பட்டனர். சுதேச குழந்தைகளுக்கென மற்றுமொரு வீடு வாடகைக கமர்த்தப்பட்டுச் சுயமொழிக் கல்வியூட்டப்பட்டது.

அடுத்து சமூக ஒடுக்கு முறையிலும் அடிமைத்தனத்திலும் சமய மூடப்பழக்கங்களிலும் உழன்று கொண்டிருந்த இந்த பெண்களுக்கு ஒழுக்க சமய நெறிப்பயிற்சி வகுப்புக்களை ஆரம்பித்தார்கள். மதர் சேவியர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட புனித சூசையப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிமனையில் சங்கீதம், ஓவியம், தையல்கள், பருத்தி, பட்டு, கம்பளி நூல்களிற் பின்னற் பயிற்சிகள், குழந்தைகள் உடை தயாரிப்பு, கடதாசி, சீலை முதலியவற்றால் அழகிய பூ வேலைகள், கோவிற் திருப்பணி உடைகள் ஆகியன பயிற்றப்பட்டன. ஆங்கில வகுப்புக்களுடன் திருமண ஆயத்த வகுப்புக்களும் நடாத்தப்பட்டன. இவ்வாறு சகோதரிகளின் பெரு முயற்சியால் கல்வியும், கலையும், சமூக மறைவாழ்வும் பெருமளவு வளர்ச்சியுற்றன

## விஷபேதியின் அட்டகாசம்

மருத்துவமும் சிகிச்சை முறைகளும் விருத்தியடையாதிருந்த அக் கால கட்டத்தில் விஷபேதி காலத்துக்கு காலம் தோன்றி உயிர்களை பெருமளவில் பலி கொண்டு வந்தது. ஏழுவருட இடை வெளிக்குப் பின் தலைகாட்டிய இந்நோய் 1862ல் பாஷையூரில் அதன் அட்டகாசத்தைப் புரிந்து கொண்டிருந்தது. அதே ஆண்டில் இலங்கை வந்திறங்கிய திருக்குடும்ப கன்னியர் இச்செய்தி கேட்டு கலங்கினர். அவர்களது பராமரிப்பிலுள்ள அநாதை குழந்தைகளின் நிலையோ மிகவும் பரிதாபமானது. வருமுன் காப்போனாக ஒவ்வொரு குழந்தை யின் போஷாக்கிலும் மதர் சேவியர் கவனம் செலுத்தினார். படிப்படி யாக நோய் நகரின் பல பாகங்களையும் ஆக்கிரமிக்கத் தொடங் கியது. செய்வதறியாது தம் குழந்தை செல்வங்களை காப்பாற்றும்படி கேட்டு மக்கள் விடுதிச்சாலையை நோக்கி திரண்டு வந்தனர். 1866 - 1867 இடைக் காலத்தில் மட்டும் 10, 210 பேர் பலியாயினர். பெருவாரியாய்ப் பற்றிப்படர்ந்த இந்நோய் அநாதைக் குழந்தை களையும் தாவியது. நோய் கண்ட அன்றே மூன்று குழந்தைகள் பலியாயினர். மற்றொரு வீடொன்றை வாடகைக்கு அமர்த்தி அறிகுறி கண்ட அத்தனை குழந்தைகளையும் அப்புறப்படுத்தி அவர்களது உயிருக்காக இறுதிவரை போராடினர்.

## சோதனை மேற் சோதனை

சுவாத்திய ஒவ்வாமையால் மதர் சேவியரின் வலக்கரமாய் விளங்கிய சகோதரி மாறி தெரேஸ் பிரான்ஸிற்கு திருப்பியனுப்ப வேண்டிய தாயிற்று. இதுவரை பிரான்சில் உள்ள உபகாரிகள் பலர் நன்கொடை யனுப்பி வந்தனர். 1870ல் நடைபெற்ற பிரான்சிய யுத்தம் காரணமாக சகல நன்கொடைகளும் நிறுத்தப்பட்டன. நாட்டில் பஞ்சமும், பசிப்பிணியும், நோயின் ஆக்கிரமிப்பும் மறுபுறம் பெரும்பாலான பெற்றோர் விடுதிச் சாலையிலிருந்து தம் பிள்ளைகளை பொறுப்பேற்க மறுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனை குழந்தைகளுக்கும் நேரக் கஞ்சி கொடுப்பதற்குக்கூட வழியின்றி மதர் சேவியர் கலங்கினார். 1870ல் பரி.தந்தை 9ம் பத்திநாதர் அநாதைகளுக்கெனச் சிறு தொகைப் பணம் அனுப்பி வைத்தார். அது எம்மாத்திரம். அன்றாடம் இறைவனின் பராமரிப்பு ஒன்றையே நம்பி வாழ்ந்தார். இந்த இக்கட்டான சூழ்நிலையில் இவர்களது மகிழ்ச்சியிலும் துயரத்திலும் சம பங்கேற்று ஆன்ம வழிகாட்டியாக ஒரு தந்தையாக தாபரமாக விளங்கிய யாழ் ஆயர் வந். சமேரியா அவர்கள் 23 தை 1868ல் மார்செயிஸில் காலமானார். இத் துயரச் செய்தி இவர்களை எதிர் நோக்கிய மற்றொரு பெரிய சோதனை எனலாம். 1869ல் மதர் சேவியரின் தந்தை காலமானார். இதைத் தொடர்ந்து அடுத்தடுத்து துயரச் செய்திகளே எட்டின. விஷபேதி ஒருவரொருவராகச் சகோதரிகளையும் பீடித்தது. வேலைப் பளுவோடும் வியாதியோடும் நலிந்து கொண்டிருந்த இவர்களுக்கு தவியாக புதிய ஆயர் வந். பொஞ்ஜீன் அடிகள் தம்மோடு மேலும் இரு சகோதரிகளைப் பிரான்சிலிருந்து கூட்டி வந்தார். 1871ல் சகோதரி மேரி ஸ்ரீவன் விஷபேதிக்குப் பலியானார். 1876 மார்கழி 5ல் சகோதரி மரிய யுஸ்ரலும் அவரைத் தொடர்ந்து சகோ.ஜீனும் பலியானார்கள். இங்ஙனம் சோதனை மேல் சோதனையால் புடமிடப்பட்ட மதர் சேவியர் தமது கடிதம் ஒன்றில் சிலுவையே அன்றாட அப்பம். அதுவும் ஓர் அந்நிய பூமியில் அதன் கசப்போ அதிகம்;... வருடம் முழுவதும் பலி கொடுப்பதனாலேயே கழிகின்றது. கல்வாரியின் பாதையில் ஆண்டவனை பின் தொடர்வது ஒன்றே இவ்வேளை எனக் குத் தென்பூட்டுகின்றது எனக் குறித்துள்ளார்.

## புனித இராயப்பரின் கன்னியர்

திருக்குடும்ப கன்னியரின் வருகையிலிருந்து சபையில் சேர ஏராளமான விண்ணப்பங்கள் வந்து கொண்டிருந்தன. விண்ணப் பித்தவர்களின் அடிப்படை அறிவு மிகவும் பரிதாபமாக இருந்தது. ஒரு சிலரைத் தவிர ஏனையோர் சுய மொழியில் எழுத, வாசிக்கவே இயல்பற்றிருந்தனர். இக்குறையை நிவர்த்தி பண்ண ஐரோப்பிய கன்னியர் தமிழில் தேர்ச்சி பெற வேண்டிய அவசியத்தை உணர்ந் தனர். எனவே புதிய அங்கத்தவரைச் சேர்ப்பதற்கு 3 வருடங்கள் தாமதித்தனர். இவ்வாறிருக்க தமது மேற்றிராசனத்தில் சுதேச கன்னியர் சபை ஒன்றை உருவாக்க யாழ் ஆயர் சமேரியா பேராவல் கொண்டிருந்தார். சுய மொழிக் கல்வியை வளர்ப்பதற்கென இச்சபை தனித்துவமாகத் தமது நேரடி மேற்பார்வையின்கீழ் இயங்க வேண்டுமெனவும் எண்ணியிருந்தார். 1865 தை 24ம் திகதி "புனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராயப்பரின் கன்னியர்" என்ற பெயருடன் புதிய கிளையின் ஆரம்ப உருவாக்கம் மதர் சேவியரால் ஆரம்பிக்கப்பட்டது.

## முரண்பட்ட கருத்துக்கள்

ஏற்கெனவே விண்ணப்பித்தவர்களுடன் ஆயரும் குருநாகலில் இருந்து 3 இளம் பிள்ளைகளைக் கொண்டு வந்து சேர்த்தார். மதர் சேவியரின் தாயன்பும், தெய்வீக பண்புகளும் புதிய அங்கத்தவரை மிகவும் கவர்ந்தன. சுயேச்சையாகச் சுற்றித் திரிந்த இவர்களுக்கு அமைச்சல், சுய மறுப்பு, தாழ்மை இவற்றின் மேன்மையை புரிந்து கொள்வது மிகவும் கஷ்டமாகவே இருந்தது. இறைவனும் ஸ்தாபகரும் தம்மிடம் ஒப்படைத்த பணி என்ற விசுவாசத்துடன் உருவாக்கத்தை தொடர்ந் தார். புதியவர்கள் நாளுக்கு நாள் சபை மனப் போக்கிலும் "தேவன் மாத்திரம்" என்னும் நோக்கிலும் வளர்ந்து வந்தனர். இவ் வேளையிலே தான் ஆயர் தம் விருப்பத்தை மதர் சேவியரிடம் வெளியிட் டார்கள். ஆயர், அவர்களிடம் விசுவாசமும் பேரன்பும் கொண்டிருந்த போதிலும் புனித இராயப்பர் கன்னியர் திருக்குடும்ப சபையின் ஒரு கிளையாக இருப்பதையே மதர் சேவியர் வலியுறுத்தினார். ஆயரோ அது தனித் துவமாகத் தமக்கு கீழ் இயங்க வேண்டும் என்றார். இம் முரண்பட்ட கருத்துக்களால் அன்புள்ளங்கள் இரண்டும் வேதனையுற்றன. இதன் இறுதி முடிவு அ.ம. தியாகிகளின் பொதுச் சங்கத்தின் முடிவு மதர் சேவியரின் சார்பாகவே அமைந்தது. இம் முடிவை புதிய ஆயர் வந். பொஞ்ஜீன் அவர்கள் பொதுச் சங்கத்திலிருந்தே இலங்கைக்கு அறிவித்தார்கள். தமது கடின உழைப்பிலும் வேதனையிலும் மலர்ந்த இலங்கை மலர்கள் எனக் கவனத்தோடும் கரிசனையோடும் இக் கன்னியரை மதர் சேவியர் உருவாக்கினார். நாளடைவில் இவர்கள் திருக்குடும்ப சபையில் இரண்டறக் கலந்த சபையுறுப்பினர். புனித இராயப்பரின் கன்னியர் வேறுயாருமல்லர், இவர்களே சுதேச திருக் குடும்ப கன்னியர் ஆவர்.

மதர் சேவியரை பொறுத்த வரை 1875ம் ஆண்டு சொல்லொண்ணாத் துன்ப துரிதங்களின் ஆண்டாகும். உயிருக்குயிரான சகோதரிகள் ஐவரை ஒருவர் பின் ஒருவராக இவ்வாண்டிற்தான் விஷபேதிக்குப் பறிகொடுத்தார்கள்.

## மலர்ந்த இதழ்கள் உதிர்ந்தன

இளந்தளிராக வளர்ந்து வந்த அநாதைக் குழந்தைகள் பலரை இழந்தாள். இராப்பகல் கண் துஞ்சாது கவனித்தும் சாவு அவர்களை வளைத்துக் கொண்டது. இப் பேரிழப்பும் வேலைப் பளுவும் மதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவியரின் உயிருக்கே உலை வைத்து விடும்போல் தோன்றியது. திடீரெனத் தனது ஞாபகம், புத்தி சுயாதீனம் தடுமாறுவதை அவளே உணர்ந்தாள். நாளா வட்டத்தில் மூச்சு விடுவதே கஷ்டமாயிற்று. நடமாட்டமோ, பேச்சோ இன்றி பாயும் படுக்கையுமானாள். ஒரு சில மாதங்கள் இந் நிலை நீடித்த போதிலும் விரைவில் பழைய நிலைக்கு திரும்பினாள்.

1877ம் ஆண்டு மீண்டும் விஷபேதி யாழ் நகரை ஆக்கிரமித்து ஆயிரக் கணக்கில் உயிர்களை பலி கொண்டது. இவ் வேளை மதர் சேவியரின் உடல்நிலை பலவீனமுற்றிருந்தது. எனவே விடுதி மாணவிகள், அநாதைக் குழந்தைகள், குழு சகோதரிகள், அமலமரித் தியாகிகள் அனைவரையும் யேசுவின் திரு இருதய அடைக்கலத்தில் ஒப்படைத்து விட்டு மன அமைதியுடன் இருந்தாள். அதிசயம் திரு இருதய அடைக்கலத்தில் ஒப்படைக்கப்பட்டவர்களில் எவரையும் அவ்வருடம் அவள் இழந்து விடவில்லை. யாவரும் காப்பாற்றப்பட்டனர்.

1878ம் ஆண்டு தை நடுப் பகுதியில் உடல்நிலை மிகவும் தாழ்ந்தது. மீண்டும் படுக்கையில் வீழ்ந்தாள். சகோதரிகளுக்கு வருடாந்த தியான ஒடுக்கம் ஆரம்பமாயிற்று. வலுவற்ற நிலையிலும் இத்தியான ஆயத்தத்தில் முழுப் பங்கெடுத்து தனது இறுதி உத்தரிப்புக்கான புதுத் தென்பை அடைந்து கொண்டாள். இலங்கைக்கு வந்து 16 வருடங்கள் உருண்டு விட்டன. இன்னும் தலைவிகளையோ, தரிசகர் களையோ காணும் பேறு கிடைக்கவில்லை. அவ் வாண்டு ஆவணி மாதத்தில் எதிர்பாராத ஒரு மகிழ்ச்சி செய்தி அவள் கையை வந்தடைந்தது. அமலமரித் தியாகியான அருள்திரு சுயியெ (Rev. Fr. Souillier) அவர்கள் தரிசகராக வருவது பற்றி அறிவிக்கப்பட்டது. அவள் அடைந்த பெருமகிழ்ச்சிக்கோ அளவில்லை. நன்றி பெருக் கோடு சபை முதல்விக்கு பின்வருமாறு எழுதினாள். தரிசகர் அவர்க ளைக் காண என் மனம் துடியாய்த் துடிக்கின்றது. அவரைக் கண்டதும் சக்கரியாஸ் பாடிய பாடலை நானும் முழு உள்ளத்துடன் பாடி இறைவனில் நித்திய துயில் கொள்வேன். ஐப்பசி 15ம் நாள் இச்செய்தி சபை முதல்வியை அடையும் போதே மென்மலர் தன் இறுதி இதழையும் முள்ளிடை உதிர்த்து விட்டாள். யாரை நோவது "போ" என்று அனுப்பி வைத்தவன் "வா" என அழைக்கையில் தாமதிக்க முடியுமா?

ஐப்பசி முற்பகுதியிலிருந்து இவளைப் பிடித்திருந்த சளிச்சுரம் சாவுக்கேதுவான தன்று என வைத்தியர் நிச்சயித்திருந்தார். விரைவில் குணமாகி விடுவாள் என்ற நம்பிக்கையில் சகோதரிகள் அன்போடு கவனித்து வந்தனர். 14ம் திகதி இரவு திடீரெனச் சுரம் அதிகரித்தது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையை அசைக்க முடியாது வேதனைப்படுத்தியது. முழு இரவு வேதனையின் பின் 15ம் திகதி காலை மீண்டும் நம்பிக்கை தென்பட்டது. அன்புக்குரியவர்கள் அனைவரும் சூழ்ந்து நிற்க வந். ஆயர் பொஞ்ஜீன் அவர்கள் இறுதிச் செபங்களால் அவளை ஆயத்தம் செய்தார்கள். ஆண்டவன் சித்தத்தை நிறைவேற்றுவதே தன் ஏக ஆவல் என அடிக்கடி உதடுகள் முணுமுணுத்தன.

இறுதியாக திருச்சிலுவையை முத்தமிட்டபடியே தனது நித்திய அர்ப்பண நாளில் யேசு மரி. என்று இறுதி மூச்சையும் பேச்சையும் முடித்துக் கொண்டாள்.

இலங்கை மண்ணிலே மதர். சேவியர் ஆரம்பித்து வைத்த தேவன் மாத்திரம் என்ற இனிய கீதம் இன்று வரை ஒலிக்கின்றது. எமது உயிருள்ள வரை அது ஒலித்துக் கொண்டே இருக்கும். மலரில் மலர்ந்த மலராக முள்ளிடை மலர்ந்த மென்மலர் எம்மவர் நெஞ்சங்களில் நிறைந்து வாழ்வாள். அவள் பணி எம்மில் நீங்காது மலரும்.

## மடல் சிந்தும் பரல்கள்

முதற் பெண் துறவியாக இலங்கை மண்ணில் கால் வைத்தது முதல் இறக்கும் வரை சுமார் 10 வருடங்களுக்குச் சபை தலைவிகள் எவரையும் பார்க்கவோ, பேசவோ மதர் சேவியருக்கு கிடைக்கவில்லை. கடிதத் தொடர்புகள் கூட மிக நீண்ட இடைவெளிக்குப் பின் அருமையாய் இடம் பெற்றன. இந்நிலையில் யாழ் ஆயரே எல்லாம் ஆக விளங்கினார். இவர்களால் வரையப்பட்ட மடல்கள் நம் சபையின் ஆரம்ப வரலாற்றைப் படைக்கின்றன.

### ஆயர் பொஞ்ஜீன் வரைகிறார்

மதர் சேவியர் அமைதிக்கு ஒரு நிலையான குன்றம். தனிமையோ, துயரமோ எவ் வேதனையிலும் அவரது அமைதி குலைந்ததை ஒரு கணம் தானும் நான் கண்டதில்லை. தனிமையை தனதாக்கிக் கொண்டு பிறருக்கு தண்ணிழல் வழங்குவார். பிறருக்கு நன்மை செய்து மகிழ்விப்பதையே அவரது ஏக ஆவலாக கொண்டிருந்தார்.

### ஓர் உத்தம துறவி

மதர் சேவியர் ஓா உத்தம துறவி. சபை ஒழுங்குகள் இறைவன் தந்த வழிகள் என்ற விசுவாசத்துடன் மிக நுணுக்கமாக அவற்றை அனுசரித்தார். அவ்விதமே சபையும் திருச்சபையும் தன்னிடம் கேட்டு நிற்கும் பணிகளையும் கடமைகளையும் பிரமாணிக்கமாய் நிறைவேற்றி வந்தார். எதையும் இறைவனுக்காக என்ற மனப்போக்குடன் நிறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுவதால் மகிழ்ச்சியும் ஒருவித தன்னம்பிக்கையும் இயல்பாக இவரில் வெளிப்படும்.

### தன்னிகரற்ற தலைவி

தன் மட்டில் நேர்மையும், சுயகட்டுப்பாடும் உடையவர். ஏனையோர் மட்டில் இரங்குமுள்ளம், பரிவு, மன்னிக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடிப்பார். அனைவரினதும் நம்பிக்கைக்குரியவராகத் தம்மை ஆக்கிக் கொண்டார். அருளின் வேலையை என்னென்பது. இயல்பாக நுகைந்து கொடுக்கமாட்டாத ஒருவித விறைப்புக் குணம் படைத்தவர்.

நாளுக்கு நாள் அருளுக்கு தம்மைத் திறந்து சுய கட்டுப்பாடு என்னும் பள்ளியில் சாந்தம், பொறுமை, இரக்கம், மன்னிப்பு ஆகிய பயிற்சிகளைத் தினமும் பயின்றே அடைந்து கொண்டார். மடத்து சகோதரிகள் இவரைத் தமது பொக்ஷமாக மதிக்கிறார்கள். இவர் களது சுமைகளைத் தாங்குவதில் நிறைவு அடைகிறார். விசுவாச வாழ்வில் அவர்களை ஊக்குவிப்பதையும் அவர்கள் அடைந்து வரும் முன்னேற்றத்தையும் நான் நேரில் காணக் கூடுமாயிருக்கின்றது.

### சிறந்த நிர்வாகி

வெவ்வேறு குணப்பான்மைகளை அவதானித்து அதற்கேற்பச் செயற்படும் சிறந்த நிர்வாகத்தைை மதர் சேவியர் கொண்டிருந்தார். அதி வேகமாய் ஒரு போதும் நடக்க மாட்டார். மனித ஆறுதலோ உதவியிலோ அதிகம் தங்கியிராது இறைவன் மேற் கொண்ட விசுவாச பலத்தினால் எதையும் சாதிக்கும் மன உறுதியையும் நம்பிக்கையையும் கொண்டிருந்தார். உருவத்தில் குட்டையானவர். ஆனால் அனைவரது உள்ளத்திலும் உன்னத ஸ்தானத்தைைப் பெற்று விட்டார். பிறருக்கு பணிவிடை புரியும் நேரம் தவிர ஏனைய நேரங்களில் எல்லாம் தான் ஒரு தலைவி என்ற எண்ணமேயின்றி வாழ்ந்தவர். என்னைப் பொறுத்த வரை மதர் சேவியரின் உதவியும் ஆறுதலும் எனக்கு எவ்வளவோ நிறைவு தருகின்றன.

### ஆயர் பொஞ்ஜீனின் இறுதி மடல்

வண. அருட் தந்தையர், துறவற சகோதரர், சகோதரிகளுக்கு.

யாழ் மறைமாவட்ட வளர்ச்சியில் எம்மோடு உடனுழைப்பாளியாக அரும்பாடுபட்ட மதிப்புக்குரிய மதர் சேவியர் அவர்களை 15.10.1878 அன்று ஆண்டவர் தம்மிடம் அழைத்துக் கொண்டார். இவரே இலங்கையில் முதலாவது சபை ஸ்தாபகி ஆவார். இவரின் ஞானமும், விவேகமும் வாய்ந்த நிர்வாகத்தின்கீழ் நாம் யாழ் திருச்சபை அடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியை அறிவோம். பெண்கள் கல்லூரி அநாதையில்லம், புனித இராயப்பரின் சுதேச கன்னியர் சபை, (இவர்களே இன்றைய சுதேச திருக்குடும்ப கன்னியர்) இவற்றின் தோற்றமும் நிறைவும் மதர் சேவியரின் கடின உழைப்பும் கையளிப்பும் என்பதை யாவரும் அறிவர். இறுதி 3, 4 வருடங்கள் நோயினால் அதிகம் உத்தரித்தார். அந்த வேதனைகளைக் கூட நம் யாழ் திருச்சபையின் வளர்ச்சிக் காகவே ஒப்புக்கொடுத்தார். இறப்பதற்கு நான்கு தினங்களுக்கு முன் ஆழமான விசுவாசத்துடன் ஒப்புரவு அருட்சாதனத்தை பெற்றுக் கொண்டார். இதற்கு முன் பரிசுத்த பூசுதலையும் பரிபூரண பலனையும் வழங்கினோம்.

தன்னை அனுப்பி வைத்த ஆண்டவனின் அழைப்பை ஏற்று நம்மை விட்டு பிரிந்த மதர் சேவியர் பெயரால் இறைவனுக்கு நன்றி கூற மறவாதிருப்போமாக. இறந்த நம் குருக்களுக்காக ஒப்புக் கொடுப்பது போல் மதர் சேவியரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஐந்து திருப்பலி களைப் பங்குகளில் ஒப்புக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

From the open tomb come forth
The cry Hodie mihi cras tibi
+ Chr. Bonjean O.M.I






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jeanson Zephirerine - Mother Marie Emillie

## மாறி எமிலி தாயார்

(இவவைப் பற்றிய விபரங்கள். Dossier, Archives மாறும்போது தொலைந்து போயிருக்கலாம்) சில தரவுகள் மட்டுமே உள்ளன.

செவ்றின் பிரான்சில் உள்ள Haute Marne என்னும் இடத்தில் Longchams இல் 1835 தை 1ம் திகதி பிறந்தார். 1852 பங்குனி 1ம் திகதி திருக்குடும்ப சபையில் சேர்ந்தார். (நல்ல பிதாவை இவவுக்கு நன்கு தெரியும்.)1852 புரட்டாசி 16ந் திகதி உடுப்புப் பெற்று கொன்செப்ஷன் கிளையில் மதா எமிலி என்னும் பெயர் பெற்றா. 1854 புரட்டாசி 30ந் திகதி முதல் வாக்குத்தத்தம் செய்தா. 1859ல் ஐப்பசி 5ந் திகதி நித்திய வாக்குத்தத்தம் செய்தா.1876 புரட்டாசி 28ந் திகதி இறைவனின் சொந்தக் குமாரத்திகள் கிளையில் அனும திக்கப்பட்டு இலங்கைக்குப் பணிசெய்ய அனுப்பப்பட்டா. 1878 - 1890 வரையும் யாழ்மடத்து 2ஆவது தலைவியாகப் பணியாற்றினா. 1907ல் பிரான்சில் உள்ள Toulouse இல் மாசி 4ந் திகதி இறந்து விட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Victoire Batide (Mother Marie Josephine)

## மதர் மாறி ஜோசபின்

மாறி யோசெப்பின் தாயார் 1841ம் ஆண்டு ஆவணி 9ந் திகதி Mayenne இல் உள்ள Gennes என்னும் இடத்தில் பிறந்தா. 1860 ஐப்பசி 31ல் எம் சபையில் சேர்ந்து 1866 பங்குனி 4ந் திகதி இறுதி வார்த்தைப்பாடு செய்து 1889 வைகாசி 30ல் இலங்கையில் இறந்தார்.

யோசேப்பின் தாயார் எனும்போது ஒரு சாந்தமான உருவம். நேர்மை, எளிமை கொண்ட ஆன்மா. தாழ்மை இறைவிசுவாசம் துறவற வாழ் வில் தியாக சேவை. ஆன்மாக்களின் மீட்புக்காக விவேகம், புத்தி கொண்ட ஆன்மீக வாஞ்சை தெரிகின்றது. இறைவன் இவவைத் தேர்வு செய்து ஓர் அந்நிய நாட்டுக்கு அழைத்துச் சென்று தனது மகிமைக்காகவும், அன்புக்காகவும் துன்புறவிட்டார்.

குழந்தைப்பராயம், இளமைப்பருவம் பற்றி அதிகம் தெரியாவிட்டாலும் அவவின் பெற்றோர் கிறீஸ்தவ வாஞ்சையுடையவர்கள். ஓர் உறுதி யான கல்வி கொடுக்கும் நோக்குடன் Ursuline சகோதரிகளிடம் ஒப்படைத்தார்கள். அங்கே அழைத்தலில் ஆர்வம் பிறந்தது. திருக் குடும்பத்தின் நம்பிக்கை கிளையில் நோயாளிகளைப் பராமரிக்கத் தன்னைக் கையளித்து 1861 வைகாசி 29ல் உடுப்புப் பெற்று Marie Josephine என்னும் பெயர் பெற்று Brest என்னும் இடத்திற்கு அனுப்பப்பட்டார்.

Mother St. Clare Moutte என்பவரின் மேற்பார்வையின் கீழ் இருந்தா. அங்கே ஒரு நவகன்னிகை போன்றிராது ஒரு துறவிபோல் ஒப்படைக் கப்பட்ட பணிகளை எல்லாம் திறம்படச் செய்தா. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பதற்கொப்ப அவவின் ஆன்மீக வாழ்வு உள்ளும் வெளியிலும் பரிணமித்தது. சிறிய வேலையிலும் பெரிய பிரமாணிக்கத்துடன் தெய்வீக அன்புடன் செய்து வானகப் பரிசுகளைப் பெற்றா. இவ்வாறு வாழ்ந்து புண்ணியத்தில் முன்னேற வழிகாட்டினா.

1867ம் ஆண்டு Brest என்னும் இடத்தை கொலறா நோய் தாக்கியது. இவ Pau என்னும் இடத்தில் பணிகளுக்குப் பொறுப்பாக இருந்தா. தன் தகுதி இல்லாத்தன்மையை உணர்ந்தபோது இறைவனின் உதவி கிடைத்தது.

ஒரு நல்ல கப்பலோட்டி இருக்கும்போது கப்பல் நன்கு செல்லும். அத்துடன் நல்ல காற்றும் வேண்டும் என ஒருவர் இவவுக்கு உற்சாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டினார். அவவின் உறுதியான தலைமைத்துவமும் சகோதரிகளின் நல்ல மனப்பான்மையும் சகோதர ஒற்றுமையும் கப்பலோட்டிக்கு நல்ல காற்றாக அமைந்தது. மடத்தை நாடி வருபவர்கள் அமைதி, அன்புச் சூழலைப் பெறுவதற்கு இரகசியம் காப்பாற்றும் தன்மை இருக்க வேண்டும். நாளை நம்முடையதல்ல. தேவபராமரிப்பு அன்றாட நிகழ்வுகள், அவற்றில் நல்லவற்றை விரும்புதல், இறை நம்பிக்கை என்று தலைவிகளால் உற்சாகம் ஊட்டி வளர்க்கப்பட்டா.

1870 புரட்டாசியில் யாழ்ப்பாணத்து பிரதிநிதித்துவ ஆயர் Bonjean ஆண்டகை, இலங்கையைப் பற்றியும் விசேடமாக குருநாகலில் உள்ள பணிகளைப் பற்றியும் எடுத்துக் கூற வந்தார். யாழ் சகோதரி கள் அங்கு சென்றாலும் அவர்களுக்கு ஒரு தலைவி தேவைப்பட்டது. Pau இடத்துத் தலைவியே இதற்கு நியமிக்கப் பட்டா. இவ போர்டோ வந்து ஒன்றுமே இதைப் பற்றித் தெரியாதிருந்தும் தலைவிகளுக்குப் பணிந்தா. குடும்ப உறுப்பினர்களுக்குப் பிரியாவிடை கூற அனுப்பப் படும்போது அவ அதை விரும்பவில்லை.

தன் பணிக்குச் செல்லத் தன்னை ஆயத்தப்படுத்தினா. அந்த வேளை யிலும் Pauline Machet தாயார் நல் வார்த்தைகளினால் உற்சாக மூட்டினா. பொன்ஜீன் ஆண்டகையும் இவவின் வரவினால் மகிழ்ச்சி அடைந்தார். ஐப்பசி 27ல் இறைவனின் சொந்தக் குமாரத்தியான வேறொரு சோதரியுடன் 'மார்செயிஸ்' இருந்து புறப்பட்டார்கள். அவர்களுடன் 4 ஆயர்கள் வந்தனர். காலித்துறைமுகம் வந்தபோது மற்றச் சகோதரி அயர்லாந்து போல் இருப்பதாகக் கூறினா. இவவுக்குப் பிரான்ஸ் போலத் தெரியவில்லை. "இறைவனே எல்லாம்" என மகிழ்ச்சி கொண்டார். குருநாகலில் 22 பிள்ளைகள் கொண்ட ஆங்கில வகுப்பு. அதில் பெரும்பாலானோர் புரட்டஸ்தாந்து. 12 பேர் சிங்களவர். ஒருவர் புத்தமதம். ஏனையோர் கத்தோலிக்கர். அங்கிலிக்கன் ஆயரும் இவவின் பொறுப்பான பணித்திட்டத்தில் மகிழ்ச்சி கொண்டார்.

1871 தை 5ந் திகதி அவவின் குழுவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்டது. இதனால் அவவுக்கு மகிழ்ச்சி. அந்த வேளையில் பொன்ஜீன் ஆயரும் தன் திட்டத்தை அவவுக்கு வெளிப்படுத்தினார். அத்திட்டங் களாவன குருநாகலில் நொவிஷியற் திறத்தல், சிங்களம், ஆங்கிலம் படிப்பித்தல், புத்த பிள்ளைகளைப் படிப்பித்து ஞானஸ்நானம் கொடுத் தல். இதற்கு ஒரு கொட்டில் போடுதல். அநாதைப் பிள்ளைகளின் பணி. இப்பணிகள் மடத்திற்கு ஆசீர்வாதம் கொடுக்கும்.

யோசேப்பின் தாயார் அதைக் கேட்டு புன்முறுவல் செய்தாலும், கட்டிடம் அமைப்பதன் கஷ்டத்தை உணர்ந்தா. ஒரு கதிரையையே ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் செல்வா. கோவிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடமே 2 பலகைகள் 4 தடிகள் வைத்து அமைக்கப்பட்டுள்ளது. எனினும் வானக உலக கொடைகள் நிரம்பியது. இதைப் பார்த்து பொன்ஜீன் ஆயர் சந்தோஷ மடைந்தார். Bonnat தாயாரும் உற்சாகம் ஊட்டினார். அன்பு செய்து கொண்டு உன்னால் இயன்றதைச் செய் என்ற புனித அகஸ்தீனாரின் வார்த்தையை நினைவுக்குக் கொண்டு வந்தா.

அவவுக்குத் துணையாக 2 ஐரோப்பிய சகோதரிகள் இருந்தனர். ஆங்கில வகுப்பில் French படிப்பித்தா. மேலும் சிங்களப் பாடசாலைக் குழு. நொவிஷியற் அநாதை இல்லம் - எல்லாம் மேற்பார்வை செய்தா. பொன்ஜீன் ஆயரின் திட்டப்படி புத்த பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு Honerine, Rita என்ற இரு அநாதைப் பிள்ளைகள் வந்தனர். அவர்களைத் தொடர்ந்து வேறு சிலரும் வந்தனர். 1874 தை மாதத்தில் 12 பேர் வந்தனர். அவர்களில் ஒருவர் திருமுழுக்குப் பெற்றார். மாசி 2 இல் 14 வயதுப் பிள்ளை வந்து கிறீஸ்தவளாக விரும்பினாள். அவளுக்கு "பொலின்" என்று பெயர் கொடுக்கப்பட்டது. Machet தாயார் பொறுப்பெடுத்தார்.

பின்பு இப்பணிக்கு வேறு சகோதரிகளும் வந்தனர். அப்போது குழச் சகோதரிகளுடன் சூழவிருந்த சிங்களவரும் மகிழ்ந்து வீட்டிற்குமுன் மாலைவேளையில் வாண வேடிக்கைகள் செய்தனர். எனினும் சில புரட்டஸ்தாந்து ஆட்கள் எதிராகக் கிளம்பினர். அப்படியிருந்தும் புத்த சமயத்தில் இருந்து வந்த 8 சிறிய கிறீஸ்தவ பிள்ளைகளிட மிருந்து 50 வருடத்தில் இலங்கையில் பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்கர் வருவதற்கு எம் சிறிய உழைப்பும், எம் அநாதைப் பிள்ளைகளின் பராமரிப்புமே காரணம் என மொழிந்தார் ஆயர்.

பணி இலகுவானதல்ல. ஆனால் இறைவன் எம்மால் முடிந்த தையே எம்மிடம் கேட்டு நிற்கின்றார். எமது கடமை முடிந்ததும் அமைதியாக இருந்து இறைபராமரிப்பில் எல்லாவற்றையும் விட்டுவிடுவோம் என்று R.P.Roullet அருட்தந்தை கூறினார். குழுவில் ஒரு சகோதரி மறியதிரேஸ் இறந்தபோதும் ஆயர் அவர்கள் ஆறுதல் கூறினார். 1879 மாசி மாதத்தில் திரு இருதயப் பக்தி அவர்கள் மடத்தில் ஆரம்பமானது. ஒவ்வொரு முதல் வெள்ளியும் சில கிறீஸ்தவர்கள் பங்கு பற்றினர்.

16 வருடங்களின் பின் அருட்தந்தை சுயியெ R.P.Soullier இவர்களைச் சந்திக்க வந்தது மிக்க மகிழ்ச்சி. ஒரு மாதம் இவர்களுடன் செலவிட்டு வருடாந்த தியான ஒடுக்கம் இவர்களுக்கும் கொடுத்தார். தை 9ந் திகதி யோசேப்பின் தாயார் ஒரு சுதேச சகோதரியை வென்னாப்புவா வுக்கு படிப்பித்தலுக்காக ஒரு அநாதைப் பிள்ளையுடன் அழைத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றா. பஸ், புகையிரதம், மாட்டுவண்டி பிடித்து 8 மணித்தியாலத்தின் பின் இடத்தை அடைந்தனர். அங்கு அடைந்ததும் செய்தி வென்னாப் புவாவில் மட்டுமல்லாது அருகேயுள்ள இடங்களிலும் பரவியதால் எல்லா இடங்களிலும் இருந்தும் அவவைப் பார்க்கவும் பரிசில்கள் வழங்கவும் கூடினர்.

4 நாட்கள் அவ்விடம் செலவிட்டு அங்கு நூற்றுக்கணக்கான கத்தோலிக்க சிறுவர் இருப்பதைக் கண்டனர். சுதேச சகோதரிகள் (St. Peter's sisters) தங்களை இறைவனுக்கு ஒப்புக் கொடுக்க ஆவலாக இருப்பதையும் கண்டு அங்கு ஒரு மடம் இருந்தால் எல்லாவற்றுக்கும் உதவுமெனக் கண்டனர். இளம் யுவதிகள் தங்களுக்கு உதவியாக வரும்படி கூறினர். அத்துடன் வந்த பிரயாணச் செலவையும் கொடுத்தனர். யோசேப்பின் தாயாரும் தன்னால் இயன்றளவு அவர்களின் அழைத்தலுக்கு உதவ முனைந்தார். பல வருடங்கள் சென்றாலும் அப்பிரயாணம் சிங்களவரில் பல துறவிகள் உருவாகக் காரணமாயிருந்தது.

1880இல் யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகிச் சென்றா. அவ வந்த அடுத்த நாள் கார்த்திகை 8ந் திகதி ஆயரால் நியமிக்கப்பட்ட Celeste Marchal தாயார் அவவின் இடத்துக்கு வந்தா. அங்கு வந்து சேர்ந்ததும் சிங்களம் படித்தா. கதைக்கப் பழகினா. தமிழ் பாஷை தெரியாது. மொழிபெயர்ப்புடன் குழுப்பணியிலும் நொவிஷியற்றிலும் வேலை செய்தா.

புதிய குழுத்தலைவி யாழ்ப்பாணத்திலும் அழைத்தலுக்கு உதவி செய்தா. கட்டிடம் காணாததால் 1882ல் லொத்தர் மூலம் பணம் தேடினர். அத்துடன் இறைவனின் ஆசி இல்லாவிட்டால் மனித உழைப்பு வீண் எனக்கருதி திரு இருதய பக்தியையும் தொடக்கினார். பொன்ஜீன் ஆயர் இதை ஆதரித்தார். பின்பு மாத இதழ்கள் சிங்களத்திலும் தமிழிலும் வெளியிட்டு எல்லா மிஷனறிமாருக்கும் வயது, சாதி கிறீஸ்தவர்கள் என்ற நிபந்தனையின்றிக் கொடுக்கப்பட்டது.

சேவியர் தாயார் இருக்கும்போது அழைத்தலுக்கு உழைத்தார். காலம் சரிவரவில்லை. மக்கள் இவர்களை நம்பவில்லை. அழைத்தல் வாழ்வு வெட்கம் எனக் கருதினார்கள். அடிப்படையான சபைகளைத் தொடங்கினார். 3 வகையான வகுப்புக்கள். ஆங்கில வகுப்பில் பயிலும் உயர்சாதி, அநாதைப் பிள்ளைகள், திருஇருதய வெளிவகுப்பினர். ஒவ்வொரு மாதமும் குருவினால் கோவிலில் ஒரு கூட்டம். ஒவ்வொரு கிழமையும் ஆசிரியரால் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1882 யூபிலி ஆண்டில் அதிகம் பேர் வந்தபடியால் யோசேப்பின் தாயார் சிலரை நோயாளிகள் பராமரிப்புக்கு அனுப்பி வைத்தார். இதன் வழியாக மக்களை மனமாற்ற முயன்றார்.

பின்பு நகரில் நெருப்புக்காய்ச்சல் நோய் பரவத் தொடங்கியது. அத்துடன் புயற்காற்று கட்டிடங்களைப் பாழாக்கியபடியால் அதிகம் செலவும் ஏற்பட்டது. கோவிலும் தனியாகச் சகோதரிகளுக்குத் தேவைப்பட்டது.

1888 வைகாசி மாதம் அவவின் உடல்நிலை சுகக் குறைவு காரண மாக பணிகள் நிற்பாட்ட வேண்டி இருந்தது. கடற்கரைக் காற்று தேவையாக இருந்ததால் Kayts க்கு அனுப்பப்பட்டா. 1889 வைகாசி வரை ஓரளவு சுகமாக இருந்தா. வைகாசி மாதம் 20, 21ந் திகதிகளில் தோட்டத்தில் உலாவி வரும்போது தன் பொருளாளர் (Econome) சகோதரியைக் கூப்பிட்டு திரு இருதயக் காட்சித் திருநாளுக்கு ஆயத்தம் செய்யும்படி கூறினா. 24ந் திகதி மீளவும் யாழ்ப்பாணத்தில் இருந்து கடற்கரை சென்று காய்ச்சல் கூடிவருவதைக் கண்டா. இயேசுவின் விண்ணேற்ற நாளன்று கடைசி அருட்சாதனங்களைப் பெற்று இறைவனடி சேர்ந்தார்.

கொழும்பில் இருந்து பொன்ஜீன் ஆயர் தனது அனுதாபச் செய்தி களையும், மெலிசான் ஆயர் தூர நாட்டில் இருந்தும் துயருடனும் சகோதரிகளின் துன்பத்தைப் பகிர்ந்தனர். போர்டோவிலும் யோசேப்பின் தாயாரின் பிரிவு இடிபோல் விழுந்தது. Marie de St. Sacrament அனுப்பிய செய்திகளும் போய்ச் சேரவில்லை. எனவே அவவும் அநாதை சிறுவர்களை நோக்கி அவ கடைப்பிடித்த புண்ணியங்களைக் கடைப்பிடியுங்கள் என்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Bour Marquerite - Mere Ste. Praxede
## பிறக்சீட் தாயார்

பிரான்சில் உள்ள (Metz) மெற்ஸ் மறை மாவட்டத்தில் (Diebling) டிபிளிங் என்னும் இடத்தில் மாகிறேற் 1857ம் ஆண்டு கார்த்திகை 7ந் திகதி பிறந்தார். தச்சுத்தொழில் செய்யும் Jean Nicholas, Margaret Fritz இவவின் பெற்றோராவார். இவவுக்கு 2 ஆண் சகோதரரும் 5 பெண் சகோதரிகளும் இருந்தனர். மூத்த சகோதரன் யுத்தத்தில் இறந்தார். மூத்த சகோதரி கடற்படையில் வேலை செய்தா. அவ்வேளை மாகிறேற் நவசந்நியாசத்தில் சேர்ந்து Lyon இல் வசித்து வந்தா. 2வது சகோதரி பெற்றோருடன் வசித்து வந்தா. 3வது சகோதரி Sr. Marie de St. Louise Bour சபை சொத்துக்களைப் பரிபாலிக்கும் குழுவில் அங்கத்துவம் வகித்தார். மாகிறேற் எல்லோரிலும் இளையவள்.

3-12 வயது வரை தேவபராமரிப்புச் சகோதரிகளின் பாடசாலையில் கல்வி பயின்று 12 வயதில் முதல் நன்மையும் அடுத்த வருடத்தில் உறுதிப்பூசுதலும் பெற்றுக் கொண்டா. பின்பு நவசந்நியாசத்தில் சேரும் வரை தனது சகோதரியுடன் அழகியல், தையல் கலையில் பணி புரிந்தா.

அவவின் நன்னடத்தை, சமயப்பணிகளில் ஆர்வம் என்பவற்றை அவதானித்த ஆன்ம குரு (Mangenot) மாஞ்னொ என்பவர் ஆன்மீக அழைத்தல் வாழ்வு இருப்பதை உணர்ந்தார். இவரே Metz உள்ள திருக்குடும்ப சகோதரிகளின் குழுத்தலைவிக்கு மாகிறேற்றை அறிமுகம் செய்து வைத்தவர். மாகிறேற் புதுநன்மை பெற்ற பிறகு ஏறக்குறைய 15 நாட்களுக்கு ஒரு முறை பாவசங்கீர்த்தனமும் திருநாள் ஞாயிற்றுக் கிழமைகளில் நன்மை எடுப்பதும் வழக்கம்.

மாகிறேற் நம்பிக்கை கிளையில் ஆர்வம் கொண்டமையால் அங்கே தனது நவசந்நியாசத்தை தொடர்ந்தா. 1874ம் ஆண்டு ஆனி 4ந் திகதி Royaumont என்னும் இடத்திற்கு வந்தா. அவவிடம் பக்தி நிரம்ப இருந்தது. சாந்த குணம், சமநிலை, புத்தி, காரணம்கூறல் காணப்பட்டது.

நோயாளிகள் மட்டில் கரிசனை, செய்து முடிக்கும் தகைமை, உறுதி என்பன பிற்காலத்தில் ஓர் உறுதியான நல்ல சகோதரியையும், நோயாளிகளைக் கவனிக்கக்கூடிய சகோதரியையும் முன்கூட்டியே அறிவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1875 வைகாசி 23ந் திகதி நம்பிக்கை கிளையில் உடுப்புப் பெற்று Sr. Prudentienne என்னும் பெயரைப் பெற்றார். (பின்பு சிஸ். பிறக்சீட் என மாற்றினார்.) ஆனி மாதம் 11ந் திகதி Laval க்கு அனுப்பப்பட்டார். அவவின் பக்தி ஆர்வம் எல்லாரையும் கவர்ந்தது. 1876 புரட்டாசி 10ல் முதல் வார்த்தைப்பாட்டையும் கொடுத்தா.

மார்கழி 3ந் திகதி பரீசில் Cllichy clinic இல் மாற்றம் பெற்றார். அங்குதான் (Mere Angot) அங்கொத் தாயார் மாகிறேற்றை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்காக பல குழுவின் வேலைகளில் உருவாக்கம் கொடுத்தா. அங்கிருக்கும்போது தான் Sr. Praxede எனப் பெயர் கொண்டா.

1878ல் நெஞ்சு வியாதி ஏற்பட்டது. எல்லோருடனும் நன்றாகவும் குழுத்தலைவிகளுடன் நல்ல தொடர்பும் ஏற்பட்டது. பரீஸ் சுவாத்தியம் இவவின் உடல்நிலைக்கு உகந்ததாக இல்லாதபடியால் போர்டோவுக்கு அனுப்பி Angot தாயாருடன் ஒப்படைக்கப்பட்டா. (மருத்துவரின் ஆலோசனைப்படி) இவ மாகிறேற்றின் திறமைகளைப் பாராட்டி பெறுமதியாக்கக் கூடியவர். பின்பு 1879 வைகாசி 18ல் (Madaleine) மதலேன் தாயாருடன் ஒப்படைத்தாலும் அவவின் திறமைகளை வளர்த்து வருங்காலத்திற்கேற்ற ஒரு துறவியாக உருவாக்க வேண்டப்பட்டது. 1879 புரட்டாசியில் இலங்கைக்கு அனுப்பத் தேர்ந்தெடுக்கப்பட்டா. Bishop Bonjean இவ ஓர் நல்ல துறவியாக உரிய நேரத்தில் வருவார் என முன்மொழிந்தார். அவ்வாறே Batide தாயாரும் நல்ல பக்தி உள்ள சகோதரி என கூறினார்.

1881ல் நல்ல விவேகத்துடனும் அனுபவத்துடனும் துறவற குடும்ப உறவுடனும் இருந்த பிறக்சீட் தாயார் சில சகோதரிகளுக்கும் குருக்களுக்கும் தாதியாக (Nurse) இருந்தார். ஆயர் உருவாக்கிய சிகிச்சை நிலையத்தில் பணியாற்றினா. இவ தமிழ்க் குழந்தைகளையும் பராமரித்தா. இவை அவவின் தியாக சேவையைக் காட்டுகின்றன. அநாதை மடங்களின் பொறுப்பும் கிடைத்தது. சிறுவர்கள் மத்தியில் நன்கு பணியாற்றினா.

1886ல் Sr. Batide இன் சுகநிலை பாதிக்கப்பட்டதால் அவவுக்குத் துணை தேவைப்பட்டது. திறமைகள் உள்ள பிறக்சீட் தாயார் இந்தப் பதவிக்கு எடுக்கப்பட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1887ல் இடைக்கிடை களைப்பு ஏற்பட்டது. காலநிலை வேறுபாடு, வேலைப்பழு, தியாக சிந்தையுடன் பணிபுரிந்தாலும் வேலை அனுபவக்குறைவு. தமிழில் கதைப்பா. ஆங்கிலமும் சற்றுக் கதைப்பா. 1889ல் இவவின் தியாகசேவை தலைவிகளைக் கவர்ந்ததால் Batide தாயார் இறந்ததும் யாழ் மடத்தின் பொறுப்பை ஏற்றா. இவவில் தாாழ்மை, பயந்த சுபாவம் இருந்ததாலும் இறை பாதுகாப்பில் வாழ்ந்தா. 1889 ஆடி 31ல் ஆயர் Melizan ஆண்டகையால் தலைவிகளின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1890ல் பங்குனி 19ந் திகதி "இறைவன் மாத்திரமே" என்னும் தகுதி Title பெற்றுக் கொண்டா. இந்நிலை இவவை மீண்டும் உற்சாகப்படுத்தி சில சகோதரிகளினால் ஏற்பட்ட கஷ்டங்களை மேற்கொள்ள முடிந்தது.

1899 சித்திரையில் தலைவிகளால் பிரான்சுக்கு அழைக்கப்பட்டு அங்கு அறிவுரை, தியான ஒடுக்கத்தினால் புத்துயிர்பெற்று மீளவும் பணியைத் தொடர அருள்பெற்றார்.

1899 ஆனி 4ந் திகதி தனது 25வது யூபிலி விழாவை General House இல் கொண்டாடி எல்லோருடைய அன்பையும் பெற்றார். 1899 புரட்டாசி 24ல் இரு மிஷனரி சகோதரிகளுடன் இலங்கைக்கு வந்தாலும் தன் தலைவிகளை விட்டுத் தூர இருப்பதாக உணர்ந்தார்.

யாழ்ப்பாணம் வந்ததும் அவவின் சுகநிலை பாதிப்புற்றது. காய்ச்சலாக இரு நாட்கள் படுக்கையில் இருந்து சுகம்பெற்றா. வலது காலில் நோவு இருந்ததால் வேதனைப்பட்டா. கால்நோவு இருந்தாலும் முற்றாகக் குணமடையவில்லை ஒரு புண் ஏற்பட்டது. கவலையைக் கொடுத்தது.

1905 தொடக்க காலத்தில் இந்த நோய் குழு வேலைகளைச் செய்ய இடையூறாக இருந்தது. இதனால் தன் நிலையைத் தலைவிகளுக்கு தெரியப்படுத்தி அவர்கள் கூறுவதை ஏற்கத் தயாராக இருந்தா. அக்காலத்தில் தலைவிகளே இடமாற்றம் கொடுத்தனர். யூலன் ஆண்டகையும் (Mgr. Joulain) இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

1905 ஆனி 23ல் பிறக்சீட் தாயார் யாழ்ப்பாணத்தை விட்டு விலகி 2 நாள் அனுராதபுரத்தில் செலவிட்ட பின்பு பம்பலப்பிட்டியாவில் தனது சிகிச்சையை ஆரம்பித்தார். சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. இல்லாவிடில் நோய் எலும்புவரை சென்றிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை அருளால் சுகம் பெற்றா. நிதிப்பொறுப்பு அவவிடம் இருந்தாலும் சிங்கள அறிவு இல்லாதபடியால் எல்லாப் பணிகளையும் செய்யமுடியவில்லை.

1906 தொடக்க காலத்தில் பிறக்சீட் தாயாரின் சுகநிலை தேறியது. யாழ் மடத்துத் தலைவிக்கு அனுபவமிக்க ஒரு துணைச் சகோதரி (Assistant) தேவையாக இருந்தபோது தலைவிகள் இவரை நாடினா். இவா்களின் அழைப்பை ஏற்று யாழ் திரும்பினாா். சில மாதங்களின்பின் 1906 சித்திரை 9ல் 1st ஆக நியமனம் பெற்றா.

பிறக்சீட் தாயாரிடம் விசுவாச வாழ்வு, நோ்மை, எளிமை, உறுதி, தாராள அனுபவம், விவேகம் இருந்தது. தலைமைத்துவத்துக்குரிய பண்புகளும் இருந்தன. நற்சுகம் இல்லாவிடினும் "முதற்துணையாள் பொறுப்புடன் பொருளாளா், அனாதைக் குழந்தைகளின் பொறுப்பையும் 1909ல் பொறுப்பேற்றா.

பிரதிநிதித் தாயாராக இருந்தா. (Celest Marchal) செலஸ்ற் மாா்சா தாயாா் தனது பதவியை இராஜினாமா செய்தபடியால் தலைவிகள் பிறக்சீட் தாயாரைக் கேட்டபோது அவ அடிபணிந்து ஏற்றுக் கொண்டா. 1911 ஆனி 16ல் யாழ்ப்பாணத்தை விட்டுவிலகி எல்லாரின் கவலையை சம்பாதித்தாலும் அதே வேளையில் ஓயாத உழைப்பாளியாக இருந்தவா், தலைமைப் பொறுப்பை ஏற்றதால் எல்லோருக்கும் மூத்த சகோதரியாகவும் தாங்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டாா். பீரதிநிதிப் பொறுப்புடன் சோதனைகள் ஏற்படினும் ஆசீா்களையும் சம்பாதித்துக் கொண்டா.

பம்பலப்பிட்டியை அடைந்து அங்கே தங்கவேண்டிய சமயம் Sr. St. Paul de la Croix நெருப்புக் காய்ச்சலினால் இறந்துவிட்டா. மேலும் அதே குழுவில் உள்ள ஓா் இளைய சகோதரியும் அதே வியாதியினால் தாக்கப்பட்டா. மேலும் ஒரு சகோதரி Sr. M. Augustine lbald சுகமடைந்து விட்டா.

1911 புரட்டாசியில் பொதுச்சங்கத்துக்காகப் பரீஸ் சென்று அண்மைக்கால இழப்புக்களால் மிகவும் அமைதியாகக் காணப்பட்டா. பொதுச்சங்கத்தின் பின் நீண்ட பயணம் தொடங்கமுன் தன் குடும்பத்தையும் Anversல் இருந்த துறவற குடும்ப சகோதரிகளையும் சந்தித்து உள உறுதி பெற்றா. 1911 காா்த்திகை 5ல் இலங்கை திரும்பும்போது தன்னுடன் Sr. Aloysia Mayer ஐயும் Sr. Annunciation Hannen ஐயும் அழைத்து வந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1914 வைகாசியில் மார்சா தாயார் பிரான்சிற்கு அழைக்கப்பட்டபோது பிறக்சீட் தாயாரும் தனது புதிய பதவிக்குச் சில ஆலோசனைகள் பெற இவவுடன் பயணம் செய்தா. 1914 வைகாசி 31ல் கொழும்பில் இருந்து புறப்பட்டு ஆனி 17ல் மார்செயிஸ் துறையை அடைந்தனர். யுத்தம் காரணமாக General House (Valcarlos) வால்கார்லோஸ் என்னும் இடத்தில் தற்காலிகமாக இருந்தது. அங்கு நல்ல தாயாருடன் சில கிழமைகள் தங்கியபின் போர்டோ சென்று ஐப்பசி 18ல் யாழ் பணிகளுக்கு 2 ஆங்கில சகோதரிகளுடன் திரும்பினா.

1920ல் மீளவும் பிரான்சுக்கு பொதுச்சங்கத்துக்கு அழைக்கப்பட்டா. நூற்றாண்டு விழாவை போர்டோவில் கொண்டாடிவிட்டு சில கிழமைகள் குடும்ப நிலையத்தில் செலவிட்டபின் தலன்ஸ் என்ற இடத்தில் தலைவிகளுக்கான ஞானஒடுக்கத்தில் பங்குபற்றி விட்டு லூர்து நகருக்கு யாத்திரை செய்து ஐப்பசி 13ல் இலங்கை திரும்பினா. கொழும்பில் உள்ள ஆங்கில பாடசாலையில் பணிபுரிந்த செபஸ்தியன் தாயாருக்குப் பின்பு பணியில் தலைமைத்துவம் பெற ஒரு இடை நிறுத்தம் தேவைப்பட்டபோது இவ தற்காலிகமாக 1921 மாசியில் அங்கு நியமனம் பெற்றா.

எம் நல்ல தாயார் Marie di Nativityயின் மரணம் கார்த்திகை 21ல் பொதுச்சங்கத்திற்கு இவவை அழைத்தது. மார்கழி தொடக்கத்தில் லிசியில் உள்ள புனித திரேசாளின் கல்லறைக்கு யாத்திரை செய்து 30ந் திகதி கொழும்புக்குத் திரும்பினா.

மார்கழி 1922ல் செபஸ்ரியன் தாயார் பம்பலப்பிட்டியில் தலைமையை எடுத்ததால் இவ தற்காலிகமாக யாழ்ப்பாணத்துக்கு தலைவியை நியமிக்கும் வரை அனுப்பப்பட்டா. அவவுக்கு உள்நாட்டுத் தலைவிகளுடன் ஈடுபாடு கொள்வது இலகுவாக இருந்தது. 1923 புரட்டாசி, ஐப்பசியில் பம்பலப்பிட்டியா செல்லும் வழியில் பல கிழமைகள் Phlabite நோயினால் பீடிக்கப்பட்டு படுக்கையில் இருந்து மீளவும் சுகம் பெற்றா.

1924 சித்திரை, வைகாசியில் Influenza வினால் தாக்கப்பட்டு பெலன் குன்றியிருந்தா. அவவின் பொன் யூபிலியும் ஆனி 4ல் கொண்டாடப்பட்டது. எல்லா யாழ் சகோதரிகளும் சிறிய குழுக்களில் உள்ள சகோதரிகளும் பங்குபற்றினர். இத்தருணத்தில் இவவின் சிறந்த தலைமைத்துவத்தை வெளிப்படுத்துவது நீதியானதே.

யாழ் குழு (Europeans) பணியும் இவவுக்கு இருந்ததால் பணிச்சுமை கூடியிருந்தது. 1925 மாசியில் வென்னப்புவா சென்று சிலகாலம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்தா. அந்த வேளையில் Mother Sacred Heart உடன் இருந்தா.

1927ல் அவவின் சுகநிலை பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலையைக் கண்ணுற்ற தலைவிகள் வேறு ஒருவரை நியமிக்க எண்ணினர். இதையும் தாழ்மையுடன் ஏற்று யாழ் குழுவைத்தரும்படி கூறினா.

1928 தை 12ல் குழுத்தலைவியாக லியோனித் தாயாரால் நியமிக்கப்பட்டார். இவவின் இடதுகண் Glucoma நோயினால் பார்வை குன்றியது. வலது கண்ணிலும். அதே நோய், இரத்தோட்டம் பாதிப்பு. குழுப்பணி தொடர முடியாத நிலை.

1931ல் எல்லாப் பொறுப்புக்களிலிருந்து நீக்கப்பட்டாலும் முதல் துணையாள் என்னும் பதவியில் நீடித்தா. கடைசிக் காலங்களில் தன் வாாழ்வை செபத்திலும் துன்பங்களை அனுபவிப்பதிலும் செலவழித்தா. அவவின் வயது, நோய் காரணமாக அறையைவிட்டு வெளியேறாத நிலையிலும் தள்ளு வண்டியில் கோவில் சென்று வந்தா. 1937 ஆவணி 20ல் முழு அறிவுடனும் கடைசித் திருவருட்சாதனங்களைப் பெற்று 25ந் திகதி குழுச்சகோதரிகள் செபத்துடன் சூழ நிற்க ஆன்மா அவவை விட்டுப் பிரிந்தது. மரணத் திருப்பலியை Fr. R. Bizinen சுவாமி ஒப்புக் கொடுத்தார். பிறக்சீட் தாயார் 57 வருடங்களாக இலங்கையின் பணிக்குத் தன்னை அர்ப்பணித்தார். பல குழுக்களும் பணிகளும் அவவினால் தொடங்கப்பட்டவையாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COUVERAUX Marie - Mere St. Clement
## கிளமென்ற் தாயார்

பிரான்சில் உள்ள (Aisne) மாவட்டம் Amifontaine அமிவொன்ரன் என்னும் இடத்தில் 1865 மாசி 14ந் திகதி மாறி பிறந்தார். தொழிலாளியான Pierre Couveraux பியர் குவ்றோவுக்கும் (M. Rosalie Donay) றோசாலி டொனேக்கும் மகளாகப் பிறந்த இவர் மடத்திற்குச் செல்லுமுன் இருவரும் இறந்து விட்டனர். இரு ஆண் மூத்த சகோதரர் இவவுக்கு இருந்தாலும் அவர்களுடன் தொடர்பு கிடையாது. எங்கு இருக்கிறார்கள் என்பதும் தெரியாது.

9 வயதில் (Reims) றேம்சில் அவவின் அன்ரி, நம்பிக்கைக் கிளை சகோதரி Sr. St. Jean de la Croix இருந்த ஒரு வேலைத் தளத்தில் சேர்க்கப்பட்டா. அங்கு அவவுக்கு முதல் நன்மைக்கு ஆயத்தம் செய்யப்பட்டது. 11 வயதில் உறுதிப்பூசுதலும் பெற்றுக் கொண்டா.

ஒரு வருடத்தின் பின் 12 வயதில் தாயை இழந்தா. அவவின் தந்தை Our Lady of Liesse சகோதரிகளின் போடிங்கில் சேர்த்தார். அங்கு திருவருட்சாதனங்களை ஒழுங்காகப் பெற்று துறவற அழைத்தலுக்கும் ஆர்வம் காட்டினா. அப்போது வயது 14.

15 வயதில் தந்தையையும் இழந்தா. அவவின் சகோதரர் ஒருவர் இவவைப் பராமரித்தார். இவர் இவவை போடிங்கில் இருந்து எடுத்து மீளவும் Reims இல் (வேலைத்தளம்) St. Thomas இல் சேர்ந்தா. அங்கு சூசையப்பர் கிளைச் சகோதரிகள் பணியாற்றினர். அவவின் நன்நடத்தைப் பக்திப் போக்கை அவதானித்த அருட்தந்தை M. Detchevverry Holy Family யில் சேரும் அவவின் விருப்பத்தை ஆதரித்தார். இவவுக்குப் புதுநன்மைக்கு ஆயத்தம் செய்தவரும் வழிகாட்டியுமாக இருந்தவரும் இவரே. அனுமதியும் பெற்றார் அப்போது வயது 16. இதற்கு அவ ஆயத்தம் செய்தபோது சகோதரன் எதிர்த்ததால் 2 வருடம் காத்திருந்து தன் அழைத்தலில் உறுதி பெற்றா. அத்துடன் படிப்பையும் மேற்கொண்டா.

1883 பங்குனி மாதம் சகோதரன் அனுமதி கொடுத்தார். இவ Royaumont என்னும் இடத்துக்குச் சென்று தான் விரும்பியபடி Conception கிளையில் 1883 சித்திரை 25ல் சேர்ந்தா. சிறிய உருவம், சாந்த குணம், படிப்பித்தலில் விருப்பம், தையற் கலை, சங்கீதம், சித்திரம் இவற்றில் திறமை. ஆனால் உடல்நிலை பலவீனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1884 பங்குனி 20ல் Sr. St. Clement என்னும் பெயருடன் பரிசுத்த உடுப்பு பெற்றா. வைகாசி 1ந் தகதி போர்டோவுக்கு அனுப்பப்பட்டு அங்கு கல்விப் பயிற்சி பெற்றா. 1884 மார்கழி 23ல் நவசந்நியாச இல்லத்தை விட்டு வெளியேறி Tours-St Julienக்கு வந்து வகுப்பில் மேற்பார்வை செய்தா. ஒரு நல்ல துறவியாக வரவிரும்பி 1885 ஆவணி 23ல் முதல் வாக்குத்தத்தம் செய்தா.

1887ல் நல்ல உடல் நிலையில் இருந்தபடியால் (4ஆவது) மேற்படிப்பை மேற்கொண்டா. எளிமையான மறைந்த வாழ்வு இவவில் காணப்பட்டது. 1888 புரட்டாசி 4ல் நித்திய வாக்குத்தத்தம் செய்தா. 1889ல் இலங்கையில் பணி செய்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டா. தாராளமான உள்ளத்தோடு போர்டோவுக்கு வந்து தம் தலைவிகளோடு இருந்தா. ஆவணி 15ல் "இறைவன் மாத்திரமே" என்னும் நியமனத்திற்குத் தன்னை அர்ப்பணித்தா. புரட்டாசி 8ல் மார்செயி துறைமுகத்தில் கப்பல் ஏறி ஐப்பசி 11ல் யாழ் வந்து சேர்ந்தா.
தாதி வேலையும், பலவித வேலைகளுக்கும் உதவி செய்தும் மேற்பார்வையும் செய்தா. சுதேச நவகன்னியரின் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டா. தமிழ் தெரியாதபடியால் கஷ்டமாக இருந்தது. அவ பேசுவதிலும் பார்க்க அவவின் தியாக சேவையினால் சுதேச சகோதரிகள் அவவைப் புரிந்து கொண்டார்கள்.

பின்பு பிறக்சீட் தாயாருக்கு Assistant ஆகவும் யூலன் ஆண்டகையால் நியமனம் பெற்றா. 1894 தை 16ல் அதே வேளை ஆலோசகராகவும் இருந்தா. பின்பு இளவாலையில் உள்ள சிறிய நவசந்நியாச மடத்தின் பொறுப்பையும் ஏற்றா. இதற்காக 1895ல் யாழ் மடத்தை விட்டு விலகினா. பிறக்சீட் தாயாருக்குத் தேவையானபோது உதவி செய்தா.

1898 மாசியில் யாழ்ப்பாணத்தில் பிறக்சீட் தாயாருக்கு ஒரு துணையாளைக் கேட்டார். அதேவேளை கிளமென்ற் தாயாருக்கு தாயார் பதவியையும் இளவாலைக் குழுவில் (Assistant) எனவும் கேட்டுக் கொண்டார். தலைவிகள் இதை ஏற்றுக் கொண்டு 1898 பங்குனி 3ல் நியமனம் செய்தனர்.

1899ல் பிறக்சீட் தாயார் பிரான்சில் இருந்தபோது ஒருவிதக் கஷ்டமும் இன்றி தன் பணியைத் திறம்படச் செய்தா. புனித இராயப்பருடைய குமாரத்திகளுடன் புத்தியுடனும், பணிந்த மனதுடனும் தன் பணியைச் செய்தா. 1901ல் இவவின் தியாக சேவை அளப்பரியது. 1903ல் இவவிடம் எல்லாத் திறமைகளும் காணப்பட்டன. சந்நியாச வாழ்வுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கும் திறமை, அத்துடன் செய்து முடிக்கும் ஆற்றல் இராயப்பரின் குமாரத்திகளின் பணிக்கு எதிர்காலத்தில் ஒருவரை உறுதி செய்தது.

1904 வைகாசி 10ல் "இறைவன் மாத்திரம்" எனும் கிளைக்கு நியமனம் பெற்றா. தலைவி யாழ் விஜயம் செய்தபோது பிறக்சீட் தாயாருடைய இடத்துக்குப் பதிலாக இவ பணி செய்யக் கூடிய தகைமையைக் கண்டா. தமிழ்ப் பணிகளின் பொறுப்பையும் பெற்றா. 1905 சித்திரை 3ல் இளவாலைக் குழுத்தலைவிப் பொறுப்பையும் முதல் தலைவிக்குத் தமிழ் கிளைக்குத் துணையான நியமனத்தையும் (Assistant) பெற்றா. இப்பதவிகள் நவகன்னியர் பொறுப்பைத் தடுக்கவில்லை. அதேவேளை பல நவகன்னியரும் இருந்தனர்.

1910 (D'Abadie) தாயார் இலங்கைக்கு விஜயம் செய்தபோது கிளமென்ற் தாயாரில் புத்தி, சக்தி, பணி ஆற்றல் இருப்பினும் முதிர்ச்சி குறைவாக இருப்பதைக் கண்டார். அத்துடன் உடல் நிலையும் குன்றிக் காணப்பட்டது. எனவே அவவுக்கு ஒப்படைத்த பணியைத் திறம்படச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. 1908 – 1911 குழுத்தலைவியாக இருந்தா. பின்பு 1912ல் தியோப்பில் தாயார் நவசந்நியாசத்தைப் பொறுப்பேற்றா. அதேவேளை கிளமென்ற் தாயாருக்கு தமிழ்ப் பிள்ளைகளின் பொறுப்பு. பின்பு பாடசாலைத் தரிசிப்பையும் ஏற்றுக் கொண்டா.

1914 ஆவணி 2ல் இளவாலையை விட்டு விலக தலைவிகள் விரும்பினாலும் 1915 பங்குனியில் பரீட்சைகள் முடிந்தபின் வெளியேறினா. Celeste Marchel தாயார் இலங்கையை விட்டு சென்றபோது கிளமென்ற் தாயார் ஆலோசகர் பட்டியலில் சேர்க்கப்பட்டதால் சபை மட்டில் கொண்ட நம்பிக்கையால் அவ உறுதியடைந்தா.

1915 சித்திரை 8ல் கிளமென்ற் தாயார் இளவாலையை விட்டு வெளியேறினார். இது சிறிது தாக்கம் ஏற்படுத்தியதால் சில கிழமைகள் நுவரெலியாவில் ஓய்வெடுத்து பின்பு கொழும்பில் இருந்தா. இதனால் உடல்நிலை தேறியது. அவ்வேளை சக்கிறிஸ்ரி வேலை செய்தா. கொழும்பில் இருக்க விரும்பினாலும் முடியவில்லை.

பின்பு வென்னப்புவா சென்று (1916 ஆவணி) ஐப்பசி மத்தியில் கொழும்பு திரும்பி சக்கிறிஸ்ரி வேலையுடன் French படிப்பித்து வந்தா. 1917 பங்குனியில் கிளமென்ற் தாயார் அனுராதபுரத்துக்குச் சென்று மொக்ளெ (Mockler) தாயாருக்கு உதவியாக இருந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் தெரிந்தபடியால் அங்கு உதவி செய்யக் கூடியதாக இருந்தது. 1918 சித்திரையில் யாழ்ப்பாணத்துக்கு 1st Assistant ஆகவும் அநாதைப் பிள்ளைகளுக்குப் பொறுப்பாகவும் அனுப்பப்பட்டா. நல்ல உடல் நிலையோடு இருந்து பாடசாலை (தமிழ்) தரிசிப்பில் நன்கு ஈடுபட்டா. 1919 கார்த்திகை 19ல் யாழ் குழுத்தலைவியாக நியமிக்கப்பட்டா.

1922 நல்ல தாயார் மறிய டெலா நற்றிவிற்றி பிரான்சில் சுகஸ்தான குடும்ப நிலையத்துக்கு ஓய்வுக்காக அனுப்பினா. 1922 சித்திரையில் செபஸ்தியன் தாயாருடன் போர்டோ சென்று ஆடி மாதத்தில் பாரிசில் குழுத்தலைவிகளின் ஞானொடுக்கத்தில் பங்கு பற்றினார்கள். பின்பு சில கிழமைகள் Reims இல் தன் குடும்பச் சகோதரர்களைச் சந்தித்து ஆவணி மாதத்தில் போர்டோ திரும்பினா. லூர்து கெபிக்கு யாத்திரை செய்து ஐப்பசி 21 இல் இலங்கை திரும்பினா. சபைத் தலைவி அனுராதபுரத்திற்கு அனுப்பினா. அங்கு கார்த்திகை 25 இல் குழுத்தலைவியாக நியமிக்கப்பட்டா.

1924 ஆவணியில் மலேரியாவால் தாக்கப்பட்டு மூளைக்காய்ச்சலால் வருந்தினா. அறிவிழந்த நிலையில் பம்பலப்பிட்டியாவுக்கு அனுப்பப் பட்டா. பின்பு சிறிது சிறிதாகத் தேறி ஐப்பசிக் கடைசியில் நுவரெலியா சென்று 2 மாதம் தங்கி பின்பு யாழ் சென்று மார்கழி 23 இல் ஓய்வு எடுத்தா.

1926 இல் பிறக்சீட் தாயாரின் உடல்நிலை குறைந்ததால் சுதேச சகோதரிகளைக் கவனிக்க உதவினா. 1935 ஐப்பசியில் 2 ஆவது துணைச் சகோதரி வேறொரு பணிக்கு அனுப்பப்பட்டதால் யாழ்ப் பாணத்தில் இவ விருப்புடன் உதவி செய்தா.

1938 மாசியில் யாழ்ப்பாணத்தில் 1st Assistant ஆக வந்தார். பிறக்சீட் தாயார் 1937 இல் இறந்ததால் இவவே வீட்டுப் பொறுப்பு, ஓய்வு நேரப் பொழுதுபோக்கு எல்லாவற்றையும் செய்தா.

1941 வைகாசி 7 இல் பல வருட நோயின் பின் இறைவன் அவவை அழைக்க வந்தார். அன்பான கரிசனை செபச் சூழலில் பல காலம் வட பகுதியில் சேவையாற்றி எல்லாராலும் அறியப்பட்ட ஒருவராக இருந்தார். மரணச் சடங்குகள் நல்ல முறையில் நடை பெற்றன. இவை எல்லாம் இவவின் தியாக சேவையைக் காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HAVARD Rose – Mere St. Theophile

## தியோப்பில் தாயார்

இவ பிரான்ஸ் நாட்டில் Lance – லான்செ என்னும் இடத்தில் 1866ம் ஆண்டு ஆவணி மாதம் 17ந் திகதி பிறந்தா. இவவின் தந்தையின் பெயர் அகஸ்ரின். தாயின் பெயர் மறிய றின்விறா ( Marie Rinfray) விவசாயிகளான குடும்பம். இவவுக்கு இரு சகோதரரும் இரு சகோதரிகளும் இருந்தனர். விவசாயக் குடும்பத்தில் மணம் முடித்தனர். இவ 12 வயதுவரை கல்வி கற்ற பின் வீட்டில் தாய்க்குதவி புரிந்து வந்தா. 9 வயதில் முதல் நன்மையும் அடுத்த வருடத்தில் உறுதிப் பூசுதலும் பெற்றுக் கொண்டா.

இவ தேவ அழைத்தலை உணர்ந்த போதும் சுதந்திரமாகப் பேசுவதற்கு ஒருவரும் கிடைக்காதபடியால் கிறிஸ்தவக் கடமைகளைச் செய்வதில் மகிழ்ச்சியடைந்தா. ஒவ்வொரு மாதமும் அருட்சாதனங்களைப் பெற்று வந்தா. இவ மடத்திற்கு செல்வதற்கு 1 ½ வருடங்களுக்கு முன் R.P.Monfort o.m.i என்னும் குருவானவர் இவவின் பங்கில் பணி செய்தார். அவ்வேளை தனது இதய ஆவலைப்பற்றி இக்குருவானவரோடு மனந்திறந்து பேசினார். பெற்றோரின் எதிர்ப்பை இவ கூறியபோதும் இவவின் அழைத்தலை அவர் உணர்ந்து றெனஸ் (Rennes) மடத்தில் உள்ள குழுத்தலைவியுடன் தொடர்பு கொண்டு அனுமதி பெற்றுக் கொண்டார்.

1888ம் ஆண்டு வைகாசி 31ந் திகதி சென்று 2 மாதங்களாக Postulant ஆக இருந்தா. சிப்பிரியன் தாயார் அவவில் காணப்பட்ட உலகப் பற்றற்ற மட வாழ்வையும் கண்டு அவவிடம் அப்போது தேவையான பணவசதி இல்லையெனக் கூறி இத்திட்டத்தைக் கைவிட்டா. 1888 ஆவணி 5ந் திகதி Royanmont சென்று Conception கிளையில் சேர்க்கப்பட்டதை ஏற்றுக் கொண்டா.

அவவிடம் காணப்பட்ட பக்தி நவசந்நியாச காலத்தில் அதிகரித்தது. செபத்தையும் அமைதியையும் விரும்பினா. அழைத்தல் உறுதியுடையதாக இருந்தது. திருக்குடும்பப் பற்று, கைவேலைகளில் ஈடுபாடு, காத்திரமான போக்கு, தியாகம், படிப்பதற்கு வசதி கிடைக்கவில்லை. 1889 ஆனி 28ந்திகதி Sr. Theophile என்னும் பெயருடன் நவசந்நியாச உடை தரித்துக் கொண்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணி 17ந் திகதி போர்டோவுக்கு வந்து ஒரு சிறிய வகுப்பில் பணி அனுபவம் பெற்றுக் கொண்டா. 1890 மாசி 20ல் நவசந்நியாசத்தை நிறைவு செய்து Verzay வேர்சி என்னும் இடத்தை அடைந்து சிறுவர்களின் வகுப்பை பொறுப்பேற்றுக் கொண்டா. 1890 புரட்டாசி 8ந் திகதி முதல் வாக்குத்தத்தம் செய்து கொண்டா. ஐப்பசி 26ல் (Manancourt) மனான்கோட் என்னும் இடத்துக்கு அனுப்பப்பட்டு சிறுவர்களுக்கும் வீட்டு வேலைகளுக்கும் சகோதரிகளுக்கும் உதவி புரிந்து வந்தா.

1893 ஆனியில் இவ மிஷனறியாகப் பணி செய்யத் தகுதியுடையவ என்று தலைவிகள் கருதி இவவிடம் கேட்டபோது அதற்கு சம்மதம் தெரிவித்து அந்த மடத்தை விட்டு விலகினா. (Royaumont) றொயாமொன்றில் சில நாட்கள் செலவிட்டு பின்பு (Bretagne) பிறிற்றான் சென்று தன் வயதான தந்தைக்குப் பிரியாவிடை கூறி போர்டோவுக்கு வந்து ஆவணி இறுதியில் (rue du Mirail) மிறேயில் என்னும் மடத்தில் தன் முதல் தியான ஒடுக்கத்தை செய்து 1893 புரட்டாசி 7ந் திகதி தனது நித்திய வாக்குத்தத்தத்தை செய்தா. சிறிது நாட்களின் பின் தந்தை இறந்த செய்தி அறிந்தா. சில வாரங்கள் Maison தலைமையகத்தில் செலவழித்து கார்த்திகை 11ந் திகதி மார்செயி துறைமுகத்தை அடைந்து இலங்கைக்கு வர இருப்பவர்களுடன் அடுத்த மாதம் இலங்கையில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தா.

யாழ்ப்பாண மடத்தில் தையற்கலையைப் பொறுப்பேற்று, உடுப்பறையையும் பராமரித்து வந்தா. இவவிடம் விளங்கிய இறை பக்தி, துறவிகளுக்குரிய பண்புகள் ஏனையோருக்கு நல்ல எண்ணத்தையும், மன நிலையையும் அளித்தன. 1896ம் ஆண்டு வைகாசி மாதம் இளவாலைக்குச் சென்று நவசந்நியாச தலைவிக்கு உதவி புரிந்தா. 1898ல் சந்நியாசத்தில் சேர விரும்பும் இளம் பெண்களை மேற்பார்வை செய்தா. இக்காலத்தில் யாழ் மடத்தில் அநாதைப் பிள்ளைகளைப் பராமரித்த Theophan தாயாருக்குப் பதிலாக ஒருவர் தேவைப்பட்டதால் எல்லாவற்றையும் செய்து முடிக்கக்கூடிய ஆற்றலும் தமிழ் பேசக் கூடிய அறிவும் உள்ள தியோப்பில் தாயாரை பிறக்சீட் தாயார் நினைவில் கொண்டா. 1900 புரட்டாசி 19ந் திகதி இளவாலையை விட்டு யாழ்மடத்துக்கு வந்தா. அங்கே தாதி வேலையும் செய்யக் கூடுமாக இருந்தது.

1902 ஆடி 16ல் இறைவன் மாத்திரமே என்ற கிளையில் Aspirant ஆக இருந்தா. பிள்ளைகளின் மேற்பார்வை வேலையை விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விலகி 1903ல் தையல், தாதி வேலையை மேற்கொண்டா. 1908 சித்திரை 24ல் யாழ்மடத்தில் இருந்து குருநாகலுக்குச் சென்று அங்கு சக்கிறிஸ்ரீ வேலை, தாதிப் பணி, இறுதியாகத் தையல் வேலைப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டா. அவவின் சாட்சிய வாழ்வு எல்லாராலும் பாராட்டப்பட்டது. வருடாந்த தியான ஒடுக்கத்தின் பின்பு 1911ம் ஆண்டு மார்கழி 16ல் திரும்பவும் இளவாலைக்குச் சென்று நவசந்நியாசத் தலைவியாகவும் நிதிப்பொறுப்பையும் ஏற்றுப் பணியாற்றினார். தலைவிகளுடைய திட்டத்திற்கு தாழ்மையுடன் கீழ்ப்படிந்தா. 1912ல் இதய நோயினால் வருத்தமுற்றா. 1914ல் பிறக்சீட் தாயார் பிரான்சுக்குச் சென்றபோது அவ கொடுத்த நல்ல சாட்சியத்தின் வழியாக இவ 'தேவனின் சொந்தக் குமாரத்திகள்; நிலைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு 1915 தை 8ல் யாழ்ப்பாணத்தில் தியான ஒடுக்க முடிவில் வாக்குத்தத்தம் செய்து கொண்டா.

சில மாதங்களின் பின் கிளமென்ற் தாயார் இளவாலையை விட்டுச் சென்ற பின் தியோப்பில் தாயார் பணிப் பொறுப்பை ஏற்றார். இப்பணிக்குத் தயார் செய்யாதபடியால் யாழ் மடத்துத் தலைவிக்கு துணையாக இருந்தா. அதேவேளை தமிழ் நவகன்னியர் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டா. இளவாலைக்கு ஒரு குழுத்தலைவி வந்தபோது நவ கன்னியர் பொறுப்பை மட்டும் செய்து வந்தா. இது அவவின் சுகநிலைக்கு ஏற்றதாக இருந்தது. அடிக்கடி இதய களைப்பு ஏற்பட்டதால் புரட்டாசி-ஐப்பசியில் 6 கிழமைகள் நுவரெலியாவில் செலவிட்டது மிகவும் நன்மை அளித்தது. 1923ல் இளவாலை நொவிஷியேற்றுக்கு ஆட்கள் தேவைப்பட்டபோது யாழ்ப்பாணத்தில் இருந்து அங்கு சென்று தமிழ் சகோதரிகளுக்கு உதவி செய்தா. 1924 பங்குனி தியோப்பான் தாயார் திரும்பி வந்தபோது 1924 கார்த்திகை 1ந் திகதி குழுத்தலைவி நியமனம் பெற்றா. 1927 கார்த்திகை 1ல் குழுத்தலைவியாக 2ம் முறை இளவாலையில் நியமனம் பெற்றா. 1928ல் நடைபெற்ற பொதுச்சங்கத்தின் பிரதிநிதியாக தியோப்பீல் தாயார் பங்கு பற்றியது பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது. புரட்டாசி 11ந் திகதி கொழும்பில் இருந்து புறப்பட்டு சங்கத்தில் பங்கு பற்றிவிட்டு 35 வருடங்களின் பின் தன் வீட்டையும் குடும்பத்தையும் சந்தித்து வந்தா. 14-25 வரை தியான ஒடுக்கம் செய்தா. பின்பு லூர்துநகருக்கும் மாற்றியாக்குக்கும் சென்று ஜெனறல் மெற்சிங்க (General Metzinger) என்னும் கப்பலில் பதில் தலைவியுடன் 1928 மார்கழி 27ல் இலங்கை வந்தடைந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சில் குளிர் சுவாத்தியம் இருந்தாலும் உடல்நிலையில் சிறிது சுகமாக இருந்தா. 1930 கார்த்திகை 1ந் திகதி தலைவியின் 2ம் பருவம் முடிந்திருந்தாலும் இளவாலையில் வேறு ஒருவரும் இல்லாதபடியால் றோமின் அனுமதி பெற்று மீளவும் குழுத்தலை வியாகப் பணியாற்றினா. பின்பு வென்னப்புவா, நுவரெலியாவில் பல கிழமைகள் ஓய்வு எடுத்தாலும் பெலன் குன்றியதால் தியோப்பான் தாயார் குழுத்தலைவிப் பதவியை ஏற்றுக்கொண்டா. ஒருபக்கம் பாரிச வாதம் பேசுவதை இழந்து விட்டா. அவவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. முழு அறிவோடு இருந்தா. 1933 சித்திரை 6ந் திகதி ஒரு கடும் காய்ச்சல் ஏற்பட்டு கடைசி அருட்சாதனங்களைப் பெற்று சித்திரை 8ந் திகதி பிற்பகல் 3 மணிக்கு குழச்சகோதரிகள் சூழவர ஆன்மா இறைவனை நோக்கிச் சென்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DUBOURG LOUISE – MERE MARIE VICTORINE விக்ரறின் தாயார்

பிரான்சில் உள்ள மெயில்கானில், லூயிஸ் 1867ம் ஆண்டு மார்கழி 23ந் திகதி பிறந்தா. இவரது பெற்றோர்கள் Jean DUBOURG டுபூர்க (விவசாயி) Marie Rochereau. உறுதியான கத்தோலிக்கர்களான இவவின் பெற்றோர் ஒரு சகோதரன் இருந்தபடியால் மகளை ஒரு நல்ல இடத்தில் வைக்க விரும்பினர்.

13 வயதுவரை கிறிஸ்தவ கோட்பாட்டுச்சபை சகோதரிகளிடம் ஒப்படைத்தனர். அவர்கள் ஆன்மீக அறிவு விருத்தியில் உதவி செய்தனர். முதல் நன்மைக்கு ஆயத்தம் செய்யப்பட்டு 1880 புரட்டாசி 5ந் திகதி முதல்நன்மை பெற்றார்.

3 வருட இடைவெளியில் உறுதிப்பூசுதல் பெற முன் வீட்டுக்கு வந்து தாய்க்குப் பல வழிகளிலும் உதவி செய்து பண்ணை வேலைகளிலும் தன் திறமையை வெளிப்படுத்தினார். தூய மரியாளுக்கு ஒப்பித்த ஒரு சபையில் சேரக் காத்திருந்தார்.

ஒவ்வொரு மாதமும் லூயிஸ் அருட்சாதனங்களைப் பெற்று வந்தா. அவவின் ஆன்ம குரு அருட்தந்தை Maubourguet மோபூர்கே எல்லாத் திருநாட்களிலும் நன்மை கொடுத்தார். இவ அழைத்தலை உணர்ந்தபோது இவருக்கு வெளிப்படுத்தினார். தான் தூய மரியாள் சபையில் சேர இருந்ததை தன் ஆன்ம குருவுக்கு வெளிப்படுத்தினார். அவர் திருக்குடும்ப சபையைப் பற்றிக் கூறி சிறப்பாக Immaculate Conception கிளையைப் பற்றிக்கூறி அவவின் பாவப்பொறுத்தல் பரிகாரமாக போர்டோ சென்று நேரடியாக முதல் தலைவிகளுக்கு இவவை அறிமுகம் செய்யும்படி பணித்தார்.

லூயிஸ் இதற்கு அமைந்து 1890 சித்திரை 15ந் திகதி மிறாய்ல் வீதியில் உள்ள மடத்திற்கு வந்து 3 நாட்கள் தங்கியிருந்தா. பின்பு தன் வீட்டிற்கு வந்து கடைசி ஆயத்தமாக லூர்து நகருக்கு யாத்திரை செய்து 1890 புரட்டாசி 11ந் திகதி திரும்பவும் போர்டோ வந்து தனது ஆயத்தநிலை உருவாக்கத்தை தொடங்கினார்.

Royaumont ல் உள்ள நவகன்னியர் இல்லத்திற்கு சென்றபோது ஒருவித காய்ச்சல் வந்ததால் மீளவும் அவவின் குடும்பத்திற்குச் சென்று 3 கிழமைகள் தங்கிவிட்டு சுகப்படுத்தி மீண்டா. 1891ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு மீளவும் திரும்பாத நிலையில் உறுதி பூண்டு திருக்குடும்ப சபையில் சேர்ந்தா

மிறாய்ல் வீதியில் உள்ள மடத்தில் இருந்தபோது எல்லா வேலைகளையும் திறமையாகவும் தியாக உள்ளத்துடனும் செய்து எல்லோர் பாராட்டையும் பெற்றா. Royaumont ற்கு வந்தபோது அவவின் வேண்டுகோளுக்கு ஏற்ப 1891 வைகாசி மாதம் 1ந் திகதி கொன்செப்ஷன் நொவிஷியேற்றில் சேர்க்கப்பட்டா. மிகவும் அருமையான குணம் படைத்தவ. தியாக உள்ளம் கொண்டவ. நவசந்நியாசத்தில் கற்றுக் கொண்டவை பிற்காலத்தில் ஒரு நல்ல ஆளை உறுதிப்படுத்தியது. மேலும் தனது கல்வி அறிவினாலும் அன்பின் ஆதிக்கத்தினாலும் சகோதரிகளை மனநோகச் செய்யாது வழிநடத்தினார்.

1892ம் ஆண்டு மாசி 28ந் திகதி உடுப்புப் பெற்று Sr. Marie Victorine என்னும் பெயரைப் பெற்றா. பங்குனி 11ந் திகதி போர்டோவிற்கு வந்து தனது நவசந்நியாச பயிற்சி அனுபவத்தைப் பெற்றா. சகோதரிகளிடம் அன்பாகவும் சேவை செய்ய விருப்பும் கொண்டிருந்தா. சிறுவர்களுக்கு St. Bruno வில் வகுப்பு நடத்தி அனுபவம் அடைந்தா. 1892 ஐப்பசி 1ந் திகதி நவசந்நியாசத்தை முடித்துக் கொண்டு St. Bruno வுக்குச் சென்று தியாக உள்ளத்துடன் தனக்குக் கொடுக்கப்பட்ட வகுப்பின் பொறுப்பை ஏற்றார்.

1893 புரட்டாசி 7ந் திகதி தனது முதல் வார்த்தைப்பாட்டை முடித்துக் கொண்டு (போர்டோவில்) ஆசியப்பணிகளுக்கு தன்னைத் தாராளமாக கையளித்தா. சில கிழமைகள் தலைமையகத்தில் (General House) செலவிட்டு தன் குடும்பத்தையும் இறுதியாகச் சந்தித்துவிட்டு 1893 காரத்திகைத் தொடக்கத்தில் பிரான்சை விட்டுச் சென்றா.

விக்ரறின் தாயார் 1893ம் ஆண்டு இலங்கைக்கு வந்து யாழ்ப்பா ணத்துக்கு அனுப்பப்பட்டா. இளவாலைக் கன்னியர் மடம் உருவான காலத்தில் 1896 அதன் தலைமை நிர்வாகமானது யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தின் தலைவியரின் தலைமையில் கீழேயே நிர்வகிக்கப்பட்டது. இவ்வகையில் 1896 முதல் 1905ம் ஆண்டு வரை விக்ரறின் தாயார் இளவாலைக் கன்னியர் மடத்தில் நிர்வாகத் தலைவியாகப் பணியாற்றினார்.

நவகன்னியர் இல்லம் கட்டிடம் முடிவுபெறும் நிலையிலும் நவகன் னியரும் யாழ் மடத்தில் இருந்து இளவாலைக்குச் செல்லவிருப்பதால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் கஷ்டங்களிலும் தாயார் அர்ப்பணிப்போடு பணியாற்றினார். இளவாலை மடத்தின் ஆரம்ப வரலாற்றில் சகோதரிகள் மாணவர்கள் நவகன்னியரை உருவாக்கி சுதேச சகோதரிகளுக்கென்று ஒரு நிலையான இல்லத்தை அமைத்து நிர்வகித்து பணியாற்றி இளவாலை மடத்தின் வரலாற்றைத் தொடக்கி வைத்தா. எல்லா வேலைகளையும் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் நிறைவேற்றும் தியாக உள்ளமும் மிகவும் அன்பான குணவியல்புகளையும் கொண்டிருந்தபடியால் தகைமையான ஒரு தலைவியாக விளங்கினா.

இளவாலையில் தனது பணிக்காலம் நிறைவெய்தியதும் யாழ் மடத்தில் 1905ம் ஆண்டு தொடங்கி 1922ம் ஆண்டு வரையும் தலைவியாக இருந்து பணியாற்றினா. யாழ் மடத்தில் சகோதரிகளின் வாழ்வு, முன்னேற்றப்பணிகள், வளர்ச்சி தளர்ச்சிகளில் தியாக உள்ளத்தோடு பங்கேற்று இறைவன் மாத்திரம் என்னும் ஆன்மீகத்தில் ஊன்றப்பெற்று தனது நிர்வாகத்தை திறம்பட நடத்திச் சென்றா.

1933ம் ஆண்டு குருநாகல் மடத்திற்கு அனுப்பப்பட்டா. தமிழ் ஆங்கிலத்தோடு அங்கு சிங்கள மொழியையும் படித்து தலைவியாகப் பணியாற்றினா. 5 வருடங்களாக அங்கு பணியாற்றியபின் 1938ம் ஆண்டு கார்த்திகை 1ந் திகதி இறைவனடி சென்றுவிட்டா. தனது மரணத்தைப் பற்றி அடிக்கடி கூறுவா. தகுந்த ஆயத்தத்தோடு மரித்தா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Huctin Amelda - Mere M. Theophane

## தியோப்பான் தாயார்

பிரான்சில் உள்ள Petit Bois பெற்றிபுவா என்னும் இடத்தில் 1872ம் ஆண்டு கார்த்திகை 17ந் திகதி அமெல்டா பிறந்தா. நல்ல கிறிஸ்தவ விசுவாசம் நிறைந்த நேர்மையான விவசாயிகளாகிய Pierre Huctin பியர் குக்ரின் Marie Baudry இவவின் பெற்றோராவர். குடும்பத்தில் 8 பிள்ளைகள். Gustave தந்தைக்கு உதவி. Felicite வெலிசிற்றே தாய்க்கு உதவி. அஞ்சலீன் பிள்ளைகள் இல்லாத சிறிய தாய் வீட்டில் வளர்ந்தாள். அமெல்டா 8 வயது வரையும் பெற்றோருடன் வாழ்ந்தா. ஆனால் தாய்க்கு உடல் நலம் குன்றி இருந்தது. 1882 ஆனி 24ல் Venard குருவினால் ஆயத்தம் செய்யப்பட்டு முதல நன்மை பெற்றுக் கொண்டா. 3 வருடங்களின் பின் உறுதிப்பூசுதலும் பெற்றுக் கொண்டா.

சிறிது காலத்தின் பின் பெற்றோர் (Assais) அசேய் என்னுமிடத்துக்குச் சென்றனர். 12 வயது வரை இவ பாடசாலைக்குச் சென்றா. தாய் வீட்டு வேலைகளில் இவவை உருவாக்கினா. 14 வயதில் நல்ல உடல் நிலையுடன் வயல் வேலைகளையும் மேற்கொண்டா.

பெற்றோருடைய முன்மாதிரிகையைப் பின்பற்றி 20 வயது வரையும் அருட்சாதனங்களைப் பெற்று வந்தா. அவவின் மைத்துனி சில வேளைகளில் "நீர் விரும்பினால் நாம் துறவிகளாவோம;" எனும்போது நீர் விரும்பினால் போம். நான் ஒரு போதும் இல்லை என்று பதில் கூறினா. அவவின் தாய் அடிக்கடி ஒரு மகன் குருவாகவும் ஒரு மகள் சிஸ்ரராகவும் இருக்க விரும்புவதாகக் கூறியபோது முதலாவது நிறைவேறும் எனவும் தான் மடம் செல்ல மாட்டேன் எனவும் கூறினா.

1892 தை 1ந் திகதி மாலை தன் சகோதரி வெலிஷீயாவிடம் "பங்குக் குரு பூசையில் புதுவருட வாழ்த்துக் கூறினாரா" என்று கேட்டதற்கு அவ மறுமொழியாக "ஆம்" என்று கூறி அவர் எங்களுக்கு மிஷன் (Mission) பற்றி அறிவித்தார் என்று கூறினா. இவ அதுபற்றி ஒரு நாளுமே கேள்விப்படவில்லை என்றா. எல்லா இளம் சகோதரிகளும் இதனால் ஈர்க்கப்படவே அமெல்டாவும் இதனால் அழைக்கப்பட்டு குருவின் வேண்டுதலுக்குச் செவி சாய்த்தா. பழையவற்றை எல்லாம் மறந்து இறைவனுக்குத் தன்னைக் கையளித்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் காட்சியே எனப் பயந்து ஒருவருக்கும் இதைப்பற்றிச் சொல்லவில்லை. நித்திரையின்மை, பசியின்மை. எனவே Airvault சென்று துறவற சகோதரிகளுடன் இதுபற்றி உரையாட விரும்பினா. குழுத்தலைவி நன்கு வரவேற்று இவவின் விருப்பத்தை ஆன்ம குருவுக்கு வெளிப்படுத்தி, அத்துடன் பெற்றோருக்கும் கூறும்படி அறிவுரை கூறினா. அவதான் இப்பெற்றோரின் நண்பரான குருவுக்குக் கடிதம் எழுதி இதற்கு ஆயத்தம் செய்யும்படி கூறினா.

இவவின் தந்தை பின்பு இவ கவலைப்படுவாவென்று 1 வருடம் பின் போடும்படி கூறினிார். அவவின் சகோதரன் திரும்பி வரும்வரை இந்தப் புதிய பிரிவு, அவவின் நண்பிகள் பலருக்கும் துன்பத்தை அளித்தது. அவ்வேளையில் திருவருட்சாதனங்களால் ஊட்டம் பெற்றும், புனிதர்களின் சரிதையை வாசித்தும் தனதாக்கிக் கொண்டா.

இவற்றினால் ஊட்டம் பெற்று நண்பர்களின் பொறியில் இருந்து தப்பி 60க்கு மேற்பட்டோர் நற்கருணைப்பந்திக்கு அழைக்கப்பட்டனர். பங்குக் குருவும் இக்குடும்பத்தை வாழ்த்தினார். அவவின் சகோதரர் குஸ்ராவ் வீடு திரும்பினார். உடனே அமெல்டா Poitiers சென்று நம்பிக்கைக் கிளையில் 1894 வைகாசி 23 தொடக்கம் ஆவணி 3 வரையும் போஸ்ரியூலன்ற் ஆக உருவாக்கம் பெற்றா. பின்பு Airvault சென்று அங்கிருந்த இமாக்குலேற் கொன்செப்ஷன் சகோதரிகள் Mother Febronie தாயாரிடம் அவ பற்றிக் கூறினா.

4 ஆண்கள்: மக்சிம் 15 வயது தந்தையுடன் வேலை செய்தார். பசில் 13 வயது. யூனியறேற்றில் சேர்க்கப்படுவார். வலென்ரைன், அல்விறெட் பாடசாலை சென்று வந்தனர்.

பெற்றோர் சாதாரண குடும்பத்தினர். அமெல்டாவின் தாயின் தகப்பன் 2 வருடங்களின் முன் இறந்தபோது 2 பண்ணைகளைத் தன் 2 மகள்மாருக்கும் கொடுத்தார். ஒருவர் மற்றவரிலும் மேலானவர். அமெல்டாவின் தாய் தன் சகோதரிக்கு 5 வருடங்களுக்கு பணம் கொடுக்க வேண்டும். அத்துடன் அமெல்டாவின் பிரயாணச் செலவு, மற்றும் தளபாட வசதிகள் பெற்றோரே செலவிட்டதால் தற்போதும் பின்பும் அதிகம் செலவிட முடியாது. அமெல்டா 1894 ஆவணி 7ல் கொன்செப்ஷன் நொவிஷியேற்றில் செலவிட்டா. நல்ல பக்தி, உறுதியான உள்ளம், தாராள மனம், கஷ்டமானதையும் செய்து முடிக்கும் தன்மை, திருக்குடும்ப வாஞ்சை, வீட்டு வேலையில் ஆர்வம், தையல், சக்கிறிஸ்ரி வேலை எல்லாவற்றையும் அழகாகச் செய்வா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் உடல் சுகக் குறைவு. இரத்தச் சோகை (Anemie) நோயுடன் போராட வேண்டி இருந்தது.

நொவிசியேற்றில் தியாக உள்ளத்தின் மாதிரிகையாக விளங்கினா. ஒரு துறவிக்குத் தேவையானதெல்லாம் காணப்பட்டது. 1895 ஆடி 9ல் உடுப்புப் பெற்று Sr. Marie Theophane என்னும் பெயர் பெற்றா. ஆவணி 9ல் நவசந்நியாசப் பணி அனுபவம் பெற்றா. குழந்தைகள் மட்டில் அக்கறையுள்ளவ. தலைவிகளுக்குப் பணிந்த உள்ளம், அவவில் காணப்பட்ட காத்திரமான தன்மை, நம்பகம் வாய்ந்தவ என்பதைக் காட்டியது. 1896 மாசி 7ல் நவசந்நியாச இல்லத்தை விட்டு வெளியேறினா.

1896 ஆவணி 25ல் Reims இல் முதல் வாக்குத்தத்தம் செய்தா. 1899 புரட்டாசி 3ல் பிரான்ஸ் நொவிஷியேற்றில் (Royaumont) நித்திய வாக்குத்தத்தம் செய்தா. தனது Grand Motherஐ விட்டுப் பிரியும்போது ஆசிய மிஷனறியாகத் தன்னைக் கையளித்தா. பின்பு Assais இல் தன் குடும்பத்தைக் காணச் சென்றா. பங்குக்குரு M.Venard தனது சிறிய பொஸ்ற்ரியூலன்ற் இல் எதிர்கால மிஷனறியைக் கண்டு மகிழ்ந்தவராய் பெற்றோருடனும் பங்கு மக்களுடனும் பிரியாவிடை கூற ஆயத்தமானார்.

போர்டோ வந்து அங்கு சில நாட்கள் செலவிட்டு 1899 புரட்டாசியில் மார்செயி துறைமுகத்தை அடைந்தனர். அங்கிருந்து கொழும்பை வந்தடைந்தனர். தென்பகுதியில் தலைவியாக இருந்த மார்ஷல் தாயார் 1907 சித்திரையில் சிலாபத்தில் அண்மையில் திறந்த ஆங்கில பாடசாலை ஒன்றில் சேர்த்தா. அங்கு நவசந்நியாசப் பயிற்சி இருந்தது. மதர் தியோபான் அதற்குத் தலைமை வகித்தா. பின்பு அவ யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டா. இங்கு சக்கிறிஸ்ரி வேலையைப் பொறுப்பெடுத்தா. பெரிய கோயில் சக்கிறிஸ்ரி வேலையையும் இவவே செய்தா. யாழ் அனுப்பும்போது தலைவிக்கு ஒரு திட்டம் இருந்தது. அது நிறைவேறவில்லை.

பிறக்சீட் தாயார் ஆசியா Directress ஆக நியமிக்கப்பட்டு 1911 ஆனியில் யாழ்ப்பாணத்தை விட்டு விலகியபோது குழுக்களில் ஒரு மாற்றம். சிஸ். தியோபான் 2nd Assistant. சில மாதங்களின் பின் வருடாந்த ஞானொடுக்கத்தின் பின் தை மாதம் 1st Assistant ஆக நியமிக்கப்பட்டா.

1917 பங்குனியில் சிறிது கால ஓய்வுக்காக கொழும்புக்கு வந்தா. களைப்பாக இருந்தபடியால் நுவரெலியாவுக்கு சென்றா. பிறக்சீட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயார் இவவை உற்சாகப்படுத்தி வைத்திருந்தா. தெற்கில் இருந்து யாழ் வரமுன் சிலகாலம் இளவாலையில் செலவிட்டா.

1918 சித்திரை 24ல் குழுத்தலைவியாக வந்தா. இதை அவ எதிர்பார்க்காது விடினும் தைரியமாக மேற்கொண்டா. தமிழ் பணிகளில் அக்கறை காட்டினா. 1921ல் 2ஆவது முறையாகப் புதுப்பித்தா. 1922 மாசியில் "இறைவனின் சொந்தக் குமாரத்திகள்" கிளையில் இறுதியாகச் சேர்க்கப்பட்டா.

1924ல் ஐரோப்பா செல்லக் கிடைத்தது ஆறுதல். பங்குனி 19ல் கொழும்பில் இருந்து புறப்பட்டு சித்திரை 21 போர்டோவை அடைந்து 24ல் தனது வயதான தாயைச் சந்தித்து லூர்து நகருக்கு யாத்திரை சென்றா. St. Joseph House இல் ஞானொடுக்கம் செய்து சபைத்தலைவியையும் சந்தித்து புரட்டாசி 18ல் இரு இளம் சகோதரிகளுடன் இலங்கையை நோக்கி புறப்பட்டா.

இளவாலையில் தான் பொறுப்பேற்ற குழுத்தலைவி பணியைத் தொடர்வதற்கு பதிலாக அனுராதபுரத்தில் கிளமென்ற் தாயாருக்கு ஏற்பட்ட சுகவீனம் காரணமாக அந்த இடைவெளியை நிரப்பச் சென்றா. இது அவவின் தாராள உள்ளத்தைக் காட்டுகின்றது. 1924 கார்த்திகை 9ல் புதிய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1927ல் புதுப்பிக்கப்பட்டு 1930 கார்த்திகை 9ல் மீளவும் றோமின் உத்தரவுடன் புதுப்பிக்கப்பட்டது.

தியோபில் தாயாரின் உடல் நிலை இளவாலையில் பணிகளைத் தொடர முடியாது இருக்கக்கண்டு தியோபான் தாயார் அங்கு அழைக்கப்பட்டா. தாராள மனதுடன் இதனை ஏற்று 1932 தை 22ல் யாழ் மடத்தில் ஞானொடுக்கம் செய்து அதன்பின் குழுத்தலைவியாக நியமனம் பெற்றா.

3 வருடங்கள் இளவாலையில் முடிந்ததும் மீளவும் 1935 தை 13ல் அனுராதபுரிப் பணியைப் பொறுப்பேற்றா. மீளவும் 1938ல் புதுப்பிக்கப்பட்டது. 1938 மாசியில் ஆலோசகராகவும் இருந்தா. காரணம் 1937 ஆவணி 25ல் பிறக்சீட் தாயார் இறந்து விட்டா. றோமின் அனுமதியுடன் 1941 தை 13ல் திரும்பவும் அனுராதபுரிப் பணிக்குத் தலைமை வகித்தா. உலக யுத்தத்தினால் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால் 1947 தை 13 வரையும் புதுப்பிக்கப்பட்டு பணிபுரிந்தா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியோபான் தாயாரின் வயது, பெலவீனம் இருந்தாலும் 5 ஆவது முறையாக குழுத்தலைவியின் காலம் நிறைவு பெற்றாலும் புதிய தலைவிக்குத் துணையாக இயலுமான வேளையில் உதவி செய்ய வேண்டப்பட்டா.

தமிழ் "நொவிஷியேற்;" பண்டத்தரிப்புக்கு மாற்றப்பட்டதால் தியோபான் தாயார் 1952 மார்கழி 18ல் 1st Assistant ஆக நியமனம் பெற்றா. அவவின் பக்தியினால், தலைவிகளின் மதிப்பினால் இளம் சகோதரிகளின் உருவாக்கத்துக்கு உதவினா.

1955ல் நல்ல தாயாரின் (Claire Jesus Julian) தரிசிப்பு, படிப்பித்தல் பணியில் இருந்த தாயாருக்கு உறுதுணையாக இருந்தது. 87 வயதில் அவவின் சக்தி குன்றியதால் தலைவிகள் ஓய்வு கொடுக்க விரும்பினர். எனவே யாழ் மடத்துக்கு அனுப்பப்பட்டு அங்கு இருந்தா.

இரு வருட வியாதியின்பின் 1958 வைகாசி 21ம் திகதி நடுச்சாமத்தில் அமைதியாக உயிர் நீத்தார். மரணச்சடங்குகள் யாழ் பேராலயத்தில் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை தலைமையில் சிறப்பாக நடைப்பெற்றது. அவவின் சகோதர குரு அல்பிறெட் o.m.i கடைசி ஆசீர் கொடுத்து பவனியாக யாழ் சேமக்காலைக்கு அழைத்துச் சென்றார். இவ ஓர் அழியாத சின்னத்தை இலங்கைக்கும், திருக்குடும்ப சபைக்கும் விட்டுச் சென்றா. தீருக்குடும்ப சபை ஒரு நல்ல மிஷனறியையும் அதே வேளையில் ஒரு தூய சகோதரியையும் இழந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# O'BRIEN SARAH – MERE SR. SEBASTIAN

## செபஸ்ரியன் தாயார்

சாறா அயர்லாந்தில் உள்ள Limerick மாவட்டத்தில் உள்ள Ballyhahill என்னும் இடத்தில் 1874ம் ஆண்டு ஆவணி மாதம் 22ந் திகதி Patrick O'Brien, எலிசபெத் O'Shea வுக்கும் மகளாகப் பிறந்தா. இவர்கள் பண்ணை ஆட்கள். குடும்பத்தில் 9 பிள்ளைகள் 4 ஆண்கள், 5 பெண்கள் சாறா மடத்திற்குச் செல்லும்போது ஒரு சகோதரி Leeds இல் உள்ள Juniorate சென்றிருந்தா.

தன் கிராமத்தில் இருந்த பாடசாலையில் படித்து 18 வயதில் Leeds இல் உள்ள Juniorate சென்று அங்கு படிப்பித்தல் பயிற்சி பெற்று மார்கழியில் பரீட்சையில் சித்தியடைந்தா. 10 வயதில் புதுநன்மையும் அடுத்த வருடத்தில் உறுதிப்பூசுதலும் பெற்றிருந்தா.

4 வருடத்தின் முன்பு (மடம் செல்லுமுன்) அழைத்தலை உணர்ந்து Leeds இல் நவசந்நியாசத்துக்கு ஆயத்தம் செய்ய சென்றிருந்தா. Sr. Emmanuel என்பவருக்கு அறிமுகம் செய்யப்பட்டு முதற் தலைவிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டா. 1896ம் ஆண்டு தை 22ந் திகதி Rock Ferry என்னும் இடத்திற்கு வந்தா. 1897ம் ஆண்டு தை 17ந் திகதி சந்நியாச உடை பெற்றா. ஆடி 2ந் திகதி லண்டனில் உள்ள Tower Hill க்கு அனுப்பப்பட்டா. 1898ம் ஆண்டு ஆவணி 10ந் திகதி முதல் வார்த்தைப்பாடு செய்து மார்கழியில் மேற்படிப்பிற்கு 2nd Class புலமைப்பரிசில் (Scholarship) பெற்றா. 1899ம் ஆண்டு Stalybridge சென்று ஆவணி வரையும் Assistant ஆக இருந்து பாலர் வகுப்பு நடத்தினா. அன்பும் புத்திசாலித்தனமும் இவவிடம் விளங்கின. அவ்வேளை 8 Standard யூனியர் பாடசாலையில் இருந்தா. 1900ம் ஆண்டு ஐப்பசி 24ந் திகதி இறைவன் மாத்திரமே என்னும் அழைப்பில் உற்சாகம் காட்டினா. 1901 ஆவணியில் நித்திய வாக்குத்தத்தம் செய்து கொண்டா.

1903ல் லீட்ஸ் குழுவில் இருக்கும்போது பிற நாட்டுப் பணிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டா. இப்பணியைத் தாராள உள்ளத்துடன் ஏற்று தன் குடும்பத்திற்கும் பிரியாவிடை கூறி பின் 2 மாதங்கள் General House இல் செலவிட்டா.

மார்கழிக் கடைசியில் மார்செயிலில் இருந்து புறப்பட்டா. சபைத் தலைவியின் பிரதிநிதி றோமில் இருந்து பிரியாவிடை கூற ஆனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்கிழமை வந்தார். 10ந் திகதி இலங்கைக்கு வந்த குழுவுடன் வந்து சேர்ந்தா.

சிறிது நாட்கள் பொதுத் தலைவியுடன் செலவிட்டு யாழ்ப்பாணம் போக அனுமதி பெற்றா. யாழ் ஆங்கில பாடசாலையில் ஆங்கில வகுப்புகளைப் பொறுப்பேற்றா. 1905 ஆவணியில் விக்ரறின் தாயார் யாழ் பணிகளுக்குப் பொறுப்பெடுத்தா. Mother Sebastian துணையாக இருந்தா. ஆங்கில வகுப்புக்களுக்கும் உதவி தேவையாக இருந்தது.

1907ல் பிறக்சீட் தாயார் யாழ்ப்பாணத்தில் முதல் துணையாளராகவும் செபஸ்ரியன் தாயார் இரண்டாவது துணையாளராகவும் இருந்தா. ஆங்கில வகுப்பில் Nativity Sweney தாயாருக்கு உதவியாகவும் இருந்தா. உடல் நிலை உறுதியாக இல்லாத நிலையிலும் அவவின் தியாக சேவை, ஆங்கில வகுப்புகளுக்குப் பொறுப்பு, 7ம் 8ம் வகுப்புகளைப் படிப்பித்தல், நிதானம், விவேகம் இவற்றுடன் தனது சுகத்தையும் கவனித்து பொறுமையுடன் வாழ்ந்து வந்தா.

1911 தை 8ந் திகதி சபைத் தலைவியின் பிரதிநிதி Mother D'Abadie நடாத்திய ஞானொடுக்கத்தில் பங்குபற்றி "இறைவன் மாத்திரமே" என்னும் அழைப்பில் aspirant ஆக நியமனம் பெற்றா. ஆனி மாதம் 1ந் திகதி பிறக்சீட் தாயார் பிரதிநிதியாக நியமனம் பெற்றதால் யாழ் குழுவின் முதற் துணையாளராக மதர் செபஸ்ரியன் பதவியேற்றா.

1912ல் வருடாந்த ஞானஒடுக்க முடிவில் பம்பலப்பிட்டிக் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்கத் தலைவிகள் கூறியபோது விருப்பமில்லாவிடினும் பணிந்த மனதுடன் ஏற்றுக் கொண்டா. தை 13ந் திகதி யாழ்ப்பாணத்தை விட்டுவிலகி இயேசுவின் திருநாமத் திருநாளான 14ந் திகதி தான் உடுப்புப் பெற்ற தினத்தில் புதிய பதவியை ஏற்றுக் கொண்டா. இவவின் தியாக சேவையினால் வகுப்புகளின் தரம் உயர்ந்து பணிகளும் நன்கு விருத்தியடையத் தொடங்கின.

பிறக்சீட் தாயார் பிரான்ஸ் சென்றபோது கொடுத்த சாட்சியத்தினால் செபஸ்ரியன் தாயார் "இறைவனின் சொந்தக் குமாரத்திகள்" நிலைக்கு அனுமதிக்கப்பட்டா.

1915 தை 8ந் திகதி இச்சடங்கு நடைபெற்றது. அதே மாதம் 14ந் திகதி தலைமைப்பணி 3 வருடத்திற்கு நீடிக்கப்பட்டது. இரண்டாவது பணிக்காலம் 1919 ஆனி வரை நீடித்தது. பின்பு பிறக்சீட் தாயார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் பதவியேற்க இவர் துணையாள் பதவி எடுப்பதற்குப் பதவி நீடிக்கப்பட்டது.

1920 முதல் 4 ஆவது முறையாக ஆலோசகர் பதவியில் இருந்தா. அடுத்த வருடம் பங்குனிக் கடைசியில் கிளமென்ற் தாயாருடன் புறப்பட்டு சித்திரைக் கடைசி நாட்களில் போர்டோ சென்றடைந்தனர். தலைமை இல்லத்தில் (General House) சில காலம் செலவிட்டு (வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி) லீட்ஸ் இல் தீயான ஒடுக்கம் செய்து அயர்லாந்தில் வீட்டுத் தரிசிப்பு செய்து தனது இரு துறவற சகோதரிகளுடன் செலவிட்டா. பெற்றோர் இறந்து விட்டனர்.

புரட்டாசித் தொடக்கத்தில் போர்டோவுக்கு வந்து ஒரு மாதம் தனது தலைவிகளுடன் செலவிட்டு லூர்து நகருக்கும் யாத்திரை செய்தா. 1922 ஐப்பசி 21ல் கொழும்பு வரும்போது Sr. Ambroise Mathews இறந்த செய்தி கேட்டா. மார்கழி 8ந் திகதி பம்பலப்பிட்டியாவில் குழுத்தலைவி பதவியை ஏற்றா.

1926ல் தலைவிகள் குருநாகல் பணியை ஒரு உள் நாட்டுத் தலைவியுடன் ஆரம்பிக்க விரும்பியபோது செபஸ்ரியன் தாயார் இப்பணிக்கு உதவினார். தாராள உள்ளத்துடன் தன்னைக் கைய ளித்தா. 1926 தை 17ல் நியமனம் பெற்றா. வேலைப்பளுவால் அவவின் உடல் நிலையில் சுகக் குறைவு ஏற்பட்டது.

1931 தை 13ந் திகதி செபஸ்ரியன் தாயார் யாழ் குழுத்தலை வியாகவும் பிறக்சீட் தாயார் 1st Assistant ஆகவும் இருந்தார்கள். 1934 தை 13ந் திகதி 2ம் முறையாகப் புதுப்பிக்கப்பட்டது. 1937ல் றோமின் அனுமதியுடன் 3வது புதுப்பித்தல் நடை பெற்றது. சுகநிலை பலவீனமடைந்ததால் நுவரெலியாவில் ஓய்வெடுத்து தனது பணியைத் தியாக உள்ளத்துடன் செய்தா.

1940 தை 13ல் பம்பலப்பிட்டியா குழுவுக்குத் தலைமை ஏற்றா. 1939ல் பொதுச்சங்கத்தின் பிரதிநிதியாகச் சென்றா. சில கிழமைகள் அங்கு செலவிட்டு தன் 2 சகோதரிகளை England இல் சந்தித்து குடும்பத்தை அயர்லாந்தில் சந்தித்து பல கிழமைகள் Eastbousone இல் லீவு எடுத்தா.

ஆவணி இறுதியில் போர்டோவுக்கு அழைக்கப்பட்டு லூர்து நகருக்கும் யாத்திரை செய்து மாதாவின் பாதத்தடியில் இருக்கும்போது யுத்தம் தொடங்கியது. எனவே கப்பல் 1939 ஐப்பசி 6ல் மீள இலங்கை சேர்ந்தா. மூன்றாவது பணிக்காலம் முடியும்வரை யாழ்நகரில் இருந்தா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1943 தை 13ல் பம்பலப்பிட்டியாவில் தனது இரண்டாவது பணிக்காலத்தை புதுப்பித்தா. உலக மகா யுத்தத்தின் போது ஆங்கில Army யினால் குழப்பம் இருப்பினும் விவேக புத்தியினால் தன் பணியைக் கொண்டு சென்றா. 1946 தை 11ல் யாழ் குழுத்தலைவியாக நியமிக்கப்பட்டா. உடல்நிலை குறைந்தபடியால் முதல் பணிக்காலத்துடன் நீக்கப்பட்டு 1st Assistant ஆக இருந்தா. அவவின் பணிகளின் அறிவு புதிய தலைவிகளுக்கு உதவியாக இருந்தது.

1953 சித்திரைத் தொடக்கத்தில் மூளைக்காய்ச்சல் ஏற்பட்டு சித்திரை 29ல் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டா. காய்ச்சல் அதிகமாக இருந்ததால் மறுநாள் மடத்திற்கு அழைத்து வந்தனர்.

கடைசி அருட்சாதனங்களைப் பெற்று வைகாசி 2ந் திகதி பிற்பகல் 6 மணியளவில் இறைவனடி சேர்ந்தா. தியாக உள்ளம் கொண்ட வேத போதக சகோதரி தன் பணிக்கு சம்பாவனை பெறச் சென்று விட்டா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## O'DONOGHUE MARGARET - MERE M. LOYOLA லோயலா தாயாா

Michael O'Donoghue, Mary O'Donoghue இவர்களுக்கு மகளாக 1878ம் ஆண்டு மார்கழி 24ந் திகதி அயர்லாந்தில் Killarney Co Kerry என்னும் இடத்தில் பிறந்தார். தந்தை ஆசிரியர். குடும்பத்தில் 4 ஆண்களும் 4 பெண்களும் இருந்தனர். மாகிறெற் நவசந்நியாசத்திற்குப் போகும்போது ஒரு பெண் Leeds இல் ஆசிரியை. மற்றவ ஊனமுற்றவ. ஒரு சகோதரி பாடசாலை சென்று வந்தா. ஒரு சகோதரன் Woodford இல் உள்ள Training College இல் படிப்பித்தார். ஒருவர் லண்டனில் உள்ள Railway இல் வேலை செய்தார். மற்ற இருவரும் பாடசாலை சென்று வந்தனர்.

Margaret Rathimore இல் உள்ள Presentation சகோதரிகளினால் படிப்பிக்கப்பட்டு 7 வருடங்கள் இங்கிலாந்தில் படிப்பித்தா. 11 வயதில் முதல்நன்மையும் அடுத்த வருடம் உறுதிபூசுதலும் பெற்று எப்போதும் சமயக் கடமைகளை ஒழுங்காகச் செய்தா. 3 வருடங்களாக தனது அழைத்தலை உணர்ந்தா. R.P.Roche o.m.i குருவின் ஆலோசனையுடன் Leeds குழுத்தலைவி Mother இம்மானுவேல் O'Dea திருக்குடும்பத்தில் சேர அனுமதி கொடுத்தா. 1905 மாசி 2ல் Postulant ஆகச் சேர்ந்தா.

இவ கிறீஸ்தவக் கடமைகளை நன்கு அறிந்திருந்தா. வாழ்வில் அவற்றைப் பக்தியுடன் கடைப்பிடித்து வாழ்ந்து வந்தா. அழைத்தல் வாழ்வு, திறந்த மனப்பான்மை, நேர்மை, எளிமைப் பண்புகள் கொண்டவ. துணை ஆசிரியராக நியமனம் பெற்று 7 வருடங்கள் சிறுவர்களுடன் பணிபுரிந்தா.

மடத்துக்கு வரும்போது உணவு சீரணிப்பதின் குறைப்பாட்டினால் உடல்நிலை குன்றியிருந்தாலும் பின்பு சுகமடைந்து விட்டா. எனவே பரிசுத்த உடுப்புப் பெற்று Sr. Marie Loyala என்னும் பெயரை 1906 மாசி 2ல் பெற்றா. நவசந்நியாசம் முடிவடைந்ததும் Leeds சென்று பணி அனுபவம் பெற்றா. யாவரும் எது கேட்டாலும் செய்வதற்குத் தயாராக இருந்தா. தாழ்மை, அமைச்சல் உடையவ. 1907ம் ஆண்டு ஆவணி மாதம் 3ந் திகதி முதல் வார்த்தைப்பாடு செய்தா. பின்பு Ramsgateக்கு அனுப்பப்பட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1909ம் ஆண்டு சந்நியாச மதிப்பீடுகளில் தன்னை மேலும் உருவாக்க விரும்பினா. 1910ல் தலைவிகள் ஆசியாவில் பணியை மேற்கொள்ள இவவைத் தேர்ந்தெடுத்தனர். அங்கு அனுப்ப முன் சிறிது காலம் Anvers இல் உள்ள நவசந்நியாச மடத்திற்கு அனுப்பினர். 1910 மாசி 15ல் அங்கு சென்றா. நவசந்நியாச இல்லத்தின் வாழ்வைப் பாராட்டினா. 1910 ஆவணி 15ல் நித்திய வாக்குத்தத்தம் செய்தா. (யுத்த காலத்தில் General House தற்காலிகமாக ஸ்பெயினில் இருந்தது) ஆசிய பணிகளை மேற்கொள்ளும் முன் சில நாட்கள் Valcarlos இல் நல்ல தாயாருக்கு அண்மையில் செலவழித்தா. பின் லூர்து நகருக்கும் யாத்திரை செய்த பின் 1910 ஐப்பசி 9ந் திகதி மார்செயிஸ் இருந்து Mother D'Abadie 4 வேறு சகோதரிகளுடனும் பயணத்தை மேற்கொண்டா.

இலங்கையை அடைந்ததும் யாழ்ப்பாணத்தில் ஆங்கில ஆசிரியருக்குத் துணையாக இருந்தா. இப் புதிய பணியை நன்கு செய்து தலைவிகளுக்குத் திருப்தி கொடுத்தா. 1910 ஐப்பசி 2ல் 'இறைவன் மாத்திரமே" என்னும் நியமனத்திற்கு நல்ல தாயாரினால் உற்சாகம் பெற்றா. 1912 தை முற்பகுதியில் 2nd Assistant ஆக இருந்தும் ஆங்கில ஆசிரியர் இல்லாதபடியால் அந்தப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டா. 1926ல் ஆசிரியர் பதவியை விரும்பினா.

1930 ஆவணி 15ல் "இறைவன் மாத்திரமே" நிலைக்கு aspirant ஆக நியமனம் பெற்றா. களுத்துறையில் ஆசிரியப் பணிக்குப் பொறுப்பெடுக்கும்படி தலைவிகள் கேட்டுக் கொண்டனர். 1934 தை 8ந் திகதி குழுத்தலைவியாகப் பொறுப்பெடுத்து வகுப்புக்களிலும் படிப்பித்து வந்தா. ஆசிரியப்பணியில் இருந்து ஓய்வும் பெற்றுக் கொண்டா.

1935ம் ஆண்டு ஐரோப்பா செல்ல வாய்ப்புக் கிடைத்தது. வைகாசி 23 இங்கிலாந்து செல்லுமுன் லூர்து நகர் யாத்திரை செய்து பின்பு ஆனி 11ல் மான் செஸ்ரரில் உள்ள தன் குடும்பத்தினருடன் 4 கிழமைகள் செலவிட்டா.

Liscard என்னும் இடத்தில் ஞானொடுக்கம் செய்து சில கிழமைகள் தலைமை இல்லத்தில் செலவிட்டு 1935 புரட்டாசி 1ந் திகதி Daughters of God Alone ஆக ஏற்றுக் கொள்ளப்பட்டா. பின்பு "மார்த்தியாக்;" சென்று புரட்டாசி 6ந் திகதி தலைவிகளுக்குப் பணிந்த உள்ளத்துடன் இலங்கை வந்து சேர்ந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வந்து சேர்ந்ததும் களுத்துறைக்கு குழுத்தலைவியாகவும் பாடசாலைப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டா. 1937 தை 8ல் இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்றா. அவவின் பாடசாலைச் சேவை குழுக்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டியது. 1940ல் அவவின் பணிக்காலம் முடியும்போது யாழ்ப்பாணப் பணிகளுக்கு அனுப்பப் பட்டா. அங்கிருந்த Mother Sebastian வேறு பணிக்குப் போய்விட்டா. 1940 தை 12ல் நியமனம் நடைபெற்றது.

1943ல் யாழ் குழுத்தலைவியாக 2வது முறை புதுப்பிக்கப்பட்டது. 1946 தை 13ல் தெகிவளை குழுப்பொறுப்பையும் நிதிப்பொறுப்பையும் ஏற்றா. சமய வகுப்புகளையும் ஆரம்ப பாடசாலை சிறுவர்களுக்கு மறைக்கல்வியும் படிப்பித்தா. 1949 தை 13ல் மீளவும் களுத்துறைப் பணி இவவுக்கு ஒப்படைக்கப்பட்டது. Sr. M. Agnes Flynn இவவுக்குத் துணையாக அனுப்பப்பட்டா. 1952 தை 13ல் தெகிவளைப் பணியை மீளவும் பெற்றுக் கொண்டா. அங்கு மாணவரின் சமய உருவாக்கத் திற்கு உதவிபுரிந்தா. 1961ம் ஆண்டு சித்திரை மாதம் இலங்கையில் தனது பணியை நிறைவு செய்து மீளவும் தன் சொந்த நாட்டுக்குச் சென்று பிரிட்டன் அயர்லாந்து மாகாணத்தில் இணைந்து கொண்டா. தனது வயோதிப காலத்தை சிக்கிளிங்கோலில் (Sicklinghall) செல விட்டு 1968ம் ஆண்டு சித்திரை 23ந் திகதி இறைவனடி சேர்ந்துவிட்டா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



MOTHER XAVIER MARCHAND



SR. M. SEBASTIAN O'BRIEN



SR. M. LOYALA O'DONOGHUE



SR. M. ANNUNCIATION HANNON



SR. M. ALOYSIA MAYER



SR. M. RAYMOND WRAFTER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SR. M. CONCEPTION ORIERRE



SR. M. CLARE Mc. CORMICK



SR. M. BAPTIST MAGNER



SR. M. SALOME REYNAERT



SR. M. COLUMBANUS KIRWAN



SR. JEANE MARIE HAMPONERA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SR. M. FRANCIS XAVIER NIESYTO



SR. M. DE LA VISITATION WHELAN



SR. M. EUSTELLE HANKENNE



SR. ANTHONY JOSEPH MULVIHILL



SR. M. JOSEPHINE TYNEN



SR. M. ALOYSIUS CONNOLLY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sr. Marie de la Annunciation Hannan Hannan Bridget - அருட்சகோதரி மாறி டி லா அனன்சியேஷன்

1885ம் ஆண்டு வைகாசி மாதம் 20ம் திகதி ஜோண் கான்னான், மேரி டின்சின் என்னும் பெற்றோருக்கு மகளாக அயர்லாந்திலுள்ள லிமெறிக் மாவட்டத்தில் உள்ள லூடன் பாலி நெஸ்ரியில் பிறந்தார். பெற்றோர் மதிப்புக்குரிய பண்ணையாளர். குடும்பத்தின் 8 பிள்ளைகளில் 2 ஆண்கள், 6 பெண்கள். ஒரு சகோதரன் அமெரிக்காவில் குருவாகப் பணியாற்றினார். மற்றவர் பண்ணையில் தந்தைக்கு உதவி செய்தார். ஒரு சகோதரி விவாகம் செய்துள்ளா. 3 பேர் வீட்டில் பெற்றோருடன் இருந்தனர். கடைசிப் பெண் லீட்சில் (Leeds) யூனியறேற்றில் இருந்தா.

பீறிஜிட் 17 வயது வரை லிமெறிக்கில் உள்ள பிறசென்ரேஷன் சபைச் சகோதரிகளிடம் வளர்ந்து வந்தா. 10 வயதில் முதல் நன்மையும் உறுதிபூசுதலும் பெற்றுக் கொண்டா. அன்றிலிருந்து ஒழுங்காக அருட்சாதனங்களைப் பெற்று வந்தா. 17 வயதில் துறவற வாழ்வில் விருப்பம் கொண்டு லீட்ஸ் இல் உள்ள யூனியறேற்றுக்குச் சென்றா. அங்கு 5 வருடங்கள் படித்து 1907ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தா. எனவே நவகன்னியர் இல்லம் செல்ல விரும்பினா. ஆனால் தந்தை இதை விரும்பவில்லை. எனினும் ஒரு வருடத்தின் பின் தந்தை சம்மதம் தெரிவித்தபடியால் 1908ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ந் திகதி றொக்வெரி (Rock Ferry) க்குச் சென்றா.

உயரமான தோற்றமும் தாராள உள்ளமும் தன் பணியில் தீயாக சிந்தையும் மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனதும் படைத்தவ. (Leeds) லீட்ஸ் இல் உள்ள ஆயத்த கன்னியர் இல்லத்தில் ஆசிரியராகப் பணியாற்றினா. எனவே தனது கல்வியைத் தொடரும் திறமை இருந்தபடியால் உதவி ஆசிரியராகப் பணி செய்ய முடிந்தது.

1909ம் ஆண்டு ஆவணி 9ந் திகதி Sr. Marie de la Annunciation என்னும் பெயருடன் துறவற உடுப்புப் பெற்றுக் கொண்டா. திருச்சபைச் சட்டமுறைப்படி நவசந்நியாச காலம் நிறைவுற்றது. கல்விப் பணியில் அனுபவம் இருந்ததாலும், பியானோ இசையில் சிறிது அறிவு இருந்த படியாலும் தொழிற் பயிற்சிக்காக லீட்ஸ் நவ கன்னியர் இல்லத்துக்குச் சென்றா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1911ம் ஆண்டு மாசி மாதம் 10ந் திகதி தனது முதல் அர்ப்பணத்தைச் செய்து கொண்டா. பின்பு றம்ஸ்கேற்றில் (Rams gate) உள்ள குழுவுக்கு அனுப்பப்பட்டா. 6 மாதகாலத்தில் தன்னை நன்குஉருவாக்கிக் கொண்டா. சில மாதங்களின் பின்பு சபைத் தலைவர் இலங்கைப் பணி பற்றிக் கடிதம் எழுதியிருந்தா. கடிதத்தைக் கண்டதும் அதிக ஆச்சரியம் அடைந்தாலும் தன் துறவு நிலையிலும் அழைத்தலிலும் ஒரு சந்தேகமும் இல்லையெனப் பதில் எழுதினா.

பொதுச் சங்கத்தின் பின் (Praxede Bour) பிறக்சீட் தாயார் கொழும்புக்கு திரும்பிப் போகும்போது அவவுக்குத் துணையாக இச் சகோதரியுடன் செல்ல விருந்தா. சில நாட்கள் ஸ்பெயினில் உள்ள வால்கார்லோஸ் (Valcarlos) என்னும் இடத்தில் செலவிட்டு லூர்து கெபிக்கும் ஒரு யாத்திரையை மேற் கொண்டா. அத்துடன் சபைத் தலைவியையும் சந்தித்து பின் 1911ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5ந் திகதி மார்செயி துறைமுகத்தில் இருந்து பயணமானா.

இலங்கை வந்தடைந்ததும் யாழ்ப்பாண மடத்திற்கு வந்து அங்கு ஆங்கில வகுப்பில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தா. தனது வகுப்பில் தியாக உள்ளத்துடன் பணி புரிந்தும் குழுவிலும் எல்லாராலும் நேசிக்கப்பட்டவராகவும் இருந்தா. 1914ம் ஆண்டு ஆனி 26ந் திகதி இறுதி அர்ப்பணத்தைச் செய்து கொண்டா. 1917ம் ஆண்டு பங்குனி மாதம் கொழும்பில் (appendiccite) சத்திர சிகிச்சை செய்து நல்ல முறையில் சுகம் பெற்றா. 1919ம் ஆண்டு வகுப்பாசிரியராகவும், இசை ஆசிரியராகவும் இருந்து ஒக்ஸ்வோட் (oxford) பரிட்சையிலும் சித்தியடைந்தா. வகுப்பில் பிள்ளைகளுடன் சற்றுக் கண்டிப்பாக இருந்தபடியால் 1930ம் ஆண்டு பிறக்சீட் தாயாருக்கு தாதியாகத் தியாகத்துடன் பணி புரிந்து செயற்பட்டு வந்தா. 1938ம் ஆண்டு மாசி மாதம் யாழ் மடத்துக் குழுவின் தலைவிக்கு 2ஆவது ஆலோசகராக நியமிக்கப்பட்டா. அத்துடன் ஆங்கில வகுப்பில் படிப்பித்துக் கொண்டு இசை வகுப்பையும் நடாத்தி விடுதி மாணவிகளுக்கும் உதவி செய்தா. 1940ம் ஆண்டு பிறக்சீட் தாயாருக்கும் நல் மனத்தோடு உதவி செய்து வந்தா. 1940ம் ஆண்டு வைகாசி 31ந் திகதி "இறைவன் மாத்திரமே" என்ற அழைப்பையும் பெற்றுக் கொண்டா.

1946ம் ஆண்டுத் தொடக்கத்தில் கொழும்பில் ஒரு சத்திர சிகிச்சைக்குட்பட்டா. சுகமடைந்ததும் ஆடி மாதம் 21ந் திகதி ஐரோப்பாவுக்குச் சென்றா. உடனே அயர்லாந்துக்குச் சென்று தன் குடும்ப உறவினர்களுடன் 1947ம் ஆண்டு ஆவணி மாதம் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருந்தா. பின்பு றொக்வெரிக்குச் (Rock Ferry) சென்று தனது வருடாந்த தியானத்தைச் செய்த பின் வீட்டுக்குச் சென்று ஓய்வெடுத்தா. கார்த்திகை மாதத்தில் போர்டோவுக்குச் சென்று முதற் தலைவிகளைச் சந்தித்த பின் "மார்த்தியாக், லூர்துகெபிக்கு யாத்திரை செய்தா. எல்லா அருள்வரங்களையும் பெற்றவளாக உடல்நலம் பெற்று ஓர் இளம் மிஷனறிச் சகோதரியுடன் மார்செயித் துறைமுகம் சென்றா. இவ்விளம் சகோதரி சிஸ். மேரி டொலறோஸ் கொன்சாலெஸ். வேலை நிறுத்தம் நடைபெற்றதால் பயணம் தாமதப்பட்டு 1947ம் ஆண்டு மார்கழி 23ந் திகதி புறப்பட்டு 1948ம் ஆண்டு தை மாதம் 14ந் திகதி பல கஷ்டங்களின் மத்தியில் கொழும்பு வந்தடைந்தனர். பிரான்சில் இருக்கும்போது 1947ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17ந் திகதி "இறைவன் மாத்திரமே" என்ற ஆயத்த நிலையை அடைந்து கொண்டா.

1949ம் ஆண்டு தை மாதம் 13ந் திகதி குருநாகல் வகுப்பு மடத்தலைவியாக நியமிக்கப்பட்டா. சிஸ். மேரி அக்குவானஸ் முதல் உதவியாளராகவும், சிஸ். பிரான்சிஸ் சேவியர் இரண்டாம் உதவியாளராகவும் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டு உதவி செய்தார்கள். 1952ம் ஆண்டு தை மாதம் 13ந் திகதி 3 வருட முடிவில் களுத்துறைக்கு அனுப்பப்பட்டு அங்கு குழுத்தலைவியாகவும் பணிகளுக்கும் பொறுப்பாக இருந்தா.

பின்பு அங்கிருந்து நுகேகொடைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து ஐப்பசி மாதம் நாவலப்பிட்டிக்குச் சென்றா. அதே ஆண்டு மார்கழி மாதம் 18ந் திகதி பண்டத்தெருப்பு நவகன்னியர் இல்லத்திற்கு 2ஆவது உதவியாளராக நியமிக்கப்பட்டா. அங்கு நவகன்னியருக்கு இசையும், ஆயத்த கன்னியருக்கு ஆங்கிலமும் கற்பித்தா. அமைதியான வாழ்வை விரும்பாத படியால் அங்கிருந்து வெளியேறினா. 1955ம் ஆண்டு 70 வயது நிறைவடைந்ததும் விரும்பியதுபோல் பணி செய்ய முடியாத நிலை. தனக்குரிய இடம் அது இல்லை என்றா. தொடர்ந்து பணி செய்தபடியால் நரம்பைத் தாக்கியது. முதல் வருடத்தில் தியான ஒடுக்கம் செய்ய யாழ் மடத்துக்குச் செல்லவில்லை. தனக்கு வருடம் முழுவதும் தியானம் என்று சொன்னா. அவவின் பக்திப் போக்கு வளர்ந்தது

1956ம் ஆண்டு சித்திரை 2ந் திகதி தெகிவளைக்கு அனுப்பப்பட்டு 1959ம் ஆண்டு யாழ்ப்பாணம் சென்றா. 1961ம் ஆண்டு சித்திரை மாதம் ஐரோப்பா சென்று வீட்டுச் சந்திப்பின் பின்பு ஐப்பசி 9ம் திகதி சிக்கிளிங்கோல் (sicklinghall) சென்றடைந்தா..

1984ம் ஆண்டு மார்கழி 31ந் திகதி அங்கு இறைவனடி சேர்ந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sr. Maria Aloysia Mayer

## சிஸ். மரிய அலோசியா

ஜேர்மனியின் பவேரியா வட்டத்தில் உள்ள மிற்றர்கார்ஸ் என்னும் இடத்தில் 1888ம் ஆண்டு கார்த்திகை 3ந் திகதி லுட்விக் மேயருக்கும், யோசேப்பின் கும்வெலுக்கும் மகளாகப் பிறந்தா. தாய் தன் வீட்டு வேலையுடன் கணவனால் நடாத்தப்படும் பாடசாலையில் கைவேலையும் கற்பித்தாள். தந்தையின் வேலை காரணமாகப் பல இடங்களிலும் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

மாறிக்கு 7 வயது நடக்கும்போது மிற்றர்கார்ஸ் இடத்தை விட்டு பேர்ளிங் நகர் சென்று அங்கு 3 வருடங்கள் வசித்தார். பின்பு 4 வருடங்கள் உவில்ஸ்ரெக் என்னும் இடத்திலும், 6 வருடங்கள் ஒபென்வோட்டிலும் இறுதியாக 1908ம் ஆண்டு தொடங்கி இச்சில் என்னும் இடத்திலும் இருந்தா.

திரு. திருமதி மேயருக்கு 11 பிள்ளைகள் பிறந்தார்கள். இருவர் சிறு வயதில் இறந்து விட்டனர். எனவே இவவுக்கு 3 ஆண் சகோதரர்களும் 5 சகோதரிகளும் இருந்தனர். லுட்விக் மூனிச்சில் வேலை செய்தார். இளைஞரான செசில் ஒல்லாந்து தேசத்தில் வேலை செய்தார். யோசேப்பின் றோசாலி இருவரும் தந்தை வீட்டில் இருந்தனர். ஜேன், நெனோற்றிங்கில் போடிங்கில் இருந்தார். அன்ருவார் அல்காசிங் சிறிய குருமடத்தில் குருவாக வரப் படித்து ஆயத்தம் செய்தார். எலிசபெத், ஜான் இருவரும் பெற்றோருடன் இருந்தனர். (1909)

மாறி 7 வருடங்களாகத் தந்தையின் பாடசாலையில் படித்து வந்தா. பின்பு நெனோற்றிங்கில் உள்ள ஆங்கிலப் பெண்கள் சபையில் போடிங்கில் இருந்தா. 1899ம் ஆண்டு சித்திரை 22ந் திகதி முதல்நன்மை பெற்றா. மே 24ந் திகதி உறுதிப்பூசுதலும் பெற்றுக் கொண்டா. பின்பு ஒவ்வொரு மாதமும் அருட்சாதனங்களைப் பெற்றுப் பின் குழுவுக்குச் செல்லுமுன் 2 வருடங்களாகத் தினமும் திரு விருந்தில் பங்கு பற்றினா.

ஆங்கிலப் பெண்கள் பாடசாலையை விட்டு வெளியேறும் போது தனது இளமையைக் குழந்தைகளின் கல்விக்கு அளிக்க விரும்பிய தால் ஒரு வருடம் டொமினிக்கன் சபையில் உதவி ஆசிரியராக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல்நிலை இதற்கு இடமளிக்காதபடியால் தன் பெற்றோருடன் சிறிது காலம் செலவழித்தா. பலபேர் அடங்கிய தன் குடும்பத்திற்கு உதவி செய்ய ஒரு வீட்டில் இளம் பிள்ளைகளைக் கவனித்தா. 18 வயதானபோது முதல் முறையாகத் துறவு வாழ்வு பற்றிச் சிந்தித்தா. பெற்றோரைப் பிரிவது பற்றி இதுவரை நினைக்கவில்லை. எனவே இத்திட்டம் பற்றிக் கதைத்தபோது அவர்கள் விரும்பவில்லை. 2 வருடங்கள் போராட வேண்டியிருந்தது. இறுதியில் பெற்றோர் சம்மதித்தனர். அவவின் பாவசங்கீர்த்தனத்துக்கு உதவி செய்த வான்கொமறிச் குருவானவர் மூலம் திருக்குடும்ப சபை பற்றி அறிந்தா. அக்குருவானவரே எமது சபையில் சேர்வதற்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். சில மாதங்கள் தன் குடும்பத்துடன் செலவிட்டபின் மறியா அன்வேர் இல் (Anvers) உள்ள நவகன்னியர் இல்லம் சென்றா. உடனே 1909ம் ஆண்டு பங்குனி 4ந் திகதி நம்பிக்கை கிளைக்கு அனுப்பப்பட்டா.

ஆயத்த கன்னிகையாக இருந்தபோது அவவின் விசுவாசம் உறுதி கொண்டதாக விளங்கிற்று. தன்னைத் தியாகம் செய்து இறைவனை மட்டுமே மகிமைப்படுத்த விரும்பினா. நல்ல அறிவு, திறந்த மனப்பான்மை, சேவை செய்யும் உள்ளத்தைக் கொண்டிருந்தா. உயரமான தோற்றம். ஓய்வு வேளைகளில் அவவின் நல்ல குணங்களைக் காணலாம். அவவின் மொழியில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தா. தையல்வேலை, உடுப்புகளை ஒழுங்கு படுத்துதல் போன்ற வீட்டு வேலைகளை நன்றாகச் செய்ததுடன் பிரான்சியமொழி பேசுவதுடன் அழகான உறுப்பான கையெழுத்திலும் திறமையைக் காண்பித்தா.

குழந்தைகள், நோயாளர் பராமரிப்பை விரும்பினாலும் தூர தேசப் பணியை அதிகம் விரும்பினா. பாவிகள், சுதேசிகளின் மட்டில் மனமாற்றத்தை விரும்பினா. இந்த நோக்குடன்தான் திருக்குடும்பச் சபையில் சேர்ந்தா. உடல்நலக் குறைவாக இருந்தாலும் ஒரு போதும் குறை கூறாத பண்புடையவ. திறந்த வெளிப்பணிகள் அவவின் தேவையாக இருந்தது. 1909ம் ஆண்டு மார்கழி 25ம் திகதி நம்பிக்கை கிளையின் துறவற உடைபெற்று சிஸ் அலோசியா என்னும் பெயர் பெற்றா. தூர நாட்டுக்கு அனுப்ப முன் நவ கன்னியர் இல்லத்தில் உதவித் தாதியாகப் பணிபுரிந்தா. 1911ம் ஆண்டு ஆனி 26ந் திகதி முதல் வாக்குத்தத்தம் செய்தா. ஐப்பசி இறுதியில் போர்டோவில் சில நாட்கள் செலவிட்டா. இதன் வழியாக எமது சபையாகிய குடும்பத்தை அறிந்து கொண்டா. 1911ம் ஆண்டு கார்த்திகை 5ந் திகதி இலங்கைக்குச் செல்வதற்காக பொதுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்திற்கு வருகை தந்திருந்த பிறக்சீட் பூர் தாயாருடன் மார்செயி துறைமுகத்தில் இருந்து பயணமானார்கள்.

மார்கழி 6ந் திகதி யாழ்ப்பாணம் சென்றா. அங்கு நேரக்காப்பாளராகவும், பெரிய கோவில் உதவி சக்கிறிஸ்ரி வேலையும் செய்தா. 1914ம் ஆண்டு ஆனி 26ந் திகதி நித்திய அர்ப்பணம் செய்து கொண்டா. 1915ம் ஆண்டு ஆவணி மாதம் இளவாலைக்கு மாற்றம் பெற்று சென்றா. அங்கு தியோப்பில் தாயாருக்கு துணையாக இருந்தா. 1917ம் ஆண்டு பங்குனி மாதம் யாழ்குழுவுக்குத் திரும்பினா.

குருநாகல் வைத்தியசாலைக்கு ஆள் உதவி தேவைப்பட்டதால் 1923ம் ஆண்டு ஆடி 25ந் திகதி அங்கு சென்றா. அங்கு பணிபுரிய முடியாதபடியால் குழுவில் தையல், வேறு பணிகளில் உதவி புரிந்தா. பல வாரங்களாக நோயாளியான ஒரு சகோதரியைப் பராமரித்தா.

1924 மாசி மாதம் வரை பணிசெய்து தையல் பணியையும் ஏற்றுக் கொண்டா. ஐப்பசி 27ந் திகதி குருநாகல் பாடசாலைக்கு மாற்றம் பெற்று அங்கு நல்ல திறமையுடன் பணிபுரிந்தா. தையல் வேலையுடன் அநாதை இல்லத்திலும் சிறிது பொறுப்பெடுத்துச் சிங்கள மொழியையும் சிறிதளவு படித்துக் கொண்டா.

1926ம் ஆண்டு நல்ல உடல் நிலையுடன் தாதிப்பணி, தொழிற்கல்விப் பாடசாலையில் கைவேலை என்பவற்றில் ஈடுபட்டு திறமையுடன் சிந்தித்துப் பணியாற்றினா. 1935ம் ஆண்டு ஆடி 15ந் திகதி தனது பணிகளுடன் குழுவில் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டா. 1938ம் ஆண்டு மேற்கூறிய பணிகளுடன் பங்கிலுள்ள கோவிற் திருப்பணி உடைகளையும் பொறுப்பேற்றா. 1947ம் ஆண்டு 1 1/2 வருட காலமாக கால் நடக்க முடியாத நிலையில் கைத்தடியுடன் நடக்க நேரிட்டது. உடல்நிலை தளர்ந்து துன்புற்றாலும் தன் பணிகளைச் செய்தா. 1950ம் ஆண்டு குழுவில் குரு இல்லாதபடியால் திருப்பலிக்குப் பங்குக் கோவிலுக்கு போக வேண்டிய நிலை. கிழமை நாட்களில் செல்ல முடியாததால் திருவிருந்தும் இல்லாதபடியால் மகிழ்ச்சியற்ற நிலையில் இருந்தா. எனவே யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டா. அங்கு தினமும் மடத்தில் திருப்பலி நடைபெற்றது. 1950 ஆவணியில் யாழ் வந்தபடியால் உடல்நிலையும் சற்றுத் தேறியது.

1952ம் ஆண்டு உடல் நிலையில் சற்றுத் தளர்வு ஏற்பட்டாலும் தன் பணியைச் செய்தா. விழுந்தபடியால் இடது கால் நொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பா. கைவேலை, செயற்கைப் பூக்கள் செய்தல், மொழி படித்தல் போன்றவற்றில் ஈடுபட்டா. 60 வயது நிறைவு பெற்றது.

ஜேர்மன் ஆட்களைப் போன்ற திடகாத்திரமான உள்ளம். முழங்கால் மடக்க முடியாதநிலையில் நிற்க வேண்டும் அல்லது இருக்க வேண்டும். போரின் அழிவாலும் தன் சொந்த நாட்டை நினைத்து மனக் கவலை. கால் வழங்காத படியாலும் தன் நாட்டுக்குப் போக முடியாத நிலை கவலையைக் கொடுத்தது.

சபைத் தலைவி கிளேயார் டி யூலியன் இலங்கைக்கு வந்தபோது ஜேர்மனியில் உள்ள தன் குடும்பத்தை விமானமூலம் சென்று பார்த்துவர உத்தரவு கிடைத்தது. எனவே 1956ம் ஆண்டு ஆனி 27ந் திகதி கொழும்பில் இருந்து மியூனிக் புறப்பட்டு பவேரியா என்னும் தன் சொந்த இடத்தை அடைந்தா. புரட்டாசி 27ந் திகதி வரை அங்கிருந்து பிரான்சுக்குச் சென்று தலைவிகளைப் பார்க்க முடியவில்லை. இப்பயணம் அவவின் களைப்பை அதிகரிக்கலாம் என்று தடுக்கப்பட்டது. இது ஏமாற்றத்தை அளித்தாலும் தன் நாடு சென்ற மகிழ்வுடன் மீளவும் வந்து தனது கோவில் திருப்பணி உடைகள் தைக்கும் தையல் அறையில் வேலைகளைத் தொடங்கினா. உடல்நிலையும் தேறியது. 1963 பங்குனி மாதத்தில் விழுந்தபடியால் தொடையில் ஒரு முறிவு ஏற்பட்டது. ஒரு சத்திர சிகிச்சையும் நடைபெற்றது.

1977ம் ஆண்டு மாசி 27ந் திகதி யாழ்ப்பாணத்தில் இறைவனடி சேர்ந்தா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sr. St. Ramond - WRAFTER CATHERINE

## சிஸ். றேமன்ட் றாவ்ரர்

அயர்லாந்தில் உள்ள லீக்ஸ் மாவட்டத்தில் பொகேறாட் என்னும் இடத்தில் ஜோண் றாவ்ரருக்கும், அனிகீர்வனுக்கும் மகளாக 1893ம் ஆண்டு வைகாசி மாதம் 8ந் திகதி கத்தறின் பிறந்தா. பண்ணையாளர்களாகிய பெற்றோருக்கு 2 ஆண்கள் 3 பெண்களாக 5 பிள்ளைகள் பிறந்தார்கள். கத்தறின் நவ கன்னியர் இல்லம் செல்லும்போது ஒரு பெண் திருமணம் செய்திருந்தா. ஒரு பெண் வீட்டிலே பெற்றோருடன் இருந்தா. 2 ஆண்களும் பண்ணையில் தந்தைக்கு உதவி புரிந்தனர்.

கத்தறின் தனது கிராமத்தில் இருந்த தேசீய பாடசாலையில் கல்வி கற்றா. பின்பு லிஸ்காட் (Liscard) இலுள்ள எமது போடிங்கில் 2 வருடங்களைச் செலவழித்தா. தனது பத்தாவது வயதில் முதல் நன்மையும், மறு வருடத்தில் உறுதிபூசுதலும் பெற்றுக் கொண்டா. தனது கிறீஸ்தவ மறைக்குரிய கடமைகளைச் செய்வதில் பக்தி, பிரமாணிக்கத்துடன் விளங்கினா. பன்னிரண்டாவது வயதில் அவவுக்கு துறவற வாழ்வில் நாட்டம் பிறந்தது. ஆன்ம குருவானவரின் ஆலோசனையுடன் தன்னை ஆயத்தம் செய்ய (Liscard) இங்கு சென்றா. அங்கு பரீட்சையில் சித்தி அடைந்தா.

1911ம் ஆண்டு ஐப்பசி 17ந் திகதி லிஸ்காட் தலைவியின் அனுமதியுடன் கத்தறின் றொக்வெரி (Rock Ferry) யில் உள்ள ஆயத்த கன்னியர் இல்லம் சென்றா. உயரமான தோற்றமும் நல்ல குண இயல்புகளையும் கொண்டிருந்தா. 1912ம் ஆண்டு ஆவணி 9ந் திகதி (Sr. St. Raymond ) சிஸ். சென்ற் றேமன்ட் என்னும் பெயருடன் துறவற உடையைப் பெற்றுக் கொண்டா. நவசந்நியாச காலத்தை நிறைவு செய்து கொண்டு லீட்ஸ் (Leeds) என்னும் இடத்துக்குச் சென்றா. தான் நல்ல பயன் கொடுக்கும் துறவியாக வாழ முடிவு செய்து கொண்டா.

1914ம் ஆண்டு மாசி மாதம் 10ந் திகதி தனது முதல் அர்ப்பணத்தைச் செய்து கொண்டா. சில மாதங்கள் அங்கிருந்த பின் இலங்கையின் பணிக்கு நியமிக்கப்பட்டா. அமைச்சல், தாராள உள்ளத்துடன் இதை ஏற்றுக் கொண்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிஸ். மேரி இமெல்டா நெவில் உடன் பிரான்ஸ் சென்று தலைமை இல்லத்தில் சில வாரங்கள் செலவிட்டு இலங்கைக்குப் புறப்படத் தயாராக இருந்தார்கள். அங்கிருந்து லண்டனுக்குச் சென்ற போது ஜேர்மனியுடன் போர் தொடங்கியபடியால் பயணம்தடை செய்யப்பட்டது. எனவே அங்கு தங்கிக் கடற் பயணத்திற்காகக் காத்திருந்தனர். சிலநாட்கள் (Kilburn) கில்பேணில் தங்கிப் பலவாரங்கள் (woodford) வூட்வோட் மடத்தில் செலவிட்டபின் 1914ம் ஆண்டு ஐப்பசி மாத நடுப்பகுதியில் இலங்கைக்குப் புறப்படத் தீர்மானிக்கப்பட்டது. வூட்வோட் மடத்தில் தங்கியிருந்த காலத்தில் சில வேலைகளைப் பழகிக் கொண்டார்.

பின்பு இருவரும் போர்டோவுக்கு வந்து ஒரு நாள் செலவிட்டனர். யுத்த காலத்தில் (Generalate) தலைமை இல்லம் ஸ்பெயினில் உள்ள (varcarlos) வார்கார்லோஸ் என்னும் இடத்தில் இயங்கியது. எனவே 36 மணித்தியாலங்கள் சபைத் தலைவி "மாறி டிலா நற்றிவிற்றி லியோனே" உடன் தங்கி 17ந் திகதி காலை புறப்பட்டு "மார்செயி" துறைமுகத்தில் இருந்து 1914 ஐப்பசி 18ந் திகதி இலங்கை நோக்கிச் சென்றனர்.

இலங்கைக்கு வந்து சில நாட்களின்பின் யாழ்ப்பாணம் சென்றிருந்தா. அங்கு சில வாரங்களைச் செலவழித்தபின் கொழும்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பரீட்சை இல்லாது மாணவர்களைச் சேர்த்தபடியால் தை மாத நடுப்பகுதியில் அங்கு சென்று வகுப்புகளை ஆரம்பித்தா. பம்பலப்பிட்டி குழுவில் இருந்து தனது துறவறக் கடமைகளையும் அனுசரித்துத் தனது படிப்பையும் மேற்கொண்டா. சான்றிதழ் பெற்றுச் சபைக்கு உபயோகமுள்ள சகோதரியாக வாழ முயற்சித்தா.

1916ம் ஆண்டு மார்கழிக் கடைசியில் யாழ்ப்பாணம் வந்து தன் பணியைத் தொடங்கினா. ஆசிரிய பயிற்சிக் கல்லூரிப் பரீட்சைப் பெறுபேற்றில் 3ம் தரச் சான்றிதழும் பெற்றுக் கொண்டா. 1917ம் ஆண்டு மாசி மாதம் 10ந் திகதி நித்திய அர்ப்பணமும் செய்து கொண்டா. 1919ம் ஆண்டு தனது கல்விப் பணியை மேற்கொண்டா. தியாக மனப்பான்மையுடன் சேவை செய்தாலும் படிப்பிக்கும் ஆற்றல் நிறைவாக இருக்கவில்லை.

1926ம் ஆண்டு அவவின் உடல்நிலையும் தளர்வடைந்தது. ஆங்கில பாடசாலையில் படிப்பித்துக் கொண்டிருக்கும்போது Music painting பாடங்களில் திறமை இருந்தபடியால் 2ந் தரச் சான்றிதழையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொண்டா. 1938ம் ஆண்டு music கற்பித்துக் கொண்டு பிள்ளைகளையும் மேற்பார்வை செய்து வந்தா.

1940ம் ஆண்டு தை மாதம் 13ந் திகதி அனுராதபுரிக்கு அனுப்பப் பட்டா. அங்கு ஆங்கில பாடசாலையின் பொறுப்பை ஏற்றுப் பணி புரிந்தா. 1946ம் ஆண்டு தை மாதம் 11ம் திகதி தலைவியின் 2ஆவது ஆலோசகராக 7 வருடங்கள் இருந்து பாடசாலையின் அதிபராகவும் கடமை ஆற்றினா. அனுராதபுரத்தில் இருந்து பணி செய்தபோது அவவின் நற்பண்புகளாலும் முன்மாதிரிகையான வாழ்வினாலும் அங்கு ஏற்பட்ட துன்பங்கள் எல்லாம் மறைந்து போயின. 1946ம் ஆண்டு சித்திரை 18ந் திகதி தேவனின் சொந்த குமாரத்தி நிலைக்கு அழைப்புப் பெற்றா. 1948ம் ஆண்டு வைகாசி 2ந் திகதி குழுவுக்குப் பொருளாளராக நியமிக்கப்பட்டா. 1949ம் ஆண்டு இலங்கைப் பணியில் 25 வருட நிறைவில் ஐரோப்பாவில் சில மாதங்களைச் செலவழித்தா. அயர்லாந்தில் தன் குடும்பத்தினருடன் தங்கியபின் தலைமை இல்லத்துக்கும் சென்று அங்கிருந்து லூர்துகெபி, மார்த்தியாக் என்னும் இடங்களுக்கும் யாத்திரை செய்தா. லீவு நாட்கள் முடிவடைந்ததும் அனுராதபுரம் சென்று நல்ல இறைவனுக்கும், தன் தலைவிகட்கும் பெற்றுக் கொண்ட எல்லா நன்மைகளுக்கும் இறைவனுக்கு நன்றிகூறி சாட்சியாக வாழ தீர்மானித்தா.

1950ம் ஆண்டு தை மாதம் 13ந் திகதி அனுரதபுரம் சென்று அங்கு 5 ஆவது முறையாகத் தலைவியாகப் பணியாற்றிய மாறி தியோப்பன் குக்ரின் (Marie Theophan Huctin) தாயாருக்குப் பதிலாகப் பணியை மேற் கொண்டா. இவவுக்குத் துணையாகத் தாயாரும் தன் அனுபவத்தாலும் முன்மாதிரிகையாலும் உதவி செய்தா. 1951ம் ஆண்டு தியோப்பன் தாயாரிடமும் ஊக்கம் பெற்றுத் தன் பணியை நன்றாகச் செய்து வந்தா. தை மாதம் 23ந் திகதி "தேவனின் சொந்தக் குமாரத்தி" என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டா. அங்கு 3 வருடங்கள் முடிந்ததும் 1953ம் ஆண்டு தை மாதம் 13ந் திகதி இளவாலை மடத்துக்குத் தலைவியாக அனுப்பப்பட்டா. 1955ம் ஆண்டு தமிழ் சகோதரிகளுடன் நன்கு சேவை செய்து அவர்களால் அன்பு செய்யப்பட்டா. தன் சொந்த முயற்சியால் தமிழில் தேர்ச்சி பெற்றா.

1956ம் ஆண்டு 3 வருடங்கள் முடிவடைந்தன. சபைத்தலைவி "கிளேயார் டி ஜீசெஸ் யூலியன்" வரவிருப்பதால் அவவை மறுமுறையும் புதுப்பிக்க முடியுமென உதவித் தலைவி எண்ணியிருந்தா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவவும் இவவின் சாந்த குணத்தைப் பார்த்து 1956ம் ஆண்டு தை மாதம் 12ந் திகதி மீளவும் புதுப்பித்தா.

1958ம் ஆண்டு சபைத்தலைவி சலோமைத் தாயாரை ஐரோப்பாவுக்கு அழைக்க விரும்பியதால் இவவை அங்கு தலைவியாக நியமிக்க விரும்பினர். எனவே வைகாசி மாதம் 2ந் திகதி அனுராதபுரிக்குச் சென்றா. புரட்டாசி மாதம் 12ந் திகதி யாழ் மாகாணத் தலைவிக்கு 2 ஆவது ஆலோசகராக நியமிக்கப்பட்டா.

1961ம் ஆண்டு ஐரோப்பாவுக்குச் சென்று வீட்டுச் சந்திப்பு முடிய புரட்டாசி மாதம் 14ந் திகதி வூட்வோட்டில் (Wood Ford) தங்கி இருந்தா. கிறிஸ்மஸ் லீவின்போது தலைமையகம் சென்று 1962ம் ஆண்டு அனுராதபுரம் வந்து சேர்ந்தா. 1967ம் ஆண்டு கரம்பன் மடத்துக்குத் தலைவியாக நியமிக்கப்பட்டா. 1968ம் ஆண்டு மார்கழி 30ந் திகதி அனுராதபுர மடத்திற்குத் தலைவியானா. 1970ம் ஆண்டு ஐரோப்பாவுக்குச் சென்று கிளேனுக்கு(Clane) அனுப்பப்பட்டா. 1972ம் ஆண்டு சிக்கிளிங் கோலுக்கு (Sicklinghall) மாற்றப்பட்டா. 1974ம் ஆண்டு மறுபடியும் கிளேனுக்கு (Clane) அனுப்பப் பட்டுத் தனது வயோதிப காலத்தைச் செலழித்து 1984ம் ஆண்டு மாசி மாதம் 20ந் திகதி இறைவனடி சேர்ந்து விட்டா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## St. Maria de la Conception - Orriere Maria

## சிஸ். மரிய டி லா கொன்செப்ஷன்

பிரான்சில் உள்ள புனித கோ்வே (St M. Herve) என்னும் இடத்தில் பசில் ஒறியா், மாறி பான் என்னும் தம்பதியருக்கு மூத்த மகளாக 1901ம் ஆண்டு பங்குனி 21ந் திகதி மாறி பிறந்தா. பசில், ஆஞ், விக்ரா் என்னும் 3 ஆண் பிள்ளைகளையும் மாறி, ஆஞ்சல், பேணடேற் என்னும் 3 பெண் பிள்ளைகளையும் கொண்ட விவசாயக் குடும்பமாக பிவாடியா் என்னும் இடத்தில் வசித்தனா். மாதம் ஒரு முறை அருட்சாதனங்களைப் பெற்று பக்தி உள்ள கிறிஸ்தவா்களாகவும் மாலைச் செபத்துடன் செபமாலையில் சில காரணிக்கங்களைத் தினமும் ஓதி நல்ல கத்தோலிக்க குடும்பமாகத் திகழ்ந்தாா்கள்.

சிறு வயதில் இருந்தே இவ்விதமான பக்தி முயற்சிகளைப் பெற்றுக் கொண்ட மாறி ஆறு வயதில் புனித கோ்வேயில் உள்ள எமது பாடசாலைப் படிப்பினைகளைப் பெற்றுக் கொண்டா. 9 வயதில் தனிமையாக முதல் நன்மை பெற்றுக் கொண்டா. எனினும் சிறுவா்களோடு பொதுவாகப் பெறுவதற்கும் தன்னை ஆயத்தம் செய்தா. ஒரு நல்ல குருவானவா் இவவை ஆயத்தப்படுத்தினாா். ஓய்வான நேரங்களிலும் பாடசாலை செல்லும்போதும் தன் சகோதரா்களைப் பராமரிக்கும்போதும் செபமாலை ஓதுவா. தேவதாய் இவமேல் அருளைப் பொழிந்து ஒரு நல்ல வாழ்வு வாழ்வதற்கு இறை அழைத்தலைப் பெற்றுக் கொண்டா.

இந்த அழைத்தலைக் கண்டு பெற்றோா் மகிழ்ந்தனா். ஒரு நாள் வேலை காரணமாக பாடசாலை செல்ல முடியாது மாறி வருந்துவதைக் கண்டு அவவின் தந்தை 'நீ பெரியவளானதும் துறவியாக வரும்போது பாடசாலை சென்று படிக்க நேரம் வரும்' என்றாா். எனவே அவவும் தன் ஆசையை வெளிக் காட்டினா. புனித கோ்வே என்னும் இடத்தில் 5 வருடத்திற்கொரு முறை ஆயரின் சந்திப்பு இடம் பெறும். 1915ம் ஆண்டு சித்திரை 27ந் திகதி தன் சகோதரன் பசில் தங்கை ஆஞ்சல் உடன் இவவும் உறுதிபூசுதல் பெற்றுக் கொண்டா. அதே வருடத்தில் பாடசாலை செல்வதையும் நிற்பாட்டினா. உறுதிப்பூசுதலின் பின்பு சில மாதங்களால் ஒரு தியான ஒடுக்கத்தில் பங்கு பற்றித் தன் துறவு நிலையை உறுதிப்படுத்தினா. அத்துடன் தினமும் ½ மணித்தியாலம் நடந்து சென்று திருப்பலியில் பங்குபற்றித் திருவிருந்து பெற்றும் அருட்சாதனங்களிலும் அடிக்கடி பங்கு பற்றினா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் உலகப் போர் மூண்ட காலத்தில் விவசாய வேலைகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டது. மாறி வீட்டில் இருந்து தங்கள் சொந்த வேலைகளையும் செய்து அயல் வீட்டில் இருப்பவர்களுக்கும் உதவி செய்தா. இதேவேளை இந்த நேரம் புறப்படுவதற்கு ஏற்றதல்ல என்று உணர்ந்தார். எனினும் ஒரு நாள் புறப்படத் தந்தையிடம் கேட்டவேளை உன் சகோதரன் வளர்ந்து விட்டான் அவன் எனக்கு உதவி செய்ய முடியும். எனவே ஒன்றும் உன்னைத் தடை செய்யாது என்றார். எனவே மகிழ்வுடன் பழைய ஆசிரியர்களுடன் சேர்ந்து ஆசிரியப் பணிக்குத் தன்னைத் தயார் செய்தா. சாலோன் (chalons) என்னும் இடத்தில் இடம் கிடைத்தாலும் தூரமும் குண்டுத் தாக்கமும் பெற்றோருக்கு விருப்பமின்மையால் தன் இடத்திலேயே இருந்தா.

1916ம் ஆண்டு கார்த்திகை 3ந் திகதி ஒரு சிறிய ஒழுங்கு எழுதி தன் படிப்பை மேற் கொண்டா. ஆலயப்பணி, பீடஅலங்காரம் வேறு வேலைகளுக்குத் தன்னைக் கையளித்தா. பெரிய லீவு காலங்களில் 12 நாட்கள் தன் வீடு சென்று பெரிய வேலைகளுக்கு உதவி செய்வா. பின் நகருக்கு (கேர்வே) வருவா. 2 வருடங்கள் கடந்தும் படிப்புத் திருப்தியளிக்கவில்லை. தொடர்ந்து படிப்பு தேவையாயிற்று. எனவே பரீசில் உள்ள றுடிமிலானில் எமது இல்லத்தில் 1919ம் ஆண்டு மாசி 3ந் திகதி வந்து சேர்ந்தா. எனினும் ஆடி மாதத்தில் நடைபெற்ற பயிற்சியில் சித்தியடையவில்லை.

தலைநகரில் மரியாயின் பிள்ளைகள் சபையில் செலவழித்த காலம் அவவுக்கு பாதை திறந்தது. பிரித்தானிக்குச் சென்றபோது 6 கிழமைகள் பெற்றோருடன் செலவழித்தா. அதுவே பெற்றோருடன் கடைசியாகச் செலவிட்ட காலம். ஆடி மாதக் கடைசியில் மாறி டிலா கொன்செப்ஷன் டெனிஸ் தாயார் கேர்வேக்கு வந்தபோது போர்டோவுக்கு அழைத்துச் செல்ல விரும்புவதைத் தெரிவித்தா. முதலில் ஆச்சரியப்பட்டாலும் பின் மகிழ்வுடன் தன் குடும்பத்திடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டா. முதலில் போர்டோவில் உள்ள றுகஸ்ரோன் என்னும் இடத்தில் சில கிழமைகள் செலவழித்தா. ஆயத்தக் கன்னிகையாக வரமுன் லூர்துகெபிக்கு யாத்திரை செய்தா. 1919ம் ஆண்டு புரட்டாசி 5ந் திகதி சென் பியர் தலன்ஸ் சென்று ஆசிரியர் பகுதிக்குச் சென்றா. நல்ல உள்ளத்துடன் எல்லா வகையான வேலையிலும் ஆர்வத்துடன் செயற்பட்டா. குழந்தைகளை நேசித்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறி, மாசில்லா உற்பவக்கிளையில் 1920ம் ஆண்டு பங்குனி 25ந் திகதி துறவற உடுப்புப் பெற்று மாறி டிலா கொன்செப்ஷன் என்னும் பெயரைப் பெற்றுக் கொண்டா.

சாந்தமான திடமான முக வடிவையும், உயரமான தோற்றத்தையும் கொண்டிருந்தா. சாலோன் போடிங் இல்லத்திற்கு 1921ம் ஆண்டு பங்குனி மாதம் வந்து புரட்டாசி 26ந் திகதி முதல் வாக்குத்தத்தம் செய்தா. இவவில் அதிகாரத் தன்மை குறைவுபட்டாலும் இவவின் பக்தி தியாகம் என்பவற்றை பிள்ளைகள் மதித்தனர். எனவே தன்னை அறியாது நன்மை செய்தா.

இலங்கைப் பணிக்கு சகோதரிகளின் தேவை வேண்டியிருந்ததால் சபைத்தலைவி இவவின் விருப்பை அறிந்து பிறக்சீட் தாயாருடன் அனுப்ப முடிவு செய்தா. 1921ம் ஆண்டு மார்கழி 31ந் திகதி கப்பல் எடுத்தனர். கொழும்பை வந்தடைந்ததும் பம்பலப்பிட்டியா மடத்தில் சக்கிறிஸ்ரி வேலையும் தையல் வேலையும் செய்தா.

1922 புரட்டாசி 26ந் திகதி தன் வாக்குத்தத்தத்தைப் புதுப்பித்துக் கொண்டா. இளவாலையில் பிறக்சீட் தாயார் அவவுக்கு துணையாக இருந்தா. நல்ல குணம், பக்தி இலகுவான தொடர்புகளைக் கொண்டிருந்தபடியால் தன் கடமைகளை நன்றாகச் செய்தா. 1924 ஆடி 26ந் திகதி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டா. சக்கிறிஸ்ரி, தையல் வேலை, தமிழும் படித்தா. 1924 தை 11ந் திகதி யாழ்ப்பாணத்தில் தியான இறுதி நாளில் நித்திய அர்ப்பணம் செய்தா. 19ந் திகதி இளவாலைக்கு மாற்றம் பெற்றா. மடத்துத் தலைவியுடன் தமிழ் ஆயத்தக் கன்னியருக்கு உதவி செய்தா.

1925ம் ஆண்டு ஆனி 29ந் திகதி 'இறைவன் மாத்திரமே' என்ற அழைப்புப் பெற்றா. 1926ம் ஆண்டு சக்கிறிஸ்ரி வேலையுடன் நவகன்னியரையும் மேற்பார்வை செய்தா. தியாகத்துடன் பணிபுரிந்ததால் நவகன்னியரால் நேசிக்கப்பட்டா. 1929ம் ஆண்டு தை 27ந் திகதி 'இறைவன் மாத்திரமே' என்ற நிலைக்கு ஊக்குவிக்கப் பட்டா. 1931ம் ஆண்டு மாசியில் தமிழ் நவகன்னியருக்குப் பொறுப்பாக இருந்த தியோப்பில் தாயாரின் பொறுப்பை ஏற்றுக் கொண்டா. மொழி நன்கு தெரியாதபடியால் பயிற்சிகள் ஒழுங்குகளை விளங்கப்படுத்த முடியாதிருந்தது. எனினும் அவவின் தியாக சேவையை இறைவன் ஆசீர்வதித்தார். தியோப்பில் தாயார் அங்கு இருந்தபடியால் அவவுக்கு பக்கத் துணையாக இருந்தா. 1934 வைகாசி 11ந் திகதி இளவாலை மடத்துத் தலைவியின் முதலாவது உதவியாளராகவும் நியமனம் பெற்றா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சகோதரிகளின் தியான நாட்களின் இறுதியில் 1936ம் ஆண்டு மார்கழி 18ந் திகதி லியோனித் தாயார் இவவை தேவனின் சொந்தக் குமாரத்தியாக ஏற்றுக் கொண்டா.

இதனால் புதிய சக்தி பெற்றவராக தியாகத்துடன் இளவாலைப் பணியைத் தொடர்ந்தா. 1938ம் ஆண்டு நல்ல உடல்நலத்தோடு முதலாவது உதவியாளராகவும் நவகன்னியரின் பொறுப்பு, சக்கிறிஸ்ரி வேலை, ஐரோப்பிய சகோதரிகளின் உடுப்புகள் தைத்தல் என்னும் பணிகளைச் செய்து வந்தா. 1947ம் ஆண்டு முதலாவது உதவியாளராகவும் நவகன்னியர், ஆயத்தக் கன்னியரின் பொறுப்பு, நோயாளரான சகோதரிகளைக் கவனித்தல் போன்ற பணிகளை நல்ல அனுபவத்தோடும் பயபக்தியோடும் ஆற்றி வந்தா. 1950ம் ஆண்டு ஆடி மாதத்தில் பிரான்சில் தன் குடும்பத்தைச் சந்தித்து ஆறுதல் அடைந்தா. சிறிது காலம் தலன்ஸ் தலைமை இல்லத்தில் செலவழித்தா. லூர்து கெபிக்கும் மார்த்தியாக்கிற்கும் யாத்திரை செய்தா. சென் ஆன் தாயார் வென்னப்புவா நவகன்னியருக்குப் பொறுப்பாக இருந்தபடியால் இருவரும் பயணம் செய்தனர். கால தாமதத்தை ஈடுசெய்ய விமான மூலம் இலங்கை திரும்ப உத்தரவு பெற்றனர். புரட்டாசித் தொடக்கத்தில் றோமுக்குச் சென்று யூபிலி வருடத்தைக் கொண்டாடிய பின் இலங்கைக்கு விமானம் எடுத்தனர். யாழ்ப்பாணம் திரும்பிய பின் இளவாலையில் நவ கன்னியருக்கு நல்ல பிதாவின் ஆன்மீக வாஞ்சையைப் பகிர்ந்து கொண்டா. 1952ம் ஆண்டு நல்ல உடல்நிலையோடும் ஆங்கிலம், தமிழ் பேசக் கூடிய தேர்ச்சியோடும் நவகன்னியர் தலைவியாகவும், தலைவியின் முதலாவது உதவியாகவும் இருந்து அனுபவத்தோடும், ஆற்றலோடும் பணியை ஆற்றினா. மார்கழி 18ந் திகதி பண்டத்தெருப்பில் புதிய நவகன்னியர் இல்லம் திறக்கப்பட்டது. எனவே அக்குழுவுக்கு தலைவியாகவும், நவகன்னியர் தலைவியாகவும் நியமிக்கப் பட்டா. 1957ம் ஆண்டு நவகன்னியர் தலைவியாக இருந்தும் பொதுச் சங்கத்தின் பிரதிநிதியாக பிரான்ஸ் சென்று தன் குடும்பத்தவர்களையும் சந்தித்து வந்தா. 1958ம் ஆண்டு அதிகார பூர்வமாக 3 வருடத்திற்கு நவகன்னியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டா. புதிய ஒழுங்குத் திட்டத்தின்படி 1961 புரட்டாசி 18ந் திகதி 2ம் முறையும் 1964ம் ஆண்டு மூன்றாம் முறையும் புதுப்பித்தா. அதேவேளை குழுத் தலைவிக்கு முதல் உதவியாளராகவும் இருந்தா.

1966ம் ஆண்டு நீண்டகால நவகன்னியர் பொறுப்பில் இருந்து விலகி தை மாதம் 5ந் திகதி யாழ் சின்ன மடத்திற்குத் தலைவியாக நியமிக்கப் பட்டா. சித்திரை 15ந் திகதி தலன்ஸ் தலைமை இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று புரட்டாசி 7ந் திகதி இலங்கை திரும்பினா. புரட்டாசி 14ந் திகதி மன்னார் மடத்துத் தலைவியாகவும் பொருளாளராகவும் நியமிக்கப் பட்டா. 1969ம் ஆண்டு மடுக் குழுவுக்குத் தலைவியாக நியமிக்கப் பட்டா. 1970ம் ஆண்டு யாழ் மடத்துக்கு அனுப்பப் பட்டு 1971ம் ஆண்டு மயிலிட்டி புனித சூசையப்பர் மடத்துக்குத் தலைவியாக நியமிக்கப் பட்டு வயோதிப சகோதரிகளுக்கு உதவியாக இருந்தா. 1975ம் ஆண்டு யாழ் மடத்தில் இளைப்பாறி 1978 வைகாசி 24ந் திகதி இறந்தா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MC. Cormick Hanna - Sr. Mary Clare
# சிஸ். மேரி கிளேயா

அயர்லாந்தில் உள்ள காவான் கிங்ஸ் கோட்டில் (Kings court Co cavan)1905ம் ஆண்டு தை மாதம் 19ந் திகதி பிறந்தா. அவவின் தந்தை யூஜின் புகையிரதப் பாதையில் வேலை செய்தார். மாகிறெற் O'Brien நல்ல தாயாக இருந்து குடும்பத்தில் வீட்டு வேலைகளைச் செய்து வந்தா. குடும்பத்தில் 5 பெண் பிள்ளைகள். மூத்த பெண் ஆசிரியையாகவும், அடுத்த பெண் வர்த்தக நிலையத்திலும் வேலை செய்தார்கள். 2 இளம் பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று வந்தனர். அப்போது ஹான்னா நவகன்னியர் இல்லம் சென்றா.

நகரில் உள்ள தேசீய பாடசாலையில் 9 வயதுவரையும் கல்விகற்று வந்தா. குடும்பம் டப்ளின் நகரில் வாழ்ந்தபடியால் 5 வருடங்கள் அங்கு கல்வி கற்றுக் கொண்டா. 7 வயதில் முதல் நன்மையும் அடுத்த வருடம் உறுதிபூசுதலும் பெற்றுக் கொண்டா. 16 வயதில் துறவற வாழ்வை விரும்பியபடியால் ஆன்ம குருவானவர் திருக் குடும்பச் சபையைப் பற்றி அறிமுகம் செய்தார். எனவே அருட்சகோதரி அம்புறோஜ் வரன் (Ambrose Farren) இடம் தூரப் பணிக்குத் தன்னை ஒப்படைத்தா. தலைவிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒரு மாதகாலம் கில்போர்ண் (Killiburn)இல் தங்கி றொக்வெறி (Rock Ferry)யில் உள்ள நவகன்னியர் இல்லத்திற்கு 1922ம் ஆண்டு ஆவணி மாதம் 17ந் திகதி சென்றா. அமைதியான சிறிய தோற்றமும், பயந்த சுபாவமும் முயற்சியுமுள்ள சகோதரியாக விளங்கினா.

1923ம் ஆண்டு சித்திரை மாதம் 22ந் திகதி சிஸ். மேரி கிளேயா என்னும் பெயருடன் துறவற உடை பெற்றுக் கொண்டா. திறந்த மனப்பான்மையும், எளிமையான வாழ்வும், உணர்வுப்பூர்வமான வாழ்வையும் கொண்டு நவசந்நியாச காலத்தில் முதிர்ச்சியடைந்து விளங்கினா. நம்பிக்கைக்குரிய ஆளாகவும் போதிய அறிவு ஆற்றலுடன் வாழ்ந்து வந்தா.

1924ம் ஆண்டு சித்திரை மாதம் 20ந் திகதி தனது முதல் அர்ப்பணம் செய்து, தனது வீட்டிற்கும் சென்று போர்டோ தலைமை இல்லத்தில் ஒரு மாதம் செலவழித்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு இலங்கை செல்வதற்கு தாராள உள்ளத்துடன் சம்மதித்து ஆனி 5ந் திகதி 'மார்செயி' துறைமுகத்தினூடாக 'அமாசோன்' கப்பலில் கொழும்பை வந்தடைந்தா. ஆனி 22ந் திகதி கொழும்புக்கு வந்து யாழ்ப்பாணம் செல்வதற்குப் பணிக்கப் பட்டு அங்கு சென்று ஆங்கில வகுப்பில் படிப்பித்தா.

1925ம் ஆண்டு கல்விப் பணியை மேற்கொண்டா. அமைதியான போக்கு.அளவாக, அதிகம் பேசமாட்டா. குழுவிலும் பிள்ளைகள் மத்தியிலும் அன்புடன் விரும்பி வரவேற்கப்பட்டா. இசையும் தெரிந்தபடியால் தியாகத்துடன் குழுவிலும் பணிபுரிந்தா. 1927ம் ஆண்டு வைகாசி 1ந் திகதி தனது நித்திய அர்ப்பணத்தைச் செய்து கொண்டா. 1929ம் ஆண்டு ஆவணி மாதம் ஆரம்ப பரீட்சையில் சித்தி பெற்று ஆசிரிய தராதரப் பத்திரமும் பெற்றுக் கொண்டா. 1930ம் ஆண்டு சித்திர பாடத்திலும் சித்தி பெற்றா. 1934ம் ஆண்டு பங்குனி 19ந் திகதி "இறைவன் மாத்திரம்" என்னும் நிலைக்கு ஊக்குவிக்கப் பட்டா.

1938ம் ஆண்டு உடல் நிலையில் தளர்ச்சி ஏற்பட்டது. குடல்வளரியில் (appendicite) சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. இருதய நோயும் ஏற்பட்ட படியால் 6 மாத ஓய்வு எடுக்கும்படி வைத்தியர் ஆலோசனை கூறினார். படிப்படியாகச் சுகமடைந்து வந்தா. அதன்பின்பு மேல் வகுப்புகளிலும் கல்விப் பணியை மேற்கொண்டா. இசை (Music) கற்பிப்பதிலும் பிள்ளைகளை மேற்பார்வை செய்வதிலும் தாய்மை உள்ளத்துடன் பிள்ளைகளுடன் பழகிக் கொள்வா. முன் மாதிரியாக வாழ்ந்த நல்ல துறவியாக தியாக வாழ்வை மேற்கொண்ட சிஸ். கிளேயாவிடம் ஆரோக்கியமான உடற்சுகம் குறைவாகக் காணப்பட்டது. 1940ம் ஆண்டு வைகாசி 31ந் திகதி 'இறைவன் மாத்திரமே' என்ற ஆரம்ப நிலைக்கு உயர்த்தப் பட்டா. 1947ம் ஆண்டு பங்குனி 19ந் திகதி சபைத்தலைவியின் பிரதிநிதி யாழ் வருகை தந்தபோது "இறைவனின் குமாரத்திகள்" என்னும் நிலைக்கு உயர்த்தப் பட்டா.

1950ம் ஆண்டு கார்த்திகை 25ந் திகதி யாழ் மடத்தின் பொருளாளர் ஆக நியமிக்கப்பட்டா. 1953ம் ஆண்டு கோடைக் காலத்தில் ஐரோப்பாவுக்குச் சென்று வந்தபின் ஐப்பசி 24ந் திகதி பொருளா ளருடன் தலைவிக்கு 2ஆவது ஆலோசகராகவும். நியமிக்கப்பட்டார். 1955ம் ஆண்டு தை 13ந் திகதி முதலாவது ஆலோசகராக நியமனம் பெற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1958ம் ஆண்டு ஆடி மாதம் 13ந் திகதி யாழ் மடத்துக்குத் தலைவியாக நியமிக்கப்பட்டா. புரட்டாசி 12ந் திகதி யாழ் மாகாண அமைப்பைப் பெற்றது. (Jaffna Province) மாகாணத் தலைவிக்கு 3ஆவது ஆலோசகராக நியமிக்கப் பட்டா. 1959ம் ஆண்டு இருதய வியாதிக்காக கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றா. 1961ம் ஆண்டு 2 ஆவது மாகாண ஆலோசகராக நியமனம் பெற்றா. 1963ம் ஆண்டு பொதுச் சங்கத்தின் பிரதிநிதியாகத் தெரியப்பட்டு வைகாசி 16ந் திகதி இங்கிலாந்துக்குச் சென்று வீட்டுச் சந்திப்பின் பின்பு பொதுச்சங்கத்திலும் பங்குபற்றினா. கார்த்திகை 20ந் திகதி யாழ்ப்பாணம் வந்தபின் 1964ம் ஆண்டு ஆடி 12ந் திகதி மேலும் 6 மாதங்களுக்கு இப்பதவி நீடிக்கப்பட்டதுடன் முடிவுற்றது. 1970ம் ஆண்டு வைகாசி 1ந் திகதி தலைவிக்கு முதலாவது உதவியாளராக நியமிக்கப் பட்டா. 1971ம் ஆண்டு சிக்லிங்கோல் (Sicklinghall) சென்று 1973ம் ஆண்டு அம்மடத்திற்கு தலைவியாக பதவியேற்றா. 1980ம் ஆண்டு இங்ஸ் றோட் மடம் சென்றா. (Ings Road). 1993 மாசி 16ந் திகதி சிக்கிளிங்கோலில் இறந்தா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sr. M. Baptist - Magner Nora

## சிஸ். மேரி பப்ரிஸ்ற்

நோறா அயர்லாந்தில் உள்ள கிலாவுலென் மலோ சீகோக் என்னும் இடத்தில் உவில்லியம் மக்னெர், அன்னாபாக்கிளே என்னும் தம்பதியருக்கு மகளாக 1905ம் ஆண்டு பங்குனி 30ந் திகதி பிறந்தா. 4 ஆண்கள், 3 பெண்களைக் கொண்ட குடும்பம். தகப்பன் கடை வைத்து நடத்தினார். தாய் வீட்டு வேலைகளைக் கவனித்து வந்தா. நோறா நவகன்னியர் மடம் செல்லும்போது ஒரு பெண் அமெரிக்காவில் ஆளுனராக இருந்தா. மற்றவர்கள் பாடசாலைக்கு சென்று வந்தனர். கிலாவுவென் என்னும் இடத்தில் கல்வி பயின்றா. 3 வருடங்கள் இரக்கத்தின் சபைச் சகோதரிகளின் பாடசாலையில் செலவிட்டா.

9 வயதில் முதல் நன்மையும் 16 வயதில் உறுதிபூசுதலும் பெற்றுக் கொண்டா. 16 வயதில் துறவற வாழ்வை நோக்கி ஈர்க்கப்பட்டா. தென்னாபிரிக்காவில் இருந்து வந்த அம்புறோஸ் தாயார் அழைத்தல்களுக்காகப் பாடசாலை சென்றபோது நோறா மறைப்போதகப் பணிகளுக்குத் தன்னை அர்ப்பணித்தா. 'கில்பேணில;' ஒரு மாதம் செலவிட்டபின் 1922ம் ஆண்டு ஆவணி 1ந் திகதி 'றொக்வெறி'யில் உள்ள ஆயத்த கன்னியர் மடத்திற்குச் சென்றா. நல்ல உடல்நலமும், உயரமான தோற்றமும், கண் பார்வை மங்கியதால் கண்ணாடியும் போட்டிருந்தா.

1923ம் ஆண்டு சித்திரை 22ந் திகதி துறவற உடை பெற்று சிஸ். மேரி பப்ரிஸ்ற் என்னும் பெயர் பெற்றுக் கொண்டா. தியாக சேவை, தாராளமான மனப்பான்மை, எளிமை, திறமை, கற்கும் தகைமை, பாடும் ஆற்றல் என்பன இவவிடம் காணப்பட்ட பண்புகளாகும். 1924ம் ஆண்டு சித்திரை 20ந் திகதி முதல் வாக்குத்தத்தம் செய்து குடும்பத்தைச் சந்தித்தபின் ஒரு மாதம் சபை தலைமை இல்லத்தில் செலவழித்தா. இலங்கைப் பணியைத் தாராள உள்ளத்துடன் ஏற்று ஆனி 5ந் திகதி மார்செயி துறைமுகத்தில் இருந்து அமசோன் கப்பலில் கொழும்பு நோக்கி பயணமானா. ஆனி 22ந் திகதி இலங்கையை வந்தடைந்ததும் யாழ்ப்பாணத்திற்கு அமைச்சலின் பெயரால் செல்ல வேண்டியதாயிற்று.

அங்கு முன்பள்ளிச் சிறுவர்களுக்குப் படிப்பித்தா. நல்ல உடல் நலத்துடனும், தியாக மனப்பான்மையுடனும் பணியாற்றினா. 1926ம் ஆண்டு சகோதரிகள் சிறுவர்களுடன் அன்புடன் பழகும் தன்மையைக் கொண்டிருந்தா. யாவராலும் விரும்பப் பட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1927ம் ஆண்டு வைகாசி 1ந் திகதி நித்திய வாக்குத்தத்தம் செய்தா. ஆவணி மாதத்தில் முன்பள்ளிப் பரீட்சையிலும் சித்தியடைந்து மறுவருடம் ஆசிரியர் சான்றிதழ் பெற்று ஓவியப் பரீட்சையிலும் சித்தி பெற்றா. அவவின் ஆர்வம், பக்தி, அமைச்சல், தியாகம் என்பன எதிர் காலத்துக்கு நல்ல நம்பிக்கையைக் கொடுத்தது.

1934ம் ஆண்டு பங்குனி மாதம் 19ந் திகதி 'இறைவன் மாத்திரமே' என்ற அழைப்புக்கு ஊக்குவிக்கப் பட்டுச் சேர்ந்தா. 1936ம் ஆண்டு தை மாதத் தொடக்கத்தில் கொழும்பு ஆசிரியபயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து படித்து 1937 இறுதியில் முதற்தரமான சான்றிதழுடன் யாழ் திரும்பினா. அங்கே யூனியர் கேம்பிறிட்ஸ்சில் படிப்பித்தா.

பம்பலப்பிட்டியில் கணிதம் படிப்பிப்பதற்கு ஓர் டிப்ளோமா ஆசிரியர் தேவைப்பட்டதால் 1940ம் ஆண்டு தை 13ந் திகதி அங்கு சென்றா. அதே ஆண்டு வைகாசி 2ந் திகதி "இறைவன் மாத்திரமே" என்ற கிளையில் ஆயத்த நிலைக்கு உயர்த்தப் பட்டா. 1947ம் ஆண்டு உடல்நலக் குறைவுடன் பம்பலப்பிட்டியாவில் ஆரம்பக் கல்வியைப் பொறுப்பேற்று கடமைகளைத் தியாகத்துடனும் நல்ல முறையில் செய்து வந்தா. 1951ம் ஆண்டு நுகேகொடை ஆரம்பக் கல்வியைப் பொறுப்பேற்றா. 1952ம் ஆண்டு மடத்துக்குத் தலைவியாகவும் நியமிக்கப்பட்டா. 1953ம் ஆண்டு தை 11ந் திகதி இளவாலை மடத்துத் தலைவிக்கு 2ஆவது உதவியாளராகவும், ஆங்கில பாடசாலைக்கு அதிபராகவும் நியமனம் பெற்றா. ஐரோப்பா சென்றுவர உத்தரவு பெற்று சித்திரை 1ந் திகதி கப்பல் பயணத்தை ஆரம்பித்தா. மீளவும் புரட்டாசி 12ந் திகதி தன் பணிக்குத் திரும்பினா. லீவு காலத்தில் அயர்லாந்துக்கும் போர்டோவுக்கும் சென்று நல்ல ஆறுதல் அடைந்தா. 1955 பங்குனியில் தாய் இறந்துவிட்டா. 1958 மார்கழியில் யாழ்ப்பாண மடத்து தலைவிக்கு 2ஆவது உதவியாளராக நியமிக்கப் பட்டா. 1962ம் ஆண்டு மீளவும் ஐரோப்பா சென்று வந்தா. 1964ம் ஆண்டு ஆனி 20ந் திகதி இளைய சகோதரிகளுக்கு உதவிப் பொறுப்பாளராக விளங்கினா. 1966ம் ஆண்டு தை 2ந் திகதி பாஷையூர் மடத்துத் தலைவியாகவும் இளைய சகோதரிகளுக்கு பொறுப்பாகவும் இருந்தா. 1967ம் ஆண்டு ஆவணி 16ந் திகதி தலவாக்கொல்லை மடத்துத் தலைவியாகவும் பொருளாளராகவும் நியமிக்கப் பட்டா. 1970ம் ஆண்டு இலங்கையை விட்டு ஐரோப்பா சென்றா. அங்கு வெதர்பி குழுவுக்கு அனுப்பப் பட்டா. 1974ம் ஆண்டு சிக்கிளிங்கோலுக்கு அனுப்பப்பட்டு 1978ம் ஆண்டு ஆனி 16ந் திகதி இறந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Mother M. Salome - Madeleine REYNAERT சலோமைத் தாயார்

பிரான்சின் எல்லைப் பகுதியில் உள்ள Wervick என்னும் இடத்தில் இவ பிறந்தா. நெதர்லாந்துப் பாறையும் உள்ள சிறிய நகரமாகிய மேற்கு Flandre Occidentale (Belgium) இல் இந்த இடம் உள்ளது. Mr. Reynaert இவவின் தந்தை Army இல் இருந்தவர். 1889ல் திருமணத்துடன் படையிலிருந்து விலகிக் குடும்பத்துக்குத் தாபரமாக இருந்தார். 2 ஆண் பிள்ளைகளும் 9 பெண் பிள்ளைகளும் கொண்டது இக்குடும்பம். Mr. Reynaert Marechal ferrant ஆக வந்து தன்னிடம் வரும் பண்ணைத் தொழிலாளிகள், இரும்பு வேலைக் கலையில் ஆர்வமுள்ளவர்களுடன் சேர்ந்து வாழ்ந்தார். தன்னுடன் வேலை செய்பவர்களுடன் சேர்ந்து 90M உயரமான கோபுரத்தை பங்குக் கோவிலுக்கென்று கட்டி மணிக்கோபுரத்துக்கு மேல் சிலுவையையும் நாட்டினார்.

5ஆவது பிள்ளையான மதலேன் 1894ம் ஆண்டு பிறந்தார். தன் பங்குக் கோவிலில் ஞானஸ்நானம் பெற்று 11 வயதில் முதல்நன்மையும் அடுத்த வருடத்தில் உறுதிபூசுதலும் பெற்றார். தன் குடும்பத்தில் கீழ்ப்படிதல், பகிர்தல், தன்னை மறந்த சேவை, தியாக மனப்பான்மை, சகோதர அன்பு முதலிய குழும வாழ்வுக்குத் தேவையானவை பற்றிக் கற்றுக் கொண்டா.

தனது ஆரம்ப படிப்பை (Sisters of Charity) பாடசாலையில் தொடங்கியதால் இரு பாஷைகளிலும் திறமை பெற்றா. பிரான்சியப் பாஷையில் உயர் படிப்பை மேற்கொண்டா. மிகவும் புத்தித்திறமை வாய்ந்தவ. மேற்படிப்புக்காக Courtrat என்னும் இடத்திற்குச் சென்று தனது சிற்றன்னை வீட்டில் வசித்து வந்தா.

தேவதாயில் மிகுந்த பக்தி கொண்டவ. இளைஞர் இயக்கங்களில் அவர்களை ஒன்று கூட்டும் திறனும், நிர்வாகத் திறனும், விளையாட்டு நாடகத்துறைகளில் மிகவும் ஆர்வம் கொண்டு அவற்றை ஆயத்தம் செய்யும் திறமைகளையும் கொண்டிருந்தா.

1914-1918ம் ஆண்டுகளில் உலக யுத்தம் ஆரம்பமானபோது இவவுக்கு வயது 20. பிரான்சிய மொழியை நன்கு அறிந்திருந்தா. கவர்ச்சியான தோற்றமுடையவ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ அன்பு செய்த ஓர் இளைஞன் இறந்தது மதலேனுக்கு மிகவும் துயரமாக இருந்தாலும் இறைவனின் திட்டத்தை அறிந்து கொள்ளச் சந்தர்ப்பம் அளித்தது.

1917ம் ஆண்டு இவ இருந்த நகரம் ஆபத்து என்றபடியால் அவ்விடத்தை விட்டு விலகி பிறசெல்சுக்கு அருகே உள்ள Assche என்னும் இடத்திற்குக் குடும்பத்துடன் வந்தார்கள். அங்கே ஆங்கிலமும் சுருக்கெழுத்து தட்டெழுத்து என்பவற்றையும் கற்றுக் கொண்டா. இவவின் திறமையைக் கண்ணுற்ற பாடசாலை அதிபர் படிப்பின் முடிவில் அந்த நிறுவனத்தில் கற்பிக்க நியமித்தார். 3 வருடங்கள் அங்கு இருந்தபின் 1921ம் ஆண்டு மீளவும் Wervick க்கு வந்தனர். அங்கு இளம் யுவதிகளுடன் சேர்ந்து ஓர் அப்போஸ்தலராகவும், வழிநடத்துபவராகவும் இருந்தா.

பிறசெல்சில் o.m.i. குருக்கள் இருந்தார்கள். Bommel என்னும் குருவானவர் இவவின் பக்தியைக் கண்ணுற்று Anvers இல் உள்ள திருக்குடும்ப கன்னியர் நடாத்தும் மாதாந்த ஞானொடுக்கத்தில் பங்கு பற்றுமாறு ஆலோசனை வழங்கினார். அந்த நாட்களில் குழந்தை யேசுவின் திரேசாளுக்குப் புனிதர் பட்டம் கொடுப்பதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள்.

பணிகளில் இவவுக்கு இருந்த கனவு உறுதியாகி அழைத்தல் குரல் கேட்டு திருக்குடும்பச் சபையில் சேர உத்தரவு கேட்டார். 1923ம் ஆண்டு பங்குனி மாதம் தன் குடும்பத்தை விட்டு 29 வயதில் போர்டோவை அடைந்தார்.இவவின் தகப்பனுக்கு நோயினால் அதிக வேலை செய்ய முடியாதிருந்தது. அவ்வேளையில் இவவின் பிரிவு மிகவும் கஷ்டமானதாக இருப்பினும் ஒரு பலியாக, உண்மையான ஒரு கிறிஸ்தவனாக இந்த பிரிவை ஏற்றுக்கொண்டார்.

மதலேன் சலோமை என்னும் பெயர் பெற்று 1924 புரட்டாசி மாதம் முதல் வார்த்தைப்பாட்டையும் இலங்கைக்குச் செல்வதற்குப் பணியையும் ஏற்றுக்கொண்டா. பெரிய பயணத்திற்கு முன் Wervick என்னும் இடத்திற்கு ஐப்பசி மாதம் குடும்பத்திற்கு பிரியாவிடை கூற வந்தபோது தந்தை அதிக வியாதியாக இருந்து இறந்துவிட்டார். இது இவவுக்கு மிகவும் கவலையையும் அதிர்ச்சியையும் கொடுத்தது. மரணச் சடங்குகளினால் இவவின் பிரியாவிடைக் காலம் நீடித்தது. ஆனால் தாய் தன் மகளிடம் உமது தலைவர்களுக்குப் பணிய வேண்டுமென வீரத்துடன் கூறி வழியனுப்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்டோ சென்று கப்பல் மூலம் இலங்கை அடைவதற்கு ஆயத்தம் மேற்கொண்டா. முதலில் யாழ்ப்பாணம் வந்து பின் இளவாலைக்கு அனுப்பப்பட்டா.

அதேவேளை அங்கு ஒரு பெரிய விடுதிக் கழகம் இயங்கியது. ஆனால் இவ தட்டச்சுப் படிப்பிக்கத்தொடங்கினா. ஆங்கில அறிவு இருந்ததால் அவவின் வேலை இலகுவாக்கப்பட்டது. கோவிற் பாட்டுக்களும் பழக்கி யாவரினதும் பாராட்டைப் பெற்றா. 18 வருட காலங்கள் இளவாலை மடத்திற்குத் தலைவியாகவும் அதைச் சார்ந்த 20 மடங்களையும் பொறுப்பேற்று நிர்வாகத்திறமையுடன் நடாத்தி வந்தா. கல்விப் பணி, ஆசிரிய கல்லூரி, தமிழ், ஆங்கிலப் பாடசாலைகள், அநாதை இல்லம், நவசந்நியாச இல்லம், அதன் ஆயத்த நிலைகள், நெசவுசாலை, விடுதிச்சாலை, ஐக்கிய பண்டகசாலை, மேல்நாட்டுச் சங்கீதம் இவை போன்ற உயிரூட்டும் பணிகளுக்குத் தலைமை தாங்கி வழி நடத்தி வந்தா.

இறுதியாக 1953ம் ஆண்டு தை மாதம் அனுராதபுரிக்கு மாற்றலாகிச் சென்று இதேவித பணிகளை அங்கும் ஆற்றி 1958 தை மாதத் தொடக்கத்தில் இலங்கையை விட்டு நீங்கி லெசொத்தே சென்றா. அங்கும் ஓர் உயர் பாடசாலையில் தட்டச்சுப் படிப்பித்து பெற்றோர்கள் மாணவர்களது பாராட்டைப் பெற்றா.

73 வயதில் 9 வருடங்கள் லெசொத்தோவில் செலவிட்ட பின்பு (Natal) நத்தால் என்னும் இடத்தில் உள்ள இந்திய மக்கள் குழுவைப் பொறுப்பேற்றா. இந்துக்களின் பழக்கவழக்கங்களை அறிந்தபடியால் அவர்களைப் புரிந்து கொள்ளவும், அவர்களின் அன்பு நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளவும் முடிந்தது.

5 வருடங்களின் பின்பு ஆபிரிக்காவில் உள்ள இந்த இடத்தைவிட்டு பெல்ஜியத்துக்கு வந்து Vieusart எனும் இடத்தில் ஏனைய வயோதிப சகோதரிகளுடன் சீறிய வேலைகளையும் செய்து கடிதத் தொடர்புகளையும் மேற்கொண்டா. இறுதி வருடத்தில் செபத்தில் செலவழித்தா.

இவ முதலில் மிஷனறி நாடுகளில் பணிபுரிந்தாலும் கடைசியாக வாழ்ந்த குழுவில் தனது பக்தி, சக்தி, வியாதியில் துணிவுடன் முன்மாதிரிகையாக இருந்து குழுவைக் கட்டியெழுப்பினா. இறைவனைச் சந்திக்க வேண்டும் என்னும் ஆர்வத்துடன் வாழ்ந்த இவர் 92 வயதில் 1986ம் ஆண்டு பங்குனி 29ந் திகதி இறைவனடி சேர்ந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sr. Mary Columbanus - Kirvan Annie

## சிஸ். மேரி கொலம்பானஸ்

அயர்லாந்தில் உள்ள கோல்வே பலினாஸ்லொக் என்னும் இடத்தில் 1905ம் ஆண்டு ஐப்பசி மாதம் 13ந் திகதி பேணாட், மேரி லெயோனாட் தம்பதிகளுக்கு மகளாக அனி பிறந்தா. பெற்றோர் பண்ணை வைத்து பராமரித்தனர். அனி மடத்தில் சேரும்போது தந்தை இறந்துவிட்டார்.

குடும்பம் ருலிமோர் ஓவாலி மாவட்டத்தில் வசிக்கும்போது அனி றபான் தேசீய பாடசாலையில் கல்வி கற்று வந்தா. அப் பாடசாலை பிறசென்ரேஷன் அருட்சகோதரிகளால் நடாத்தப் பட்டது. அனிக்கு 3 சகோதரரும் 2 சகோதரிகளும் இருந்தனர். ஒரு சகோதரி தாய்க்கு வீட்டில் உதவி செய்ய ஏனையோர் பாடசாலை சென்று வந்தனர். அனி 7 வயதில் முதல் நன்மையும் 5 வருடத்தின் பின் உறுதிபூசுதலும் பெற்றுக் கொண்டா. 17 வயது வரையும் கல்வி கற்றுக் கொண்டா. அவவின் ஆசிரியர்களும், பங்குத் தந்தையும் அனியை அருட்சகோதரி மேரி டிசேல்ஸ் இடம் ஒப்படைத்தனர். அனியிடம் நல்ல இறை அழைத்தல் இருப்பதைக் கண்டுணர்ந்து தலைவிகள் அவவை ஏற்று லீட்ஸ் என்னும் இடத்தில் 1923ம் ஆண்டு புரட்டாசி மாதம் 17ந் திகதி சேர்க்கப் பட்டா. 1924ம் ஆண்டு ஆவணி 14ந் திகதி 'றொக்வெரி'யில் ஆயத்தநிலையில் சேர்க்கப் பட்டா. திறந்த உள்ளமும், திடமான மனதும், உயர்ந்த தோற்றமும், உயரிய நோக்கும் கொண்ட அனியை ஆண்டவன் அழைத்தார். போதிய அறிவாற்றலும் இசைஞானமும் பெற்றிருந்தா.

1924ம் ஆண்டு மார்கழி மாதம் 18ந் திகதி துறவற உடை எடுத்து சிஸ். மேரி கொலம்பானஸ் என்னும் பெயர் பெற்றுக் கொண்டா. கல்வி கற்பித்தலில் சிறப்பாக இசை (music)யில் திறமை பெற்றுள்ளா. கைவேலைகளும் கற்றுக் கொண்டா. சிறுவர்களுக்கு படிப்பிப்பதில் கரிசனை கொண்டவ. தூரதேசத்திற்குச் சென்று பணி செய்வதில் ஆர்வம் கொண்டா.

1925ம் ஆண்டு மார்கழி 18ந் தீகதி தனது முதல் அர்ப்பணத்தைச் செய்து இலங்கைக்குச் செல்வதற்காக 'றொக்வெரி' என்னும் இடத்தில் காத்திருந்தா. 1926ம் ஆண்டு சித்திரை மாதம் 23ந் திகதி புறப்பட வேண்டியிருந்ததால் முதலில் வீட்டில் தன் குடும்பத்தாருடனும் பின்பு 10 நாட்கள் போர்டோவிலும் செலவழித்தா.

இலங்கையை வந்தடைந்ததும் யாழ்ப்பாணம் சென்று ஆங்கில வகுப்பில் கல்விப் பணியை ஆரம்பித்தா. எல்லாம் புதிதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் ஈடுபாட்டுடன் தன்னைக் கையளித்து மாணவர்களால் பெரிதும் விரும்பப்பட்டா.

1929ம் ஆண்டு தை மாதம் 12ந் திகதி தனது நித்திய அர்ப்பணத்தைச் செய்து கொண்டா. 1930ம் ஆண்டு ஆரம்ப வகுப்புப் பரீட்சையிலும் சித்தியடைந்தா. 1936ம் ஆண்டு மார்கழி 25ந் திகதி "இறைவன் மாத்திரம்" என்னும் நிலைக்கு ஊக்குவிக்கப்பட்டா. 1938ம் ஆண்டு இருதயப் பெலவீனத்தால் உடல்நிலை தளர்வுற்று சற்று ஓய்வெடுத்துக் கொண்டா. சுகமடைந்த பின் நேசறி வகுப்பில் கற்பித்தல், music வகுப்புக்களில் கற்பித்தல், விடுதி மாணவர்களை மேற்பார்வை செய்தல் என்னும் பணிகளை மேற்கொண்டா.

1940ம் ஆண்டு வைகாசி 31ந் திகதி "இறைவன் மாத்திரம்" என்னும் அழைப்பில் ஆரம்ப நிலையில் இருந்தா. எல்லோர்க்கும் உகந்த, உத்தம, புனிதமான துறவற சகோதரியாக, இறைபக்தியும், தியாக சிந்தையும், தாழ்மையுள்ளமும், பிரமாணிக்கமான வாழ்வும் கொண்ட சகோதரியாக வாழ்ந்து வந்தா. உடல் பெலவீனத்திலும் 'இல்லை' என்று சொல்லாது கேட்கும் யாவருக்கும் உதவி செய்வா.

1947ம் ஆண்டு பங்குனி மாதம் 19ந் திகதி பணிகளுக்குப் பொறுப்பான சகோதரி யாழ் வருகை தந்தபோது "இறைவனின் சொந்த குமாரத்திகள்" நிலைக்குச் சேர்க்கப்பட்டா. 1952ம் ஆண்டு உடல் நிலையில் தளர்ச்சி ஏற்பட்டபோது குழுவில் அமைதியுடன் இருந்து இசை வகுப்பை நடத்தினா. தியாக உள்ளத்துடன் பணி புரிந்ததால் மாணவர்களிடம் மதிப்பையும் பெற்றுக் கொண்டா. 1954ம் ஆண்டு ஐரோப்பா செல்ல உத்தரவு கிடைத்ததால் பங்குனி 30ந் திகதி கொழும்பு சென்று பயணத்தை ஆரம்பித்தா. அயர்லாந்தில் 2 மாதங்கள் குடும்பத்துடன் செலவிட்டு பின்பு போர்டோ சென்று 6 மாதத்தின் பின் புரட்டாசி 24ந் திகதி இலங்கைக்குப் புறப்பட்டா. மீண்டும் யாழில் தன் பணியைத் தொடர்ந்தா. 1955ம் ஆண்டு தை 13ந் திகதி குழுத் தலைவிக்கு 2ஆவது உதவியாளராகவும் 1958 மார்கழியில் முதலாவது உதவியாளராகவும் பணியாற்றினா. 1963ம் ஆண்டு வைகாசி - கார்த்திகை மாத காலங்களை ஐரோப்பாவில் செலவழித்தா. ஐப்பசி மாதம் போர்டோ சென்று கார்த்திகை 20ந் திகதி யாழ் திரும்பினா. 1968 மாசி 20ந் திகதி இலங்கையை விட்டு ஐரோப்பா சென்றா.

ஐரோப்பா சென்றதும் அயர்லாந்துக்குச் சென்று தன் குடும்பத்தைச் சந்தித்தா. புரட்டாசி மாதம் மாற்றம் பெற்று 'கில்கெனி'க்குச் சென்றா. 1969ம் ஆண்டு சிக்கிளிங்கோல் சென்று 1971ம் ஆண்டு ஐப்பசி 27ந் திகதி அங்கு இறந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sr. M. Therese Morgan ( Elizabeth )

## சிஸ். மே. திரேஸ்

சிஸ். திரேஸ் மோர்கன் அயர்லாந்தில் (sandy ford) சாண்டி வோட் என்னும் இடத்தில் ஜோசவ் அன்றூ, மரியா என்னும் பெற்றோருக்கு மகளாக 1906ம் ஆண்டு சித்திரை 30ந் திகதி பிறந்தா. குடும்பத்தில் 3 ஆண்களும் 2 பெண்களும் பிறந்தார்கள். எலிசபெத் 1925ம் ஆண்டு மார்கழி மாதம் 7ந் திகதி (Rock Ferry) 'றொக்வெரி' என்னும் இடத்தில் ஆயத்தக் கன்னிகையாகச் சேர்ந்து 1926ம் ஆண்டு ஆவணி 8ந் திகதி துறவற உடுப்புப் பெற்று சிஸ். மரிய திரேஸ் என்னும் பெயரையும் எடுத்துக் கொண்டா. 1927ம் ஆண்டு "றொக்வெரி" யில் ஆவணி 9ந் திகதி முதல் வாக்குத்தத்தம் செய்து கொண்டா.

1927ம் ஆண்டு புரட்டாசி 13ந் திகதி யாழ்ப்பாணத்துக்கு மிஷனறியாக அனுப்பப்பட்டா. 1929ம் ஆண்டு வென்னாப்புவாவுக்கு அனுப்பப்பட்டு 1930ம் ஆண்டு ஆவணி 18ந் திகதி பம்பலப்பிட்டியாவில் தனது நித்திய அர்ப்பணத்தைக் செய்து கொண்டா. திரும்பவும் யாழ்ப்பாணத துக்கு அனுப்பப் பட்டா. யாழ் மடத்தின் விடுதி மாணவிகளைப் பராமரித்து உருவாக்கும் பொறுப்பான பணி இவவுக்குக் கொடுக் கப்பட்டது. தனது பொறுப்பை அன்போடும் அர்ப்பணத்தோடும் கையேற்று பரிவுள்ளம் கொண்ட தாயன்போடும், மாணவிகளின் குறும்புத்தனம் குழப்படிகளைத் தாங்கும் அளவுகடந்த பொறுமை யோடும் அவர்களை உருவாக்கினா. விடுதி ஒழுங்குக் கிரமங்களுக் குப் பணிந்து வாழவும், நல்ல ஒழுக்க சீலங்களைக் கடைப்பிடிக்கவும், கிறீஸ்தவ விசுவாச வாழ்வில் உறுதிப்படுத்தவும் கண்ணும் கருத்துமாகப் பணி புரிந்தா. ஆங்கிலக் கல்வியில் தேர்ச்சி பெறவும், கல்லூரியீல் சாட்சியமுள்ள முதற்தர மாணவிகளாக விளங்கவும் பாடசாலை முடிந்தபின் விடுதியில் அவர்களின் கற்றலின் மீட்டல் வேலைகளைக் கண்காணித்து ஊக்கப்படுத்துவதிலும் ஈடுபாடு கொண்டு வாழ்ந்தா. அத்துடன் மாணவிகளின் பெற்றோருடனும் அன்பு றவுடன் தொடர்பு கொண்டு அவர்களது நிறைவான வாழ்வில் பெற்றோரின் பொறுப்புகள், பராமரிப்பையும் எடுத்துக் காட்டி சிறந்ததோர் வழிகாட்டியாக விளங்கினா.

இவரினால் பராமரிக்கப்பட்ட எத்தனையோ மாணவிகள் சிறந்த கத்தோலிக்க, இந்து மத குடும்பப் பெண்களாகவும், நன்மை செய்யும் சமூகப் பெண்களாகவும் அவர்களின் வாரிசுகளான பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப் பிள்ளைகள் சிறந்த சமுதாயத்தில் ஒளியாகத் துலங்கு கின்றனர்.

சிலர் துறவற சகோதரிகளாக இறைவனுக்குத் தங்களை அர்ப்பணித்து மக்களுக்கு பலவித பணிகளைச் செய்கிறார்கள். 20 வருடங்களுக்கு மேலாக இவவின் அயராத பணி யாழ் மடத்து விடுதியில் வாழ்ந்த அநேக மாணவிகளுக்கு வாழ்வளித்தது. விடுதிக் கழகத்தின் "ஆணி வேராக" விளங்கினா.

1954ம் ஆண்டு பங்குனி மாதம் ஐரோப்பாவுக்குச் சென்று தன் குடும்ப உறவினரைச் சந்தித்து புரட்டாசி மாதம் யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் வந்து சேர்ந்தா. 1955ம் ஆண்டு தை மாதம் 11ந் திகதி பம்பலப்பிட்டியாவுக்குச் சென்றா. 1961ம் ஆண்டு அவவின் அன்புத் தாயார் இறந்து விட்டா. அவ நுவரெலியாவிலிருந்த நேரம் இத் துக்க செய்தியைக் கேள்வியுற்று கவலைப் பட்டா. 1964ம் ஆண்டு தன் குடும்பத்தைக் சந்திக்கச் சென்றா. அவ்வேளை இங்கிலாந்து மாகாணத்தில் தனது பணியைப் பெற்றுக் கொண்டா. 'றொக்வெரி'யில் 1996ம் ஆண்டு ஆடி மாதம் 1ந் திகதி இறைபதம் அடைந்தா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sr. Jeanne Marie - Hamponera Fidela

## சிஸ். ஜீன் மாறி

ஸ்பெயினில் லெயோன் நகரில் உள்ள பெசன்டா என்னும் இடத்தில் வீலிக்ஸ் கொம்பெனறா, டோமின்கா தம்பதியருக்கு 1898ம் ஆண்டு சித்திரை மாதம் 22ந் திகதி விடெலா பிறந்தா. தந்தை மரவேலைச் சிற்பியும் விவசாயியுமாவார். 1902ம் ஆண்டு இறந்து விட்டார். தாய் டோமின்கா தன் வேலையாட்களில் நேர்மையும், தன் பிள்ளைகளை நேசிப்பவருமான ஒருவரை இரண்டாம் முறை திருமணம் செய்தார். முதற் திருமணத்தில் யூப்பிறேசியா, விடெலா, இரண்டாம் முறை பெற்றா, மெல்கோர், மக்டலின் என்ற 3 பிள்ளைகள் பிறந்தனர். மெல்கோர் 8 வயதில் இறந்து விட்டார்.

விடெலாவின் பெற்றோர் கிறீஸ்தவ கடமைகளை நன்கு அனுசரித்து வந்தனர். எனவே 8 வயதில் இவ முதல்நன்மை பெற்றா. 15 வயது வரை கிராமப் பாடசாலையில் கல்வி பயின்று வந்தா. பக்தி முயற்சிகளில் பிரமாணிக்கமாக வளர்ந்தா. தன் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து வந்த குரலொலிக்குச் செவிசாய்த்து உலக ஆசைகளுக்கு இடமளிக்காது தன் இளம் உள்ளத்தை இயேசுவுக்கு மட்டுமே கொடுக்க விரும்பினா.

தன் ஆன்ம குருவை நாடியபடியால் துறவு வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கலாம் என எண்ணி பெசன்டா கிராமத்துக்கு அண்மையில் உள்ள "இயேசுவின் ஊழியர்" சபைக்கு அனுப்ப நினைத்தார். ஆனால் விடெலாவுக்கு திருக்குடும்ப சபையில் சேரவே விருப்பம் இருந்தது. நம்பிக்கை கிளையில் இருந்து மரித்த பிறக்சீட் அருட் சகோதரியை தனது சிறிய தாய் மூலம் அறிந்திருந்தா. எனவே தனது விருப்பத்தைத் தாய்க்குத் தெரிவித்தா. தாய் விரும்பவில்லை. ஆனால் இரு குருவானவர்களின் துணையுடன் இத் தடை நீக்கப்பட்டுத் தாயின் சம்மதம் கிடைத்தது.

நவகன்னியர் இல்லம் செல்ல வயது காணாதபடியால் "வுறோமிஸ்ரா" என்னும் இடத்தில் ஆயத்தக் கன்னியர் இல்லம் சென்று 3 வருடங்கள் இருந்தா. அப்போது தினமும் திருவிருந்தில் பங்கு பற்றுவா. ஒரு வருடத்தின் பின் ஒரு சோதனையால் வீட்டிற்கு அனுப்பப்பட்டா. அமைச்சலுடனும், செபத்துடனும் அதனை மேற்கொண்டு மகிழ்ச்சியுடன் காணப்பட்டா. 18 வயது வந்ததும் ஸ்பெயினில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள 'கோட்டலெசா' நவகன்னியர் இல்லம் 1916ம் ஆண்டு ஆனி 17ந் திகதி இவவுக்குத் தன் கதவைத் திறந்தது.

விடெலா கல்விப் பகுதியில் காலடி வைத்தா. இயற்கையான உணர்ச்சியுள்ள நல்ல குணம் படைத்தவ. அமைதியைப் பேணுவா. ஒருவரையும் நோகப் படுத்த மாட்டா. அவவின் தியானநிலை, ஒழுங்குகளில் நாட்டம் என்பன ஆயத்தக் கன்னியர் இல்லத்தில் முன்மாதிரிகையாக இருந்தன. நல்ல உடல்நிலையும், கற்பிக்கும் ஆற்றலும், கணிதம், பிரான்சிய மொழி சிறிதளவு தெரிந்திருந்தா.

1917ம் ஆண்டு பங்குனி 25ந் திகதி அமலஉற்பவ மரியாளின் கிளையில் துறவற உடைபெற்று St. Jeanne de la Conception என்னும் பெயரையும் எடுத்துக் கொண்டா. ஒழுங்குகளின்படி நவகன்னியர் காலம் முடிவுற்றதும் 'ஜெற்றாவே' நவகன்னியர் இல்லத்திற்கு அனுப்பப்பட்டா. 1918ம் ஆண்டு புரட்டாசி 26ந் திகதி தனது முதல் அர்ப்பணத்தைச் செய்து கொண்டா. பின்பு 'பெனிசா'வுக்கு அனுப்பப்பட்டா. பக்தி, சேவை மனப்பான்மை, அன்பு செய்வதில் சிறந்து விளங்கினா. நல்ல துறவியாக வாழவும் படிப்பிப்பதற்குத் தகுதியாக வரவும் முயற்சி செய்தா. 1921ம் ஆண்டு புரட்டாசி 26ந் திகதி நித்திய அர்ப்பணம் செய்தா.

சிஸ். ஜான் மாறி தூரதேசப் பணிகளில் தன்னைத் தியாகம் செய்ய விரும்பியிருந்த படியால் பயணம் செய்ய இருந்த சகோதரிகளுடன் சேர்க்கப்பட்டா. 1923ம் ஆண்டு ஆடி 3ந் திகதி பெனிசாவை விட்டு வெளியேறி தலன்ஸ் தலைமை இல்லம் சென்று இலங்கைக்குச் செல்ல தன்னைத் தயார் செய்தா. பல வாரங்கள் அங்கு செலவிட்ட படியால் மகிழ்ச்சி அடைந்தா. கார்த்திகை 3ந் திகதி மார்செயி துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு 23ந் திகதி வென்னப்புவாவை அடைந்தா. அங்கு காலநிலை அவவைத் தாக்கியபடியால் 1924ம் ஆண்டு சித்திரை 16ந் திகதி பம்பலப்பிட்டி மடத்திற்குச் சென்றா. அங்கு சக்கிறிஸ்ரி வேலையுடன் தையல், தாதி வேலைக்கும் உதவி செய்தா.

1926ம் ஆண்டு தை மாதம் நடுப்பகுதியில் இலங்கைப் பணிகளைப் பார்க்க சபைத் தலைவியின் பிரதிநிதி வந்தபோது மீளவும் சிஸ். ஜான் மாறி வென்னப்புவா மடத்திற்குச் சென்று தொழிற் பள்ளியில் பணிபுரிந்தா. 1928ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்து தையல் வேலையைப் பொறுப்பேற்றா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1938ம் ஆண்டு ஆறு வருடங்களாகத் தோல். வியாதியினால் கடுமையாகத் தாக்கப்பட்டு துன்புற்றா. அத்துடன் தையல், சக்கிறிஸ்ரி வேலைகளைப் பொறுமையுடன் செய்து வந்தா. 1939ம் ஆண்டு சித்திரையில் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்குக் சென்றா. குளிர் காலநிலை அவவின் தோல் வியாதியைக் குணப்படுத்தும் என்று நம்பினார்கள். இந்த நோயை வைத்தியர்களாலும் குணப்படுத்த முடியவில்லை. சில வேளைகளில் அவவால் ஒன்றுமே செய்ய முடியாதநிலை. உடல்நலமுற்றிருக்கும்போது வைத்தியசாலை உடுப்புக் கவனிப்பா. குழுவிலும் உதவி செய்வா. 1940ம் ஆண்டு வைகாசி 19ந் திகதி "இறைவன் மாத்திரமே" என்ற நிலைக்கு ஊக்கப்படுத்தப் பட்டா. 1946ம் ஆண்டு மார்கழி 18ந் திகதி ஆயத்த நிலையினராக வந்தா. 1947ம் ஆண்டு சக்கிறிஸ்ரி வேலை, குழுவின் தையல் வேலை, நோயாளரைப் பராமரிக்கும் சகோதரிகளுக்கு உதவி இவ்வாறான பணிகளை மேற்கொண்டு துன்புறுவோருக்கும் ஆறுதலாக வாழ்ந்தா. பக்தி பற்றுதலும், திடமான குணமும் உடையவவாக மகிழ்வுடன் இருந்தா.

ஆனி 16ந் திகதி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டு அங்கும் சக்கிறிஸ்ரி வேலை, தையற் பணிகளை மேற்கொண்டா. வடபகுதிச் சூடான காலநிலை மீண்டும் அவவை பாதித்தது. அவவின் கையிலும் உடம்பிலும் 'எக்சிமா' புண்கள் தோன்றின.

யாழ் ஆயர் கியோமர் ஆண்டகை இலங்கை, இந்தியாவின் மனமாற்றத்திற்காகச் செபிக்கும்படி ஒரு துறவற சபையை ஏற்படுத்த விரும்பி RAPHAEL PERY றவ்வாயேல் பெரி சபைத் தலைவியிடம் ஒரு ஐரோப்பிய சகோதரியைத் தந்துதவும்படி கேட்டார். இளைஞரைச் செப தவ வாழ்வில் உருவாக்குவதே நோக்கமாக இருந்தது. சிஸ். ஜான் மாறி இக்கஷ்டமான, மென்மையான பணிக்குத் தெரிவு செய்யப்பட்டா. தாராள தியாக உள்ளத்துடன் இப் புதிய பணிக்குத் தன்னைக் கையளித்தா. "றோசேறியன்;" என்னும் இப்புதிய சபையில் ஸ்தாபகர் அருட்தந்தை தோமஸ் அ.ம.தி. அடிகளுடன் தன்னைப் பலியாக்கினா. எனவே தன் புதிய பணித்தளம் "தோலகட்டி" சென்று 1948ம் ஆண்டு புரட்டாசி 8ந் திகதி தேவதாயின் பாதுகாவலுடன் தன் பணியைத் தொடங்கினா.

எனினும் திருக்குடும்ப சபையுடனும் அதன் தலைவிகளுடனும் நெருக்கமான உறவுத் தொடர்புகளைக் கொண்டிருந்தா. எனவே அவவின் தாராள நிலைக்கு ஊக்கப்படுத்த 1951ம் ஆண்டு மாசி 5ந் திகதி இறைவனின் சொந்தக் குமாரத்தியாக ஏற்றுக் கொள்ளப் பட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பா சென்றுவர அனுமதி கொடுக்கப்பட்டு 1954ம் ஆண்டு பங்குனி 30ந் திகதி கொழும்பில் இருந்து புறப்பட்டா. சித்திரை 14ந் திகதி மார்செயி துறைமுகம் அடைந்து நேரே போர்டோ சென்று சபைத் தலைவியைச் சந்தித்தா. பின்பு ஸ்பெயின் சென்று வீட்டுச் சந்திப்பை மேற்கொண்டா. ஆடி மாதக் கடைசியில் போர்டோ வந்து அயர்லாந்தில் இருந்து வரும் சகோதரிகளுடன் சேர்ந்து மீளவும் புரட்டாசி 24ந் திகதி இலங்கை வந்து சேர்ந்தனர்.

சிஸ். ஜான் மாறி தன் பணியைத் தொடர்ந்து ஏற்றுக் கொண்டா. சபைத் தலைவி கிளேயர் டி ஜீசெஸ் 1955ம் ஆண்டு இலங்கைத் தரிசிப்பை மேற்கொண்டபோது அவவின் பணியை நன்கு ஊக்குவித்தா. 1961ம் ஆண்டு வைகாசி 24ந் திகதி கொழும்பு பெரிய வைத்தியசாலையில் 'அப்பெண்டிக்சைற்' சத்திர சிகிச்சைக் குட்பட்டா. 1964ம் ஆண்டு வைகாசி 16ந் திகதி போர்டோவின் தலைமை இல்லத்திற்கு வந்து பின்பு வீட்டுச் சந்திப்பு முடித்து ஆனி 4ந் திகதி ஸ்பெயினில் செலவிட்டா. தலன்சில் ஆவணி 15ந் திகதி தொடங்கி புரட்டாசி 15ந் திகதி வரையும் 30 நாள் தியான ஒடுக்கம் செய்தா. கார்த்திகை 23ந் திகதி இலங்கை திரும்பினா.

1969ம் ஆண்டு வைகாசி மாதம் ஸ்பெயினுக்குச் சென்று தனது நோயைக் குணப்படுத்தினா. 1971ம் ஆண்டு றோசேறியன் சபையில் இருந்து நீங்கினா. அங்கு சபைத் தலைவியாக இருந்தா. பொதுச் சங்கத்தில் ஒரு திருக் குடும்ப சகோதரி நியமிக்கப்பட்டு புதிய சபைத் தலைவிக்கு சிஸ். ஜான் மாறி உதவி செய்தா. அவநோயா ளியாக யாழ் மடத்திற்கு திரும்பினா. 1972ம் ஆண்டு சித்திரை மாதம் ஸ்பெயின் சென்று அங்கு உசுர்பில் என்னும் இடத்தில் வாழ்ந்து 1978ம் ஆண்டு ஐப்பசி 22ந் திகதி இறைபதம் அடைந்தா. றோசேரியன் சபைச் சகோதரிகளின் உள்ளத்தில் என்றும் நீங்காத நினைவாக வாழுகின்றா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sr. Paula Duffy - சிஸ். போலா

சிஸ். போலா டவ்வி லிவர்ப்பூலில் (Liverpool) ஜோன் டவ்வி, எம்மாஸ் ஸ்ரான்லி என்னும் பெற்றோருக்கு மகளாக 1908ம் ஆண்டு வைகாசி மாதம் 6ந் திகதி பிறந்தா. ஆங்கிலேயராகிய இக்குடும்பத்தில் 5 ஆண்களும் 4 பெண்களும் பிறந்தனர். போலா 1926ம் ஆண்டு ஐப்பசி 31ந் திகதி ஆயத்த கன்னிகையாக (Rock ferry) றொக்வெரியில் சேர்ந்தா. 1927ம் ஆண்டு ஆவணி 8ந் திகதி துறவற உடுப்புப் பெற்று 1928ம் ஆண்டு ஆவணி 9ந் திகதி முதல் வாக்குத்தத்தம் செய்து கொண்டா.

1928ம் ஆண்டு மிஷனறியாக இலங்கைக்கு அனுப்பப்பட்டுக் குருநாகலுக்குச் சென்றா. குருநாகல் வைத்தியசாலையில் தாதிப் பணி செய்வதற்கேற்ற ஆற்றல், தகைமை அவவிடம் காணப்படாதபடியால் 1929ம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டா. 1931ம் ஆண்டு ஆவணி 15ந் திகதி தனது நித்திய அர்ப்பணத்தைச் செய்து கொண்டா. 1931ம் ஆண்டு தொடங்கி 1937ம் ஆண்டு வரையும் பம்பலப்பிட்டியா, களுத்துறை, தெகிவளை என்னும் இடங்களில் பணியாற்றினா. மீண்டும் 1937ம் ஆண்டு யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டு அங்கே சகோதரிகளின் தேவைகளிலும், அசனசாலையிலும் 15 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் சேவை செய்து வந்தா. சமையல் பொருட்களை பாதுகாத்தல், உணவு தயாரிக்கும் பிள்ளைகளுக்கு உதவி செய்து பயிற்றுதல், வியாதிக்காரரைப் பராமரித்தல், பிள்ளைகளோடு உறவாடி அவர்களை தாய்க்குரிய அன்பால் வழிநடத்தல் இவ்வாறான பணிகளுக்குப் பொறுப்பாக இருந்து தனது கடமைகளைச் செய்து வந்தா. அத்துடன் ஆங்கில பாடசாலையிலும் Music இசை கற்றுக் கொடுத்தா. தமிழ் மொழியையும் நன்றாகப் பேசுவா.

1953ம் ஆண்டு அநுரதபுரிக்கு அனுப்பப்பட்டு 2 வருடங்களாக அதே பணியைச் செய்து வந்தா. 1955ம் ஆண்டு பம்பலப்பிட்டிக்குச் சென்று வீட்டுத் தரிசிப்புக்காக பங்குனி மாதம் சென்று புரட்டாசி மாதம் திரும்பி வந்தா. 1957ம் ஆண்டு தெகிவளையில் பணி புரிந்தா. 1959ம் ஆண்டு பம்பலப்பிட்டிக்கு அனுப்பப்பட்டு 1965ம் ஆண்டு சித்திரை 7ந் திகதி இலங்கையை விட்டுச் சென்று பிரித்தானிய-அயர்லாந்து மாகாணத்தில் இணைந்து கொண்டா. 2001ம் ஆண்டு ஆடி மாதம் 14ந் திகதி இறைபதம் அடைந்துள்ளா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sr. M. Evangelista MC. Evoy - Lucy

## அருட்சகோதரி எவாஞ்சலிஸ்ரா

அயர்லாந்து நாட்டில் 'றப்லா' என்னும் இடத்தில் உவில்லியம் MC Evoy மேரி கிளான்சி என்னும் பெற்றோருக்கு மகளாக 1896ம் ஆண்டு மாசி மாதம் 1ந் திகதி லூசி பிறந்தா. குடும்பத்தில் 5 ஆண்களும் 4 பெண்களும் பிறந்தனர். 1914ம் ஆண்டு புரட்டாசி மாதம் 18ந் திகதி 'றொக்வெரி'யில் ஆயத்தக் கன்னிகையாகச் சேர்ந்தா. 1915ம் ஆண்டு ஆவணி மாதம் 9ந் திகதி துறவற உடுப்புப் பெற்று 1917ம் ஆண்டு மாசி 10ந் திகதி முதல் வாக்குத்தத்தம் செய்து தன்னைத் திருக்குடும்ப சபையில் இணைத்துக் கொண்டா.

தூர நாட்டுக்குச் சென்று பணி செய்ய விரும்பியதால் 1919ம் ஆண்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டு ஐப்பசி 17ந் திகதி பம்பலப்பிட்டியாவில் தங்கி தனது ஆசிரியப்பணியை மேற்கொண்டா. 1920ம் ஆண்டு பங்குனி மாதம் 25ந் திகதி தனது நித்திய அர்ப்பணத்தைச் செய்து கொண்டா. பம்பலப்பிட்டிக் குழுவோடு தெகிவளைப் பாடசாலை இணைக்கப்பட்டிருந்தபடியால் 1931ம் ஆண்டு தெகிவளைக் குழுவில் சேர்ந்து கொண்டா. 1933ம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டா. யாழ் ஆங்கில பாடசாலையில் 1937ம் ஆண்டு வரையும் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்து 1937 – 1951 வரையும் அதிபராகப் பொறுப்பேற்றுத் திறமையுடன் சேவையாற் றினா. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்தபோது யாழ் பாட சாலையையும் கொழும்புத் தரத்துக்கு உயர்த்த விரும்பினா. இவவின் காலத்தில் தான் பெண்கள் உயர் கல்வி கற்க ஆரம்பித்திருந்தனர். ஆகவே காலத்திற்கேற்ற முன்னேற்றங்களை பாடசாலையில் ஏற்படுத் தினா. லத்தீன் மொழி ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டு Inter arts (London) வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்பட்டது. லத்தீன் ஆசிரியையாகவும் விளங்கினா.

பயிற்சிகளை மீண்டும் மீண்டும் செய்விப்பா. மாணவர் மனதில் ஆழமாகப் பதித்த பின்னரே திருப்தி அடைவா. லத்தீன் கவிதை களை வரிவரியாகத் தானே மொழிபெயர்த்து மாணவருக்கு விளக்கக் குறிப்புடன் கொடுப்பா. உடற்பயிற்சி மேலைத்தேச விளையாட்டுக்கள், சங்கீதப் போட்டிகளில் வருடா வருடம் முதலிடம் வகித்துக் கொள்ள முயற்சியெடுத்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார பாடம் கற்பிப்பதில் மிகவும் திறமை வாய்ந்தவ. முதல் நாள் கற்பித்த பாடத்தில் ஒரு சிறிய பரீட்சை நடாத்தி கொப்பிகளை ஒரு பெட்டியில் போட்டு போகுமிடமெல்லாம் கொண்டு சென்று ஒரு தடித்த பென்சிலால் திருத்துவார். வகுப்பில் கண்டிப்பின் மறுரூபம் என்ற பெயர் பெற்றவ. இவ தங்கமான இதயம் படைத்தவ என்பதை வகுப்புக்கு வெளியே அவவைச் சந்தித்தவர்கள் அறிவார்கள்.

எங்கேயாவது மாணவிகள் கூடிக் கதைக்கிறதைக் கண்டால் அடுத்த நாள் அவ்விடத்தில் சுகாதாரக் கேள்விகளை எழுதிப் போட்டு விடுவா. தனது பாடசாலையின் பாரிய பொறுப்போடு குழுச் சகோதரிகளின் பொதுநன்மைக்காகவும் பணி புரிந்தா. 1946ம் ஆண்டு குழுத் தலைவிக்கு 2ஆவது உதவியாளராக நியமிக்கப்பட்டா. மிகவும் தைரியசாலியாக உறுதியான மனத்துடன் பிரமாணிக்கமாகத் தன் பணிகளை ஆற்றினா. ஆலய வழிபாடுகளில் தன் வளமான குரலிசையால் இனிமையாகப் பாடல்களைப் பாடி இறைவனைப் போற்றி புகழ உதவி செய்தா. மேலை நாட்டு சங்கீதத்தை அன்பு செய்தா என்று கூறி விடலாம். பாட்டுக்களை இசைத்தும் சிறிய பாடல்களை இயற்றியும் பாடி புகழக் கருவியாக விளங்கினா.

1951ம் ஆண்டு சித்திரை மாதம் வீட்டுத் தரிசிப்புக்காக அயர்லாந்து சென்று ஐப்பசி மாதம் ஆபிரிக்காவில் உள்ள டேர்பனுக்கு அனுப்பப் பட்டா. 1957ம் ஆண்டு தனது சொந்த மாகாணமான பிரிட்டன்-அயர்லாந்துக்குச் சென்று சில குழுக்களுக்கு அனுப்பப்பட்டு தனது ஆற்றல்களை முன் வைத்து பணி புரிந்து வந்துள்ளா. இறுதியாக 1985ம் ஆண்டு 'சிக்கிளிங்கோலில்' கார்த்திகை மாதம் 25ந் திகதி இறைவனடி இணைந்து விட்டா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sr. Francis Xavier - Niesyto Maria

## அருட்சகோதரி பிரான்சிஸ் சேவியர்

1907ம் ஆண்டு பங்குனி 9ந் திகதி போலாந்திலுள்ள ரிச்சி கிறெஸ் பிளெஸ் என்னும் இடத்தில் பிறந்தா. அவவின் குடும்ப விபரம் தெரியவில்லை. 1931ம் ஆண்டு ஐப்பசி 1ந் திகதி பிரான்சிலுள்ள சென் பியர் தலன்ஸ் இல் தனது ஆயத்த நிலையை ஆரம்பித்தா. பிரான்சிய, ஜேர்மன் மொழி விளங்கும். சரியாகப் பேச முடியாது. 1932ம் ஆண்டு பங்குனி 25ந் திகதி பிரான்சிஸ் சேவியர் என்னும் பெயருடன் துறவற உடை பெற்றுக் கொண்டா. தூர தேசத்துப் பணிக்கு ஆயத்தம் செய்ய நவகன்னியர் இல்லம் சென்றா. சிந்திக்கும் தன்மை, கைவேலையில் ஆர்வம், நல்ல உடல்நிலை, அறிவு, மொழித் தேர்ச்சி, படிக்கும் ஆர்வம் என்பன காணப்பட்டன. 1933ம் ஆண்டு பங்குனி 25ந் தீகதி முதல் அர்ப்பணம் செய்தா. சில நாட்களை போர்டோவில் செலவழித்தா. சித்திரை 26ந் திகதி இலங்கைக்கு வந்து வென்னப்புவாவுக்கு அனுப்பப்பட்டா. வீட்டுப் பணிகளிலும், பிள்ளைகளை மேற்பார்வை செய்வதிலும் ஈடுபட்டா. காலநிலையால் துன்புற்றாலும் தன் சொந்த அனுபவத்தின் மூலம் பணிவாழ்வைப் புரிந்துகொண்டா.

1935ம் ஆண்டு தை மாதம் பாடசாலைக்கு உருவாக்கும் நோக்குடன் இளவாலைக்கு அனுப்பப்பட்டா. முதலில் ஆங்கிலத்தையும், பின் தமிழையும் படிக்க வேண்டியதாயிற்று. படிப்புடன் துறவற வாழ்க்கைக்கும் ஆயத்தம் செய்தா. 1936ம் ஆண்டு ஆவணி 17ந் திகதி பம்பலப்பிட்டியில் நித்திய அர்ப்பணம் செய்தா. 1938ம் ஆண்டு உடல்நிலையிலும் பாதிப்பு ஏற்பட்டது. தனது போலாந்து மொழியில் 8ம் வகுப்பு மட்டும் படித்திருந்தபடியால் கைவேலை, இசை நன்கு தெரியும். போடிங் பிள்ளைகளை மேற்பார்வை செய்தா.

1946ம் ஆண்டு தை மாதம் இளவாலை மடத்துக்குப் பொருளாளராக நியமனம் பெற்றா. உடல்நிலை தளர்வுற்றபோதும் கீழ்ப்படிதல் உள்ளவளாக சித்திரை 18ந் திகதி 'இறைவன் மாத்திரமே' என்னும் நிலைக்கு ஊக்குவிக்கப்பட்டா. 1947ம் ஆண்டு அடிக்கடி நோயினால் தாக்கப்பட்டா. தளர்வான நிலையிலும் குழுவில் பொருளாளர், தையல், கைவேலை, பின்னல், பெயின்ரிங், சமையல், இசை போன்ற பணிகளைச் செய்துவந்தா. 1950ம் ஆண்டு புரட்டாசி 9ந் திகதி குருநாகல் வகுப்பிற்கு மாற்றப்பட்டா. கார்த்திகையிலும் "இறைவன் மாத்திரமே" என்ற நிலைக்கு ஊக்குவிக்கப்பட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1952ம் ஆண்டு உடல்நிலை தேறியது. தியாகத்துடன் அலுவலகத்தில் திறமையுடன் பணி புரிந்தா.

1953ம் ஆண்டு தை மாதம் 19ந் திகதி இளவாலைக்கு வந்து தலைவிக்கு முதல் உதவியாளராகவும் பங்குனி 9ந் திகதி பொருளாளராகவும் இருந்தா. தை 29ந் திகதி சத்திர சிகிச்சைக்கும் உட்பட்டா. 1955ம் ஆண்டு நல்ல உடல்நிலை இல்லாவிட்டாலும் தாராள உள்ளத்துடன் பணி புரிந்து நல்ல துறவியாக விளங்கினார். நல்ல பொருளாளராகவும் முன்னின்று முயற்சிப்பவராகவும் விளங்கினார். பலர் அவவுக்கு மதிப்புக் கொடுத்தாலும் சிலர் அவவின் கடுமையான போக்கை விரும்பவில்லை. மார்கழி 3ந் திகதி 'இறைவன் மாத்திரமே' என்னும் நிலையை ஆரம்பித்தார். 1957ம் ஆண்டு வயிற்றில் சத்திர சிகிச்சை கொழும்பில் நடை பெற்றது. பின்பும் சில சத்திர சிகிச்சைக்குட்பட்டா. 1958ம் ஆண்டு வைகாசி-ஆவணியில் ஐரோப்பா சென்று போர்டோவில் சிலகாலம் செலவிட்டா. மீளவும் வந்து பண்டத்தெருப்புக்கு தலைவியாக நியமிக்கப்பட்டா. 1963 பங்குனி 8ந் திகதி அவவின் தாயார் இறந்துவிட்டா. 1964 வைகாசி 19ந் திகதி தலவாக்கொல்லை மடத்திற்கு தலைவியாக நியமிக்கப் பட்டா. வைகாசியில் றோமுக்கு யாத்திரை செய்து ஆனி மாதம் வீட்டுக்குச் சென்று ஆவணி 11ந் திகதி தலைமை இல்லம் சென்று புரட்டாசி 7ந் திகதி இலங்கைக்கு வந்தா. புரட்டாசி 14ந் திகதி கரம்பன் மடத்துத் தலைவியாக நியமிக்கப்பட்டா. 1967ம் ஆண்டு அனுரதபுரி மடத்துத் தலைவியானா. 1968 ஐப்பசி 15ந் திகதி இலங்கையை விட்டுச் சென்றா. பிரான்சில் (Lyon) லியோனில் இருந்து வலென்ஸ் சென்று வரவேற்பறையில் பணியாற்றி 1993 மாசி 3ந் திகதி இறந்தா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sr. Marie de la Visitation Whelan (Marie Josephine)

## அருட்சகோதரி விசிற்றேஷன் உவேலன்

மாறி யோசேப்பின் அயர்லாந்திலுள்ள றத்டவுனெஸ் என்னும் இடத்தில் தோமஸ் உவேலன், மாகிறெற் புற்லெர் என்னும் தம்பதிகளுக்கு மூத்த மகளாக 1905ம் ஆண்டு கார்த்திகை மாதம் 29ந் திகதி பிறந் துள்ளா. 5 ஆண்கள் 4 பெண்களைக் கொண்ட குடும்பம். பெற்றோர் நேர்மையான உழைப்பாளிகள். மாறி யோசேப்பின் நவசந்நியாசம் செல்லும்போது கடைசிப் பிள்ளைக்கு 1½ வயதாகும்.

4 வயதில் தேசியபாடசாலைக்கு அனுப்பப்பட்டு 7 வயதில் முதல் நன்மை பெறும்போது துறவற வாழ்வில் நாட்டம் கொண்டா. தினமும் திருப்பலிக்குச் சென்று ஆலயத்தைச் சுத்தம் செய்வதிலும், பீடப்பணி களில் தன் ஆசிரியருக்குத் துணை புரிந்து வந்தா. 1916ம் ஆண்டு "மாதாவின் பிள்ளைகள்;" என்னும் சபை மடத்தில் ஆரம்பிக்கப் பட்டபோது யோசேப்பின் தன் விருப்பத்தைத் தெரிவித்தபோது தலைவி இக் கருத்துக்காக "3 அருள்நிறை மரியே" சொல்லிச் செபிக்கும்படி கூறினா.

15 வயதாக இருக்கும்போது 2 துறவற சகோதரிகள் அமெரிக்காவில் இருந்து வந்து தங்கள் பணிக்கு இளம் பெண்களைச் சேர்த்தனர். இவவும் தனது பெயரைக் கொடுத்திருந்தா. எனவே அடுத்த வருடம் ஜோர்சியாவிலுள்ள சாவன்னா மடத்திற்கு போக வேண்டியிருந்தது. ஒரு மாதத்திற்கு முன்பு தாய் சம்மதிக்காதபடியால் ஏமாற்றமடைந்த யோசேப்பின் ஆன்ம குருவை நாடி அவர் உதவியைப் பெற்றுக் கொண்டா. அங்கு படிப்பு முடிந்ததும் வந்து தாய்க்கு உதவி செய்தா.

1922ம் ஆண்டு வைகாசி மாதம் அம்புறோஸ் வறன் தாயார் அழைத்தல் பணிக்காக றத்டவுனெசுக்கு வந்திருந்தா. திருக்குடும்பச் சபையைப் பற்றிக் கேள்வியுற்றதும் சபையில் சேர விரும்பினா. ஆனி மாதம் 16ந் திகதி நியூபிறிட்ஜின் மடத்தில் சேர்ந்து பின்பு ஒரு கிழமை லீட்ஸ் சென்று அங்கு 3 மாதம் தங்கி பிரென்ஸ் மொழி படித்து பிரான்சில் நவசந்நியாசம் செய்யத் தன்னைத் தயார் செய்து கொண்டா. இளமையிலும் முதிர்ச்சி பெற்றவளாகப் புத்திக் கூர்மையுடன் விளங்கினா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1923ம் ஆண்டு பங்குனி மாதம் 25ந் திகதி சிஸ். மாறி டிலா விசிற்றேஷன் என்னும் பெயருடன் துறவற உடை பெற்றுக் கொண்டா. 1924ம் ஆண்டு பங்குனி 25ந் திகதி முதல் அர்ப்பணம் செய்துள்ளா. இலங்கைப் பணிக்குத் தன்னை ஒப்புக் கொடுத்து பெற்றோரிடம் சென்று பிரியாவிடையும் பெற்றுக் கொண்டா. தலைமையகத்தில் (Generalate) சிலகாலம் செலவிட்டபின் மார்செயிக்குச் சென்று ஆனி 5ந் திகதி தனது கடற் பயணத்தை ஆரம்பித்து ஆனி 22ந் திகதி இலங்கையை வந்தடைந்து பம்பலப்பிட்டிக்குச் சென்றா. அங்கே கல்விப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது உடல் நலக் குறைவினால் பல வாரங்கள் ஓய்வெடுத்த பின் ஆர்வத்துடன் வகுப்பில் செயற்பட்டா. 1927ம் ஆண்டு ஆவணி 15ந் திகதி நித்திய அர்ப்பணம் செய்து கொண்டா. இரத்தோட்டத்தில் தடையேற்பட்டதால் உடல்நிலை பாதிக்கப்பட்டது.

1931ம் ஆண்டு முன்பள்ளிப் பரீட்சையில் சித்தி அடைந்து சான்றிதழும் பெற்றுக் கொண்டா. மருத்துவர்கள் கொழும்பு காலநிலையிலும் பார்க்க வரட்சியான காலநிலை நல்லதெனக் கூறியபடியால் 1933ம் ஆண்டு மார்கழி 30ந் திகதி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தா.

1938ம் ஆண்டு உடல்நிலையில் தளர்ச்சி, மூட்டு வலி இருப்பினும் தனது பணியைத் தொடர்ந்து செய்தா. ஆசிரியர் சான்றிதழ் கிடைத்த படியால் உயர்தர வகுப்பில் கற்பித்தா. மேற்பார்வையாளருக்கு உதவியாகவும், தாய்மை அன்புடன் பிள்ளைகளையும் கவனித்து வந்தா. நவசந்நியாசத்தில் இருந்து வெளியேறிய காலம் தொடங்கி உடல்தளர்விலும் பிள்ளைகளுடன் தாராள மனதுடன் உறவாடியதா லும் 1940ம் ஆண்டு வைகாசி 31ந் திகதி இறைவனின் சொந்தக் குமாரத்திகள் நிலைக்கு ஊக்குவிக்கப்பட்டா. 1946ம் ஆண்டு ஐப்பசி 18ந் திகதி Aspirant ஆக இணைந்து கொண்டா. தையல்வேலை, வீட்டு வேலைகளில் தன்னைக் கையளித்துச் செய்வா. ஆரம்ப வகுப்பு களில் கல்விப் பணியில் ஈடுபட்டும் ஏனைய அருட்சகோதரிகளால் மதிப்பையும் பெற்றுக் கொண்டா. ஓர் உண்மையான திருக்குடும்பத் துறவியாக வாழ விரும்பினா. 1951ம் ஆண்டு மாசி 5ந் திகதி இறைவனின் சொந்தக் குமாரத்தியாக இணைய அனுமதி பெற்றுக் கொண்டா. அவ்வருடத்தில் இலங்கைச் சகோதரிகளுடன் றோமுக்குச் சென்று தனது யூபிலியைக் கொண்டாடினா.

இத்தாலியில் ஆலயங்களைத் தரிசித்தும் போர்டோவின் தலைமை இல்லம் சென்று லூர்துபதி, மாத்தியாக் இடங்களுக்கு யாத்திரை செய்தும் தனது குடும்பத்தினருடனும் மகிழ்வாக இருந்து ஆவணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் இலங்கைக்குத் திரும்பி வந்தா. மீளவும் யாழ் வந்து தன் கல்விப் பணியை ஆர்வமுடன் செய்தா.

1952ம் ஆண்டு தை மாதம் குழுத் தலைவிக்கு 2ஆவது ஆலோசகராக நியமிக்கப்பட்டா. பரம்பரை நோயான மூட்டு வாதத்தினால் துன்புற்றா. Typing தெரிந்தபடியால் எழுத்து வேலைகளுக்கு உதவியாகவும், பிள்ளைகளையும் நன்கு பராமரித்து அன்புடன் வழி நடத்தினா. ஆரம்ப பாடசாலையின் அதிபராகவும், பிள்ளைகளுக்கு மேற்பார்வையாளரா கவும் தியாகத்துடன் தனது பணிகளை நிறைவேற்றினா. 1953ம் ஆண்டு ஐப்பசி 24ந் திகதி முதலாவது ஆலோசகராக நியமிக்கப் பட்டா. 1955ம் ஆண்டு தை மாதம் 13ந் திகதி யாழ் மடத்துக்குத் தலைவியாக நியமிக்கப்பட்டா. அவவின் குடலில் எரிவும் சிறுகட்டி களும் காணப்பட்டபடியால் கொழும்பு வைத்தியசாலைக்குச் சென்று எல்லாம் அகற்றப்பட்டு சுகத்துடன் வந்து சேர்ந்தா. மீளவும் குழுவுக்கு வரும்போது குருக்களும் சகோதரிகளும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

1957ம் ஆண்டு ஆடி மாதம் 2 - 14 வரை தலன்சில் நடைபெற்ற பொதுச்சங்கத்துக்கு ஒரு பிரதிநிதியாக தெரியப்பட்டபடியால் உதவித் தலைமைத் தாயாருடனும் வேறு 6 சகோதரிகளுடனும் கொழும்பில் இருந்து புறப்பட்டுச் சென்றா. பொதுச்சங்கம் முடிவுபெற்றதும் மார்த் தியாக், லூர்துபதிக்கும் சென்று தன் வயோதிபத் தாயாருடன் பலகாலம் செலவிட்டு ஐப்பசி 13ந் திகதி இலங்கையை வந்தடைந்தா. 1958ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தை மாதம் 13ந் திகதி தனது 3 வருடத் தலைமைப் பதவியை முடித்து மேலும் 6 மாதங்கள் நீடித்தா.

1958ம் ஆண்டு புரட்டாசி 12ந் திகதி முதலாவது யாழ் மாகாணத் தலைவியாக நியமிக்கப்பட்டா. அந்த மாதத்திலேயே அவவின் அருமைத் தாயார் இறந்துவிட்டா. 1961ம் ஆண்டு 2ம் முறையாக பதவி புதுப்பிக்கப்பட்டது. 1963ம் ஆண்டு ஆடி மாதம் பொதுச்சங்கத்தில் பங்குபற்றினா. வைகாசி மாதம் 15ந் திகதி இங்கிலாந்துக்கு வந்து வீட்டுத் தரிசிப்பு முடித்துக் கொண்டு தலன்ஸ் தலைமை இல்லம் சென்றா. மீளவும் ஆடி 24ந் திகதி வீட்டுக்குச் சென்று தனது சந்திப்பை முடித்து புரட்டாசி மாதக் கடைசியில் யாழ் திரும்பினா.

1964ம் ஆண்டு புரட்டாசி 12ந் திகதி 3ம் முறையாகப் பதவி புதுப் பிக்கப்பட்டது. 1965ம் ஆண்டு வைகாசி 1ம் திகதி தலைமைச் சகோதரிகளின் உருவாக்கக் கருத்தரங்கில் பங்குபற்ற தலைமை இல்லம் சென்றா. La Solitude இல் தன் வருடாந்த தியானத்தைச் செய்தா. Motte என்னும் சாமிநாதர் குரு இத்தியானத்தை நெறிப்படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினார். 6 வாரங்கள் தன் குடும்பத்தில் செலவழித்தபின் ஆடி மாதம் 19ந் திகதி யாழ் வரும்போது றோமுக்குச் சென்று அங்கு 3 நாட்கள் தங்கி அங்கு மாணவிகளான 2 தமிழ் அருட்சகோதரிகளைச் சந்தித்தா.

1967ம் ஆண்டு தை மாதம் 5ந் திகதி கொழும்பு மாகாண இல்லத்துக்குத் தலைவியாக நியமிக்கப்பட்டு புரட்டாசி 12ந் திகதி திரும்பவும் யாழ் மாகாணத்துக்கு 4ம் முறையாக நியமிக்கப்பட்டா. 1968ம் ஆண்டு றோமில் நடைபெற்ற அமர்விலும் பங்குபற்றி 1969ம் ஆண்டு நடைபெற்ற பொதுச்சங்கத்திலும் பங்குபற்றி ஆவணி மாதம் யாழ் திரும்பினா. 1970ம் ஆண்டு அவவின் மாகாணத்தலைவிப் பதவி நிறைவெய்தியதும் யாழ்மடத்துக்கு மாசி மாதம் தலைவியாக நியமிக்கப்பட்டா. 1973ம் ஆண்டு சித்திரை மாதம் இலங்கையை விட்டு நீங்கி ஐரோப்பா சென்று கிளேன் (Clane)க்கு அனுப்பப்பட்டா. 1974ம் ஆண்டு இல்லத்தின் தலைவியாக நியமிக்கப்பட்டு 1977ம் ஆண்டு 2ம் முறையாகவும் புதுப்பிக்கப்பட்டது. 1997ம் ஆண்டு சித்திரையில் சிறுவர்களுக்கு ஓர் ஆசிரியை தேவைப்பட்டதால் Clane சிறுவர் இல்லம் சென்றா. 1998 பங்குனி மாதம் 27ந் திகதி இறைவனடி சேர்ந்தா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sr. Marie Eustelle - Hankenne Bertha

# அருட்சகோதரி மாறி யுஸ்ரல்

பெல்ஜியத்தில் உள்ள அவின் நகரில் நீக்கிலஸ் கன்கென், அல்பேட்டின்ஸ் ரீல் தம்பதியர்க்கு மகளாக 1892ம் ஆண்டு வைகாசி 1ம் திகதி பிறந்தா. தகப்பன் குதிரைச் சவாரி செய்யும் வீரர். 1906ம் ஆண்டு மார்கழி 2ந் திகதி தாய் இறந்து விட்டா. இவ நவகன்னியர் இல்லம் செல்லும்போது 4 ஆண்கள், 3 பெண்களுமாக வீட்டில் 7 பிள்ளைகள் இருந்தனர். மூவர் சிறு வயதில் இறந்து விட்டனர். ஓர் இளம் பெண் தனது 17ஆவது வயதில் இறந்துவிட்டா. லம்பேட் என்பவர் அமலியைத் திருமணம் செய்து ஆமன்ட் என்னும் ஒரு பிள்ளை. அவர் நத்தாலியை மணம் முடித்து தியோப்பில் என்னும் ஒரு பெண் குழந்தை உண்டு. இவர் கொங்கோவில் வேலை செய்தார். கமில் ஆசிரியராக லீயெஜ் இல் வேலை செய்தார். யூலி டெசிறே என்பவரை மணம் முடித்து 2 பிள்ளைகள். ஒருவர் பல்மீரில் ஆமன்டுடன் வசித்தார்.

போர்த்தா பிறந்த அதே மாதத்தில் திருமுழுக்கு பெற்று சில வருடங்களின் பின்பு 1903 வைகாசி 3ந் திகதி முதல்நன்மையும் 1905 வைகாசி 22ந் திகதி பூர்டின் ஆலயத்தில் உறுதிப்பூசுதலும் பெற்றா. 6 வயது தொடங்கி 14 வயது வரையும் எமது அமலஉற்பவச் சபைச் சகோதரிகளின் வகுப்புக்குச் சென்று வந்தா. பின்பு தாயுடன் இருந்து அவ இறந்தபின் லீயெஜ் சென்று தன் சகோதரன் லம்பேட் உடன் ஒரு தொழில் தேடும் நோக்குடன் வாழ்ந்து வந்தா.

அவ்வேளையில் போர்த்தாவுக்கு 17 வயது, துறவற வாழ்வில் விருப்பம் கொண்டா. சிறு வயதில் இருந்தே அதைப் பற்றிச் சிந்தித்தா. அவவின் சகோதரன் கிறிஸ்தவக் கடமைகளை அனுசரியாது, சகோதரியின் பக்திப் போக்கையும் கவனிக்கவில்லை. அவர் ஆலயம் செல்வதும் குறைவு. தன் அழைத்தலுக்கு ஆபத்தின்றி ஓர் இடம் கிடைக்க திரு இருதயநாதரிடம் நவநாட் தொடங்கி செபித்து வந்தா. நவநாட்கள் முடியுமுன் அவவின் சகோதரி ஆன் மொல்வோட் என்னும் இடத்தில் இருந்து அவவை அழைத்தா. பெண் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு பக்தியுள்ள ஓர் இளம் பெண் தேவைப்பட்டது. எனவே திரு இருதயத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு போர்த்தா அங்கு பணிபுரிந்தாலும் சில வேளைகளில் தடை ஏற்பட்டது. இவற்றையெல்லாம் செபத்தில் மேற்கொண்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குழுவில் சேர விருப்பம் ஏற்பட்டாலும் தந்தை அதற்கு உடன்படவில்லை. சில காலத்தின்பின் தந்தையின் அனுமதி கிடைத்ததால் 1912ம் ஆண்டு ஆனி 25ந் திகதி ஆயத்தக் கன்னியர் இல்லம் சென்றா. படிப்பித்தல் பகுதியில் சேர்ந்தா. அவவின் அனுபவங்கள் தெளிந்த அறிவு, முன்னுணர்வால் அறிந்து கொள்ளல் போன்றன இவவின் அழைத்தல் வாழ்வுக்கு உதவியாக இருந்தன. கைவேலை, தையல், படிக்க ஆர்வம், பிள்ளைகளில் விருப்பம் இருந்தபடியால் அமலஉற்பவக் கிளையில் சேர்ந்து நன்மை செய்ய விரும்பினா.

1913ம் ஆண்டு பங்குனி மாதம் 25ந் திகதி துறவற உடை எடுத்து சிஸ். மேரி யூஸ்ரல் என்னும் பெயரைப் பெற்றுக் கொண்டா. நவகன்னியர் காலம் முடிந்ததும் 1914ம் ஆண்டு சித்திரை மாதம் கென்சேயில் உள்ள பேய்ன் பணித் தளத்துக்கு அனுப்பப்பட்டா. 1915ம் ஆண்டு புரட்டாசி 8ந் திகதி முதல் அர்ப்பணம் செய்துகொண்டா. முதலாம் உலகப் போரில் ஜேர்மனியரால் நாடு பிடிக்கப்பட்டபோது 1916, 1917, 1918ம் ஆண்டுகளில் தன் அர்ப்பணத்தைப் புதுப்பித்துக் கொண்டா. யுத்தம் முடிவுற்றதும் தனது உருவாக்கத்திலும் முன்னேற்றமடைந்து படிப்பித்தலிலும் ஆர்வம் காட்டி நித்திய அர்ப்பணம் செய்ய விருப்பத்தைக் கேட்டா. ஆவணி மாதத்தில் போர்டோவுக்கு அழைக்கப்பட்டு அர்ப்பணத்திற்கு ஆயத்தம் செய்து 1919ம் ஆண்டு ஐப்பசி 1ந் திகதி நித்திய அர்ப்பணம் செய்துகொண்டா.

1920ம் ஆண்டு ஆடி மாதக் கடைசியில் பெல்ஜியத்தை விட்டு வெளியேறி இலங்கை செல்லும் குழுவுடன் சேர்ந்து கொண்டா. ஐப்பசி 13ந் திகதி பொதுச்சங்கத்திற்கு வந்த சகோதரியுடன் சேர்ந்து மார்செயி துறைமுகம் வழியே புறப்பட்டா. கார்த்திகைத் தொடக்கத்தில் இலங்கையை அடைந்து பம்பலப்பிட்டி குழுவில் சேர்ந்தா. அங்கு ஆங்கிலம் படித்து போடிங் பிள்ளைகளுக்கும் உதவிசெய்ய முயற்சித்தா. 1923ம் ஆண்டு பிள்ளைகளுக்கு பிரான்சிய மொழி படிப்பித்து, தையல், தாதி வேலைகளிலும் உதவி செய்தா. 1923 மார்கழி இறுதியில் வென்னப்புவா மடம் சென்று தலைவிக்கு உதவி செய்தும், ஆசிரிய கல்லூரியையும் மேற்பார்வை செய்தா. 1931ம் ஆண்டு ஆவணி 19ந் திகதி நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்ந்தா. 1935ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்து வருடாந்த தியானத்தில் பங்குபற்றினா. தொழிலகத்தில் ஒரு சகோதரி மட்டும் பணி புரிந்ததால் அங்கு தன் பணியைத் தொடர்ந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1938ம் ஆண்டு நல்ல உடல்நிலையுடன் அமலமரித் தியாகிகளின் தொழிலகத்தின் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டா. தியாக உள்ளத்துடன் வேலைத் திறமையும் கொண்டு வெளிப் பிள்ளைகளுடன் நல்ல உறவையும் வளர்த்துக் கொண்டா. 1947ம் ஆண்டும் இதே மனப்பான்மையுடன் பணி புரிந்தா. 1950ம் ஆண்டு சித்திரை மாதம் புனித யூபிலி ஆண்டு றோமாபுரிப் பயணத்தில் இவவுக்கும் உத்தரவு கிடைத்தது. எனவே யூபிலியைக் கொண்டாடி பாப்புவின் ஆசீர்வாதமும் பெற்றுக் கொண்டா. இத்தாலியில் உள்ள பல ஆலயங்களையும் சந்தித்தா. சில வாரங்கள் போர்டோ தலன்ஸ் தலைமை இல்லத்தில் செலவிட்டு வீட்டுத் தரிசிப்பையும் மேற்கொண்டா. 1950ம் ஆண்டு வைகாசி 24ந் திகதி சபைத் தலைவியின் ஆலோசகர் "இறைவன் மாத்திரம்" என்ற ஆயத்தநிலையில் சேர அனுமதி கொடுத்தா. 1952ம் ஆண்டு ஒரு சத்திர சிகிச்சைக்குட்பட்டா. உடல்நலம் குணமாகியதும் கைவேலை செய்வதிலும், தொழிலகப் பொறுப்பை மேற்பார்வை செய்தும், சமையல், பொருளாளரின் கணக்குகளை ஒழுங்காகச் செய்தல், நோயாளர்களைக் கவனித்தல், வெளியாட்களுடன் தொடர்பு இவ்வாறான பணிகளில் விவேகத்துடன் செயற்பட்டா. தலைவிக்கு 2ஆவது உதவியாளராகவும், பொருளாளராகவும் பணியாற்றினா. 1953ம் ஆண்டு பங்குனி 9ந் திகதி குருநாகல் வகுப்புக்கு அனுப்பப்பட்டா. 2ஆவது உதவியாளராக இருந்தா. 1955ம் ஆண்டு 63 வயது நிறைவடைந்தும் உடல்நலமற்ற நிலையிலும் நல்ல மனதுடன் தன் வேலைகளைச் செய்தா. இறைவனின் சொந்தக் குமாரத்தியாக வர விரும்பினா. ஆனால் அந்தநிலை அருளப்படவில்லை. 1956ம் ஆண்டு நவகன்னியர் இல்லம் பண்டத்தெருப்புக்கு அனுப்பப்பட்டு சித்திரை 25ந் திகதி தலைவிக்கு முதலாவது உதவியாளராகவும் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டா. 1958ம் ஆண்டு இளவாலையில் முதலாவது உதவியாளராகவும், பொருளாளராகவும் நியமிக்கப்பட்டா. 1960ம் ஆண்டு கண் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. 1962ம் ஆண்டு ஐரோப்பாவுக்குச் சென்று போர்டோவையும் தலைமை இல்லத்தையும் சந்தித்தா. 1964ம் ஆண்டு 2ஆவது கண் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. 1966ம் ஆண்டு தை 15ந் திகதி மட்டக்கலை மடத்துத் தலைவியும் பொருளாளரா கவும் நியமிக்கப்பட்டா. 1975ம் ஆண்டு நுகேகொடைக்கு அனுப்பப் பட்டு திரும்பி யாழ்ப்பாணம் வந்து 1985ம் ஆண்டு வைகாசி 29ந் திகதி யாழ் மடத்தில் இறந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sr. Anthony Joseph Mulvihill - Catherine
# அருட்சகோதரி அந்தோனி யோசவ்

அயர்லாந்து நாட்டிலுள்ள (Athea Co Limerich) அத்தியா கௌண்டி லிமெறிச் என்னும் இடத்தில் எட்வேட் முல்விகில், எலென் கென்னா என்னும் பெற்றோருக்கு மகளாக 1915ம் ஆண்டு ஆவணி மாதம் 15ந் திகதி பிறந்தா. குடும்பத்தில் 5 ஆண் பிள்ளைகளும் 4 பெண் பிள்ளைகளும் இருந்தார்கள். தந்தை மரவேலை செய்பவராகவும் தாய் ஆசிரியையாகவும் இருந்து குடும்பத்தை சீர்சிறப்பாக நடாத்தி வந்தனர்.

1934ம் ஆண்டு தை மாதம் 29ந் திகதி திருக்குடும்பச் சபையில் அழைப்பைப் பெற்று ஆயத்த கன்னிகையாக இணைந்து கொண்டு அதே ஆண்டு ஆவணி 8ந் திகதி துறவற உடுப்புப் பெற்று சிஸ். அந்தோனி ஜோசேப் என்னும் பெயரையும் பெற்றுக் கொண்டா. 1935ம் ஆண்டு ஆவணி 9ந் திகதி முதல் வாக்குத்தத்தம் செய்து அதே ஆண்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டு பம்பலப்பிட்டிக்கு வந்து சேர்ந்தா. 1938ம் ஆண்டு புரட்டாசி மாதம் 2ந் திகதி இறுதி அர்ப்பணத்தை செய்யும் வரையும் ஆசிரியப் பணியில் ஈடுபட்டா. 1940ம் ஆண்டு யாழ் திருக்குடும்ப ஆங்கில பாடசாலையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய பின் திரும்பவும் கொழும்புக்குச் சென்று லண்டன் பல்கலைக்கழக சிறப்புக் கலைமானிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டா. 1956ம் ஆண்டு தனது குடும்ப உறவினர்களைச் சந்திப்பதற்காக ஐரோப்பாவுக்குச் சென்று வந்தா. 1958ம் ஆண்டு களுத்துறைப் பாடசாலையில் அதிபராகப் பதவியேற்று திறம்படத் தன் பொறுப்பை அர்ப்பணத்துடன் நிறைவேற்றி வந்தா. திரும்பவும் 1966ம் ஆண்டு தனது குடும்ப உறவினர்களைச் சந்திக்க ஐரோப்பாவுக்குச் சென்று வந்தா. தொடர்ந்து தனது பணியை ஆற்றியபின் 1971ம் ஆண்டு இலங்கையை விட்டு நீங்கி தனது சொந்த பிரிட்டன் அயர்லாந்து மாகாணத்துக்குச் சென்று சில இடங்களில் ஆசிரிய பணியாற்றிய பின் குழுத்தலைவியாகவும் இருந்து பணிபுரிந்தா. பங்குப் பணிகளில் ஈடுபட்டா. சகோதரிகளை வரவேற்று உபசரிப்பதிலும் கரிசனையுடன் நடந்து கொள்வா. வாசிப்பதில் மிகவும் ஆர்வம். செபிக்கும் பெண்ணாக விளங்கினா. தேவதாயின் மட்டில் மிகவும் பக்தி கொண்டு செபமாலை செபிப்பதன் வழியாக அவவை அன்பு செய்தா. இறுதி நாட்களில் அவ நோய்வாய்ப்பட்டு அமைதியாகத் தன் காலத்தை நிறைவு செய்து 2005ம் ஆண்டு மார்கழி 15ந் திகதி 'றொக்வெரி"யில் இறைவனடி சேர்ந்துள்ளா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sr. Josephine Tynan
# அருட்சகோதரி யோசேப்பின்

அயர்லாந்து நாட்டின் Montrath.Co.Leix மொன்ற்றாத் கௌன்டி லெயிக்ஸ் என்னும் இடத்தில் தோமஸ் ரைனன் Thomas Tynan, ஜேன் கொன்றோய் Jane Conroy என்னும் பெற்றோருக்கு மகளாக வைகாசி மாதம் 20ந் திகதி 1920ம் ஆண்டு பிறந்தார். 5 ஆண் பிள்ளைகள் 5 பெண் பிள்ளைகள் கொண்ட பெரிய குடும்பமாக வாழ்ந்து வந்தனர். திருக்குடும்பச் சபையில் அழைப்பைப் பெற்று றொக்வெரி என்னும் இடத்தில் 1938ம் ஆண்டு தை மாதம் 21ந் திகதி ஆயத்த கன்னிகையாகச் சேர்ந்து அதே ஆண்டு ஆவணி 8ந்திகதி நவகன்னிகையாகத் துறவற உடுப்புப் பெற்றுக் கொண்டா. தனது முதல் வாக்குறுதியை 1939ம் ஆண்டு ஆவணி 9ந் திகதி நிறைவேற்றி இறுதி அர்ப்பணத்தை 1943ம் ஆண்டு தை மாதம் 8ந் திகதி இலங்கையில் செய்து கொண்டா.

வெளி நாடுகளில் பணியாற்ற விரும்பி 1939ம் ஆண்டு ஐப்பசி மாதம் 6ந் திகதி இலங்கையில் பம்பலப்பிட்டியாவுக்கு வந்து சேர்ந்தா. அங்கிருந்து லண்டன் பல்கலைக்கழகத்தின் சிறப்புக் கலைமானி பட்டத்தை (B.A) முதல் பிரிவில் பெற்று 1943ம் ஆண்டு ஆனி 22ந் திகதி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தா. 1946ம் ஆண்டு திருக்குடும்ப ஆங்கில பாடசாலையில் ஆசிரியராக இணைந்து தனது சிறப்பான கல்விச் சேவையை ஆற்றத் தொடங்கினா. நிமிர்ந்த நடையும், நேர் கொண்ட பார்வையும், மலர்ந்த முகமும், நீல விழிகளும் அனைவரையும் ஈர்க்கும் தன்மை கொண்டது. ஆங்கிலம், இலக்கியம், வரலாறு என்னும் விருப்ப பாடங்களை சிறப்பாகக் கற்பித்து வந்தா. ஆங்கில இலக்கியத்தை அவவிடம் இருந்து ரசிக்க மாணவிகள் கற்றுக் கொண்டார்கள். கற்பிக்கும்போது இலக்கிய கதாபாத்திரங்கள் உயிர் பெற்று எழுவதுபோல் உணர்வார்கள். வரலாற்று நிகழ்வுகள் மாணவிகள் கண்முன் மீண்டும் காட்சி அளிக்கும்.

வகுப்பறையில் அவவின் மகிழ்ச்சியூட்டும் பிரசன்னமும் கற்பித்தல் வழிமுறைகளும் மாணவிகளுக்கு உற்சாகமூட்டும். அவர்களும் அவவை மேன்மையாக மதித்துப் பணிந்து வாழ்ந்தார்கள். ஆளுமையும் ஆர்வமும் விடாமுயற்சியும் ஒழுங்குக்கட்டுப்பாடும் அர்ப்பணமும் நிறைந்த ஆசிரியையாக விளங்கினா. ஏனைய ஆசிரியர்களுக்கும் முன்னோடியாகவும் எடுத்துக்காட்டாகவும் துலங்கினா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராகப் பணியாற்றிய Mother Evangelist ஓய்வு பெறும் காலம் நிறைவுற்றபோது Mother Josephine அதிபராகப் பதவி ஏற்றுக் கொண்டா. நீண்ட கால அனுபவமும் பல்வேறு தகைமைகளும் இவவின் பணிக்கு அணிசெய்தன. இவவின் நிர்வாகக் காலம் ஒளி மயமானது. புத்தித் திறமையும் நவீன கருத்துக்களை உள்வாங்கி ஆர்வத்தோடு வழிநடத்தினா. தகுதியானவற்றை உறுதியான உள்ளத்தோடு நிலை பெயராது நடாத்தும் ஆளுமையைக் கொண்டவ. ஐரோப்பிய மிஷனறி சகோதரிகளுள் இவ மாத்திரம் தான் இலங்கைப் பிரசையாக உரிமை பெற்றுள்ளவ. இவவின் காலத்தில் மாணவிகளுக்கு இல்ல முறை (House) ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலை வாத்தியக்குழு, பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைய பாடசாலைக் கீதமும் அவவால் இயற்றப்பட்டது.

தனது பதவி காரணமாகக் கண்டிப்பைக் காட்ட வேண்டியிருந்தாலும் உள்ளத்தில் அன்பும், புரிந்துணர்வும் கொண்டு விளங்கினா. மேற்கத் திய இசை, நடனம் என்பவற்றை மாணவர்களுக்கு பயிற்றுவதில் இயல்பான திறமை வாய்ந்தவ. 1959ம் ஆண்டு தனது குடும்ப உறவினர்களைச் சந்திக்க ஐரோப்பாவுக்குச் சென்று நாடு திரும்பினா. 1965ம் ஆண்டு குழுத் தலைவிக்கும் 2ஆவது உதவியாளராக இருந்து சகோதரிகளுக்கும் அன்புடன் பணிபுரிந்தா. குழுவிலும் ஒரு முன்மாதிரியான சகோதரியாக வாழ்ந்து எல்லோரின் நன்மதிப்பையும் பெற்றா. 1967ம் ஆண்டு திரும்பவும் தன் குடும்பத்தைச் சந்திக்க ஐரோப்பா சென்று யாழ் திரும்பினா. அவ யாழ்ப்பாணத்தை நேசித்தா என்று சொல்லலாம். பாடசாலையையும் பணியையும் நேசித்து தனது வாழ்வை அர்ப்பணித்தா. ஆனால் கல்வி மொழியில் ஏற்பட்ட பிரச் சினையால் இலங்கையில் பணிபுரிய முடியாதபடியால் இறைசித் தத்தை ஏற்று தன் சொந்த நாட்டுக்கு 1971ம் ஆண்டு சென்று விட்டா. யாழ் மடத்துப் பாடசாலை வரலாற்றில் இறுதியாக அதிபராக பணி புரிந்து சென்ற ஐரோப்பிய சகோதரி Mother Josephine என்ற மறக்க முடியாத நிலையை விட்டுச் சென்றா. 28 வருடங்களாக ஆசிரியராக, அதிபராக பணியாற்றியுள்ளார். பிரிட்டன் அயர்லாந்து மாகாணத்தில் 30 வருடங்களாகப் பல குழுக்களிலும் பணியாற்றி நோய்வாய்ப்பட்டு 2001ம் ஆண்டு ஆடி 30ந் திகதி (Portlooise) போட்லோயிஸ் என்னும் இடத்தில் இறைவனடி சேர்ந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MOTHER MARY OF JESUS - DICKINSON MARY

## மேரி ஒவ் ஜீசெஸ் தாயார்

மேரி இங்கிலாந்தில் உள்ள Whulton Chorley (Lancashire,) வூல்ற்றன் சோர்லி லங்காசியர் என்னும் இடத்தில் 1879ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11ந் திகதி William Dickinson க்கும் Jane Kenon க்கும் மகளாகப் பிறந்தார். பெற்றோர் ஆசிரியர்கள். 2 மகன்மாரில் ஒருவர் Wilhain இந்தியாவில் ஆங்கிலப்படையில் லெப்டினன்ட் ஆகவும் Wilfred Franciscan, Buckingham மாகாணத்திலும் பணிபுரிந்தனர். இவர்களின் பின் 7 பிள்ளைகள். Lea, Hilda, Genevieve, Grace, Laurence, Agnes, and Dorothy. டொறத்தி பிறந்தவுடன் இறந்து விட்டா. மேரி மடத்துக்கு செல்லும்போது தாய் பங்குப் பாடசாலையில் படிப்பித்தா.

மேரி சிறுவயதில் தாயின் பாடசாலையில் கல்வி பயின்றா. இடம் மாற்றப்பட்டு லண்டனுக்கு வந்தார்கள். Faithful companions of Jesus என்னும் துறவிகளால் முதல்நன்மைக்கு ஆயத்தம் செய்து 1889 பங்குனி 17ல் முதல்நன்மையும், அடுத்த வருடத்தில் உறுதிப்பூசுதலும் பெற்றா. மேரியும் படிப்பித்தலில் ஆர்வம் காட்டினா. தன்னை நன்கு உருவாக்குவதன் மூலம் மற்றவர்களையும் உருவாக்க முயன்றா. 13 வயதில் மீளவும் வசிப்பிடங்களில் மாற்றம். இதனால் Forest Gate இல் உள்ள Ursulines சகோதரிகளுடன் இரு வருடங்கள் தங்கி இருந்தா. சிறிது காலத்தின் பின் அவவின் சகோதரன் Wilfred Franciscans சபையில் சேர்ந்தார். மேரிக்கும் அழைத்தலில் ஆர்வம் இருந்தது. இறைவனுக்குத் தன்னை முழுமையாக கையளித்து சிறுவர்களைப் படிப்பிப்பதன் மூலம் அவர்களின் உள்ளத்தில் இடம் பிடிக்கத் தீர்மானித்தா.

அவவின் கனவு நனவாகக் காலம் பிடித்தது. Ursulines சகோதரிகளிடம் இருந்து வெளியேறி லண்டனில் உள்ள Linchouse கத்தோலிக்க பாடசாலையில் உதவி ஆசிரியராகப் பணி புரிந்தா. சமய சம்பந்தமாகவும், அரசியலைச் சார்ந்தும் ஒவ்வொரு வருடமும் பரீட்சைகள் நடைபெறும்.

22 வயதில் Sacred Heart கல்லூரியில் Perfection அடையும் நோக்குடன் சேர்ந்தார். அங்கு இருக்கும்போது அழைத்தலில் மிகவும் ஆர்வம் பிறந்தது. அவ அங்கிருந்து தியான ஒடுக்கம் செய்து நன்கு செபித்து பாவசங்கீர்த்தனம் செய்து குருவின் வார்த்தையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா எதிர்ப்புக்களில் இருந்தும் விடுதலை பெற்றா. இறைவனுக்கு மட்டுமே உரியவளானாள்.

தற்போது எந்தச் சபையில் சேர்வது என்ற தயக்கம். Sacred Heart சபையில் ஆர்வம் இல்லை. திருக்குடும்பச் சபையில் சேர விரும்பினா. தன் தாய் பணி புரிந்த Woodford இல் தியான ஒடுக்கம் செய்தா. Mother M. de Sales Carland உடன் தொடர்பு இருந்த படியால் அவவுடன் தொடர்பு கொண்டு Conception கிளையில் தன்னைச் சேர்க்க இறைவன் விரும்புகிறார் என அறிந்து நன்றி கூறினா. எனினும் குடும்பத்தில் அனுமதி பெற காலம் தாழ்த்தியது. Sacred Heart இல் இரு வருடங்கள் படிப்பித்த போதும் Forest Gate இல் வகுப்பாசிரியராக இருந்தபோதும் மாலையில் தாய், சகோதரிகளுடன் வாழ்ந்து வந்திருக்கிறா.

1905ல் சபைத் தலைவியின் நல்ல பதில் கிடைத்தது. இங்கிலாந்தை விட்டு வெளியேறி பெல்ஜியத்தில் Postulant ஆகச் சேர்வதற்கு 1905 ஆவணி 15ந் திகதி Huy என்னும் இடத்தை அடைந்தா. மேரியின் பக்தி தியான சபைக்கு உரியதாகும். (Contemplative) ஆனால் இலகுவாக நல்ல பிதாவின் பிள்ளைகளுக்குரிய அமைச் சலும், கடமைகளை நிறைவேற்றுதலும் என்று தன்னைக் கைய ளித்தா. நல்ல புத்தியும், எல்லாருடனும் உறவு கொண்டு பழகும் தன்மையுடையவ. இவவின் வலது கை உருமாறி ஒருவிரல் தான் பூரணமான நிலையில் இருந்தது. நேர்மையான போக்குடையவ. எழுத்தாற்றல் கொண்டவ. அழகிய தையல் வேலைப்பாடுகளைச் செய்யும் ஆற்றல் படைத்தவ. உடல்நிலை பலவீனமானது.

1905 வைகாசி 20ந் திகதி Immaculate Conception கிளையில் உடுப்பெடுத்து Sr. Marie de Jesus எனப் பெயர் பெற்றா. 1907 ஆனி மாதம் Rams Gate சென்று அங்கு நவசந்நியாச அனுபவம் பெற்று கார்த்திகை 21ந் திகதி போர்டோவின் தலைமை இல்லத்தில் முதல் வார்த்தைப்பாடு கொடுத்தா. அங்கு சில கிழமைகள் செலவிட்டபின் இலங்கை செல்வதற்குத் தயாரானார். தனியாகவே மார்சேயி துறை முகம் அடைந்து 1908 தை 5ந் திகதி பயணத்தை மேற்கொண்டா.

15 நாள்கள் தாமதமாகி துறைமுகத்தை வந்தடைந்ததும் Diploma பெற்ற ஆசிரியர் ஒருவர் தேவைப்பட்டதால் கொழும்பில் உள்ள மடத்திற்கு உடனே சென்றா. ஒப்படைக்கப்பட்ட பணியை ஆர்வத் துடன் செய்தாலும் இளம் சகோதரியாக இருந்தபடியால் பணி பளு வாக இருந்தது. பிள்ளைகளின் புத்தியைத் தீட்டியதுடன் அவர்களின் உள்ளத்திலும் பக்தியை ஊட்ட விழைந்தார். உயர்தர மாணவர்கள் இதை உணர்ந்ததும் அதனால் இவ மகிழ்ச்சியடைந்தா. காலநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினால் ஏற்பட்ட களைப்பு மாணவர்களின் சித்திக்காக எடுத்த முயற்சி இவவின் உடல்நிலையைத் தாக்கியது. எனினும் தியாக சேவை சகோதரிகளையும் சிறுவர்களையும் கவர்ந்தது.

1911ம் ஆண்டு தை மாதம் சபையின் தலைவியின் பிரதிநிதியாக Mother D'Abadie இலங்கையைத் தரிசிக்க வருகை தரவிருந்தா. இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மேரி ஒவ் ஜீசெஸ் தனது வாக்குத்தத்தத்தைப் புதுப்பிக்க விரும்பினா. இதற்காக பங்குனி 19ம் திகதி யாழ்ப்பாணத்தில் தன் ஆரம்ப ஞானொடுக்கத்தைச் செய்து தன்னை முற்றாக இறைவனுக்குக் கையளிக்க விரும்பினா. தியானம் (Visitation Bour) தாயாரால் நடாத்தப்பட்டது.

ஆங்கில பாடசாலையின் தலைமைப் பதவியை வகுத்து தன் பணியை ஆற்றினா. உடல்நிலையில் சரியான சுகதேகியாக இருக்கவில்லை. வகுப்பாசிரியராகவும் விளங்கினா. இவவின் தியாக வாழ்வின் அடையாளமாக 1922 மாசி 8ந் திகதி "இறைவன் மாத்திரம்;" என்னும் கிளையில் aspirant ஆகச் சேர்க்கப்பட்டா. இவ இலங்கைக்குச் செல்லும்போது தன் தாயைச் சந்திக்க முடியாததால் ஐரோப்பாவுக்கு வரச்செய்ய ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து 1924ம் ஆண்டு Spring time தலைவிகள் இவவை அழைத்தனர்.

சித்திரை நடுப்பகுதியில் போர்டோ வந்து உடனே லண்டன் சென்று அங்கு அவவின் தாய் இருதய வியாதியினால் வருந்துவதைக் கண்டா. சிலகாலம் அவர்களுடன் செலவிட்ட பின் இவவின் உடல் நிலையும் குன்றியதால் தனது இடத்தில் Woodford என்னும் இடத்தில் சிலநாட்களைச் செலவழித்தா. பின்பு Rock Ferry க்குச் சென்று லண்டனுக்கு வந்தா.

புரட்டாசியில் போர்டோ வந்து ஒரு மாதம் செலவிட்ட பின் லூர்து யாத்திரை செய்து ஐப்பசி 24ந் திகதி கொழும்புக்கு வந்து சேர்ந்தா. உடல்நிலை தேறி இருந்தபடியால் தலைவிகள் அவவை கொழும்பில் 2nd Assistant ஆக்க விரும்பினர். இவ நல்ல ஒரு துறவியாக வாழ்ந்தபடியால் 1929 புரட்டாசி 15ந் திகதி வருடாந்த ஞானொடுக்கத்தின்போது இறைவனின் சொந்தக் குமாரத்திகள் கிளையில் சேர்க்கப்பட்டா. 1930ம் ஆண்டு அதிக வேலையால் களைப்பு ஏற்பட்டபடியால் உடலநிலை குன்றி ஓய்வெடுத்தா.

1933 மார்கழி. மாதம் 27ந் திகதி பம்பலப்பிட்டியாவில் 1st Assistant ஆக நியமிக்கப்பட்டா. Mother Loyala 1932 வைகாசி – புரட்டாசி மாத காலங்களில் ஓய்வெடுக்க ஐரோப்பா சென்றபோது களுத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுமத்தின் பொறுப்பை ஏற்று தியாக மனப்போக்குடன் சேவையாற்றினா. இது சகோதரிகளால் பாராட்டப்பட்டது.

1937ம் ஆண்டு சித்திரை 23ல் குருநாகல் குழுவுக்கும் பொறுப்பு கிடைத்தது. 29 வருடங்கள் பம்பலப்பிட்டியில் பணி செய்தபின் அங்கு விட்டு வருவது கஷ்டமாயினும் தாராள உள்ளத்துடன் ஏற்றுக் கொண்டா. நல்ல உள்ளம் தியாக சிந்தையுடன் சேவை புரிந்தாலும் வேலை இலகுவானதல்ல. பணி 2ம் முறையும் புதுப்பிக் கப்பட்டது. பொறுமை, அன்பு, ஒப்புரவு ஆகிய நல்ல பண்புகளைக் கொண்டிருந்ததால் Conception சகோதரிகளுக்கு உதவியாகவும் தங்களுக்குள் ஒற்றுமை உடையவர்களாகவும் வாழ உதவி செய்தா.

1943ல் மூன்றாம் முறையும் புதுப்பிக்கப்பட்டது. பணி இவவின் காலத்தில் மலர்ந்தது. சகோதரிகள் முன்னைய காலங்களிலும் பார்க்க மிகவும் ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். இவவின் கை முறிந்ததால் 1945 புரட்டாசியில் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று மார்கழி 12ந் திகதி சுகமடைந்து குழுவுக்குத் திரும்பினா. றோமின் அனுமதியுடன் 1946 சித்திரை 23ந் திகதி 4ம் முறையாக இவவின் பணிக்காலம் புதுப்பிக்கப்பட்டது.

1949 தை 12ந் திகதி யாழ்ப்பாணப் பணிகளின் தலைமைத்துவம் இவவுக்கு கொடுக்கப்பட்டது. Mother Sebastian O'Brien 1st Assistant ஆகவும்; Sr. Evangelist Mc Evoy 2nd Assistant ஆகவும் இருந்தார்கள்.

அவவின் பெருந்தன்மை பொறுமை இவற்றால் எல்லோர் உள்ளங் களையும் கவர்ந்தா. சகோதரிகளும் மகிழ்வுடன் வாழ்ந்தனர். உடல் நலம் குறைவு தான்.

1952 தை 12ந் திகதி 2வது முறையாகப் புதுப்பிக்கப்பட்டது. ஞாபகமறதி இருந்தது. ஒருவரும் இல்லாதபடியால் Sr. Visitation Whelan வகுப்புக்களை நடத்தினா.

1955 தை 12ல் தலைவிகளால் எல்லாப் பதவிகளில் இருந்தும் நீக்கப்பட்டா. உடல்நிலை சுகம் குறைந்தபடியால் சகோதரிகள் தங்களுடன் வைத்துக் கொள்ள விரும்பினர். குழுவுக்கு அவ ஒரு செல்வமாக இருந்தா. குழுவுக்கும் பல ஆசிகள் அருளப்பட்டன.

சித்திரை மாதம் வெப்பமான காலம். யாழ்நகரில் இருந்து நுவரெலியாவுக்குச் சென்று பல மாதங்கள் அங்கு தங்கி லீவு எடுத்துக் கொண்டா. மலை நாட்டின் உயரம் காரணமாக உடல்நிலை தாக்கத்துக்குள்ளானது. யாழ் திரும்பி வராது பம்பலப்பிட்டிக்குச்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று அங்கு தன் பொன் யூபிலியைக் (50) கொண்டாடினா. அங்கு பல வருடங்கள் போடிங்கில் பணியாற்றியுள்ளா.

உடல்நிலை தேறி வந்ததால் மீளவும் யாழ் செல்ல அனுமதி கிடைத்தது. அங்கும் யூபிலி கொண்டாடத் தீர்மானித்தாலும் சகோதரிகள் நுவரெலியாவுக்கு லீவுக்குச் சென்று விட்டனர். இம்முறை மேரி ஒவ் ஜீசெஸ் தாயார் இரண்டாவது துணை சகோதரி Sr. M.Clare mc Cormick இன்னும் சில சகோதரிகளுடன் இருந்தா. ஆவணி 15ந் திகதி உண்மையான யூபிலி தினத்தில் சிறிய அளவில் யூபிலி கொண்டாடப்பட்டது.

மறுநாள் மிகவும் களைப்பாக இருந்தா. 17ந் திகதி திருப்பலியில் பங்குபற்றி திருவிருந்தும் உட்கொண்டா. காலையில் ஒரு தாக்கம். இதை உணர்ந்து (மருத்துவர் துணையால்) பாவசங்கீர்த்தனம் செய்யக் கேட்டார். பின்பு கதைக்கவும் முடியவில்லை. 18ந் திகதி காலையில் கடைசி அருட்சாதனங்களைப் பெற்று முழு அறிவுடன் இருந்தா.

1955 ஆவணி 19,20ல் முடிவு தெரிந்தது. சில சகோதரிகள் படுக்கை யைச் சூழவிருந்து கடைசிச் செபங்களைக் செபித்தனர். காலை 3 மணியளவில் இறைபதம் சென்றார். மதர் மேரி ஒவ் ஜீசெஸ் தன் ஆன்மாவை இறைவனிடம் கையளித்தார். அதிகம் துன்பங்களை அனுபவிக்காது நல்ல மரணம் அடைந்தார். வாழ்வுபோல் மரணம். இலங்கைத் திருக்குடும்பம் நல்லதோர் குழுத்தலைவியை நல்ல துறவியை இழந்துவிட்டது. அதேவேளையில் நல்லதோர் துறவி இறைவனிடம் சென்றுவிட்டா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Sr. Marie Aloysius - Connolly Jane
## அருட்சகோதரி மாறி அலோசியஸ்

1881ம் ஆண்டு பங்குனி 28ந் திகதி எட்வேட் கொனோலிக்கும் Edovard Connolly ஆன் மெலடிக்கும் Anne Meleady மகளாக அயர்லாந்தில் Carlow கார்லோ என்னும் இடத்தில் பிறந்தா. 3 ஆண்களும் 5 பெண்களையும் கொண்ட பெரிய குடும்பம். பிறசென்ரேஷன் அருட்சகோதரிகளின் மடத்தில் கல்வி கற்றுக் கொண்டா. 10 வயதில் முதல் நன்மையும் 6 வருடங்கள் சென்றபின் உறுதிப்பூசுதலும் பெற்றுக் கொண்டா. 15 வயதில் துறவு வாழ்வை விரும்பி பாவசங்கீர்த்தனம் செய்யும் குருவானவரிடம் விருப்பத்தைத் தெரிவித்தா. குருவானவர் அவவை ஊக்கப்படுத்தி நியூபிறிஜ்சில் உள்ள மடத்துத் தலைவியைச் சந்திக்கும்படி கூறினார். பின்பு பிரதேசத் தலைவி மூலம் 1902ம் ஆண்டு மார்கழி 9ந் திகதி றொக்வெரியில் உள்ள நவகன்னியர் இல்லம் சென்றா. ஆயத்த நிலையில் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் வீட்டிற்குச் சென்றா. அங்கு சுகமடைந்து மீளவும் திருக்குடும்ப சபையில் சேர்ந்து கொள்ள விரும்பினா. ஏற்பார்களோ எனப் பயந்தபோது மீளவும் ஆன்மகுரு மூலம் 1907ம் ஆண்டு மார்கழி மாதம் அனுமதி பெற்று 1908 சித்திரை 28ந் திகதி றொக்வெரி நவகன்னியர் இல்லம் சென்றடைந்தா.

நல்ல பக்தி வைராக்கியம், அன்புள்ளம், தன் சக சகோதரிகளுடன் அன்புறவு, பணியாற்றும் திறமையைக் கொண்டு ஆயத்த நிலையில் வாழ்ந்தா. 1909ம் ஆண்டு மாசி 8ந் திகதி துறவற உடை பெற்று மாறி அலோசியஸ் என்னும் பெயர் பெற்றுக் கொண்டா. நவகன்னியர் காலம் முடிந்ததும் 'அன்வேர்ஸ்' நவகன்னியர் இல்லம் சென்று (1910 மாசி 15) இலங்கைப் பணிக்குச் செல்லத் தன்னை ஆயத்தம் செய்தா. 1910 ஆவணி 15ந் திகதி முதல் அர்ப்பணத்தைச் செய்து கொண்டா. சில நாட்களின்பின் இலங்கைக்குச் செல்லும் நாள் குறிக்கப்பட்டது. எனவே அயர்லாந்து சென்று குடும்பத்திடம் விடைபெற்று சில நாட்கள் போர்டோவில் செலவிட்டு நல்ல தாயாருடன் வால்கார்லொஸ் இல் (Valcarlos) ஒரு வாரம் தங்கி லூர்து கெபிக்கும் சென்று 1910 ஐப்பசி 9ந் திகதி மார்சேயி துறைமுகம் வழியாக வேறு 4 சகோதரிகள், சபைத்தலைவியின் பிரதிநிதி (Marie d' Abadie) அபாடித் தாயாருடன் இலங்கை வந்தடைந்தனர். சிஸ். அலோசியஸ் பம்பலப்பிட்டியில் ஆங்கில வகுப்பு நடாத்திய சகோதரி மேரி டி ஜீசெஸ் அவர்களுக்குத் துணையாக இருந்தா. (Sr. M.de Jesus Dickinson) 1913ம் ஆண்டு ஆவணி 15ந் திகதி நித்திய அர்ப்பணம் செய்தா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1915ம் ஆண்டு தனது வகுப்போடு இன்னொரு சகோதரியின் வகுப்புக்கும் உதவி செய்தா. தனது இருதய நோயுடனும் 5ம் வகுப்புப் படிப்பித்தா. மாணவிகளுடன் சற்றுக் கண்டிப்பாக நடந்து கொள்ளுவா. 1930ம் ஆண்டு வரையும் பம்பலப்பிட்டியாவில் பணியாற்றினா. 1930ம் ஆண்டு தை 14ந் திகதி அநுரதபுரிக்கு மாற்றப்பட்டா. ஆங்கில வகுப்பை பொறுப்பேற்றுக் கொண்டா. இப்பணிக்கு ஆயத்தம் செய்யாத படியால் கஷ்டத்தை உணர்ந்தாலும் தாராள உள்ளத்துடன் பணியாற்றினா.

1932ம் ஆண்டு மடத்துத் தலைவிக்கு மாற்றம் என்றபடியால் வருகை தந்த புதிய தலைவி ஆங்கில வகுப்பை பொறுப்பேற்றுக் கொண்டா. பம்பலப்பிட்டிக் குழுவுடன் இணைந்திருந்த தெகிவளை மடத்துப் பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்றா. 1935ம் ஆண்டு முதல் மாதங்களில் ஐரோப்பா சென்று தன் குடும்பத்தைச் சந்தித்தா. வைகாசி 23ந் திகதி போர்டோவுக்கு வந்து அயர்லாந்து செல்லுமுன் லூர்து கெபிக்கும் சென்றா. ஆனி 5ந் திகதி இங்கிலாந்து சென்று 11ந் திகதி தனது வீட்டுக்குச் சென்று ஆடி 13ந் திகதிவரை அங்கிருந்தா. 24-31ந் திகதி வரை தியானம் செய்தா. ஒரு மாதம் போர்டோவில் தங்கினா. இந்த நாட்களும் மார்த்தியாக் யாத்திரையும் சபைக் குடும்பத்திலும் தலைவிகளிலும் பற்றுதலை ஏற்படுத்தியது.


புரட்டாசி 6ந் திகதி மீளவும் இலங்கைக்கு வந்து இறைமகிமைக்காகவும் ஆன்மாக்களின் மீட்புக்காகவும் பணிபுரிந்தா. இவ இல்லாத காலத்தில் தெகிவளை, பம்பலப்பிட்டியில் இருந்து பிரிக்கப்பட்டது. புதியகுழு ஆரம்பிக்கப்பட்டது. 1935 புரட்டாசி இறுதி நாட்களில் அங்கு சென்று ஒரு புதிய வகுப்பை பொறுப்பேற்றுக் கொண்டா. 1937ம் ஆண்டு ஐப்பசி 17 களுத்துறைக்கு அனுப்பப்பட்டு 2ம் வகுப்பைப் படிப்பித்தா. அடுத்த வருடம் நல்ல உடல்நிலையோடு சிறிய வகுப்பில் படிப்பித்துக் கொண்டு பெயின்ரிங் வேலையும் செய்தா. 1947ம் ஆண்டு சக்கிறிஸ்ரி வேலையுடன் மறைக்கல்வி, புதுநன்மைக்கும் ஆயத்தம் செய்தா. 1952ம் ஆண்டு நல்ல உடல்நிலையுடனும் புத்திக்கூர்மையுடனும் மறைக்கல்வி, சக்கிறிஸ்ரி வேலை, மரியாயின் சிறுவர் சபையையும் நடத்தினா.

1952 புரட்டாசி 11ந் திகதி அனுரதபுரிக்கு மாற்றப்பட்டு இயலாத நிலையில் 1953 பங்குனி 7ந் திகதி யாழ் அனுப்பப்பட்டா. சிஸ். போலா டவ்வியின் Sr. Paula Duffy இடத்தை எடுத்துப் பணிசெய்தா. 1958ம் ஆண்டு யாழ் மாகாணத்தைச் சேர்ந்து 1970ம் ஆண்டு வரையும் யாழ் மடத்தில் இளைப்பாற்றி எடுத்து வந்தா. 1970ம் ஆண்டு மார்கழி 4ந் திகதி யாழ்ப்பாணத்தில் இறந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கனவுகளின் நிஜங்கள்

அது ஓர் இளவேனிற்காலம்
பியன்வெனு எண்ணமதில்
அழகிய குடும்பத்தின்
எதிர்கால மலர்களின் பூப்பு

சலசல என சங்கீதம் இசைக்க
குளிர்ந்த நீரோடை அருகில்
விருட்சமாய் ஓர் அழகியமரம்
தென்றல்பட்டு இலைகள் அசைந்தாட
பூத்துக்குலுங்கின பல வண்ணத்தில்

ரீங்காரம் இசைத்து வரும் வண்டுகள்
பூவில் மதிமயங்கி
ஓடிப்போகும் மேகத்தோடு
போட்டியொன்று போட்டு
ஒய்யாரமாய் கனி சுவைக்க
ஆனந்தமாய் வந்தமர்ந்த
பறவைகளின் கூட்டம்
ஒரேகுரலில் பாடின
இறைவனுக்கே மகிமை

நினைவுகளே கொஞ்சம் நில்லுங்கள்
நிகழ்கால நிஜங்களை
இறந்தகாலம் சுவையாய் சொல்கிறது
செவிகளால் கேட்டு
இதயத்தால் சாற்றிடுவீர்
இறைவனுக்கே மகிமை
மரியாள் மூலமாக
சூசை மூலமாக

JS Graphics, Jaffna. 0777 446973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org